நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

**தொடரும் தணிக்கை**
**329 வது நாள்**

இதழ்- 170 ஏப்ரல் 29 - மே 12, 1999 விலை 10.00

## ''தமிழீழமே எங்கள் இலக்கு!''

-புளொட் மாணிக்கதாசன்




## பாடப்புத்தகங்களில் இனவாத மோசடி!



## முஸ்லிம் அகதிகள்: நிவாரணத்திற்குத் தடை



நன்றி - நூலகத்திட்டம்



## புலி வேட்டையில் கழகம்!

யாழ்ப்பாணத்தில் கழகத்-தோழர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. பத்மநாதன் ஜய்ஸ் (18), தியாகராசா சுரேஷ் குமார் (19) ஆகிய இளைஞர்கள் தாம் புளொட்டில் இணைய விரும்புவதாக கழகத் தோழர்களிடம் தெரிவித்துள்ளனர். அவர்களும் இவர்களிருவரையும் 24.03.99 அன்று முகாமுக்கு வருமாறு கூறியுள்ளனர். முகாமுக்குச் சென்ற இவர்களை கண்களைக் கட்டிவிட்டு கழகத் தோழர்கள் தாக்கியுள்ளனர். பின்னர் 25.03.99 அன்று இவர்களைக்கொண்டு சென்று 512வது படைப்பிரிவில் ஒபப்டைத்துள்ளனர். பின்னர் படையினரும் இவர்களுக்கு நல்ல சாப்பாடு கொடுத்துள்ளனர். தற்போது இவர்களிருவரும் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்க-ளிருவரும் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என கழகத்தோழர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நெல்லியடியைச் சேர்ந்த வல்லி பாலகிருஷ்ணன் என்பவரைத் தமது முகாமுக்கு வருமாறு கழகத் தோழர்கள் உத்தரவிட்டுள்ளனர். இவர் முகாமுக்குச் செல்லாததால் கழகத் தோழர்கள் பாலகிருஷ்ணனைத் தேடி அவரது வீட்டிற்குச் சென்றுள்ளனர். அங்கு அவர் இல்லை. எனவே அவரது மனைவி சாந்தாவையும் மகளையும் தாக்கி விட்டு வேலிக்கும் நெருப்பு வைத்துள்ளனர். இவர் புலிகளுக்குச் சாப்பாடு கொடுக்கிறார் என்பது புளொட்டின் குற்றச்சாட்டு. அத்துடன் தாம் புலிகளைத் தேடுவதாகவும் கழகத் தோழர்கள் நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்-துள்ளனர். யாழ்ப்பாணத்தில் புலிகளைத் தேடும் பணியை இராணுவம் அல்லவா மேற்கொண்டுள்ளது என அதிகாரிகள் சிலர் கூறுகின்றனர். அத்துடன் நெல்லியடி கரவெட்டிப்பகுதி மக்கள் புளொட் இயக்-கத்தினரால் தமக்கு அச்சுறுத்தல் உள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். சொக்கன் என்ற புளொட் உறுப்பினரே புலி வேட்டையில் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. நெல்லியடி பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியும் அவர்கள் இராணுவத்தின் அனுமதியுடனேயே செயல்-பட்டு வருகின்றனர். இதனால் தன்னால் ஒன்றும் செய்யமுடியாமல் உள்ளதாகக் கூறியுள்ளார்.

## அது புலிப்படகல்ல!

கடந்த 4.4.99 அன்று முல்லைத்தீவுக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இவர்கள் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அதிவேகமாக வந்த விசைப்படகொன்று இவர்களது படகைச் சுற்றி வந்து தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் இவர்கள் தமது உயிரைக்காப்பதற்காகக் கடலில் குதித்து சுமார் ஆறரை மணிநேரம் நீந்திக்கரை சேர்ந்துள்ளனர். தமது படகு தீயில் சங்கமமாகியதைத் தாம் நேரில் பார்த்ததாக இவர்கள் கூறியுள்ளனர். வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவில் வசித்து வரும் மு. பாலசுந்தரம், சிவாசந்திரன், பாலன் பெரியவன் ஆகியோரே நீந்திக்கரை சேர்ந்தவர்கள். தீயில் சங்கமமாகிய தமது மீன்பிடி உபகரணங்களின் பெறுமதி இரண்டரை இலட்சம் ரூபா என இவர்கள் கூறியுள்ளனர். மற்றைய சம்பவத்தில் மாமுனையைச் சேர்ந்த அன்ரன், டயஸ் ஆகியோர் சுமார் 15 மணி நேரம் நீந்திக்கரை சேர்ந்துள்ளனர். இவ்விரு சம்பவங்களும் ஒரே நாளிலேயே இடம் பெற்றுள்ளன.

## கச்சேரிக் கப்பல்!

யாழ். செயலக ஊழியர்களுக்கு கொழும்பிலிருந்து அப்பிள் தருவிக்கப்பட்டு ஒரு அப்பிள் பத்து ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. இதேபோல் அண்மையில் யாழ்ப்பாணத்தில் மிளகாய்த்தட்டுப்பாடு ஏற்பட்டபோதும் செயலக ஊழியர்கள் கொழும்பிலிருந்து மிளகாய் தருவித்து தம்மிடையே பகிர்ந்து கொண்டனர். இதற்கெல்லாம் கப்பல் கட்டணம் யார் கொடுக்கிறார்கள். கோழி மேச்சாலும் கோறணமேந்திலை மெய்க்க-வேணும் என்று முன்னோர்கள் சொல்வார்கள். கோழி மேய்ச்சாலும் கச்சேரியில் மேய்க்க வேண்டும்.

## இவர்கள் கைது!

கடந்த 5.4.99 அன்று இருபாலை ஆனந்தபுரத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் திருச்செல்வம் (34) என்பவர் அதிகாலை வேளை படையினரால் கைது செய்யப்-பட்டுள்ளார். இவரைக் கைது செய்த படையினர் கைது செய்த இடத்தில் வைத்தே மிக மோசமாகத் தாக்கியுள்ளனர். இவரது நகங்களைப்பிடித்து இழுத்துச் சித்திரவதை செய்ததாகவும் இவரது மனைவி சத்தமிட்டுக்குழறவே படையினர் இவரைத் தம்முடன் கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை 3.4.99 அன்றும் இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி யோகராசா (24), அழகேந்திரன் சுரேந்திரன் (19), ஐய்யாத்துரை சேகர் (28) ஆகியோர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 13.3.99 அன்று மேஜர் சிலம்பரசன் என்ற விடுதலைப்புலி உறுப்பினர் கிரனைட்டை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண்ட சம்பவத்துடன் தொடர்பு படுத்தியே படையினர் இவர்களைக் கைது செய்துள்ளனர்

## தலை வெட்டும் தம்பிரான்கள்!

வவுனியா செக்கடிப்புலவு என்ற இடத்தைச் சேர்ந்த இராசையா இரஞ்சன் (ரமேஷ்) (20) என்ற இளைஞர் புளொட் இயக்கத்திலிருந்து வடமராட்சி கற்கோவ-ளம் பகுதியில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து குடும்பம் நடாத்தி வந்தார். இவர் கட்சிக்கட்டுப்பாட்டை மீறினார் என்ற காரணத்திற்காக புளொட் இயக்கத்தினர் இவரைக் கைது செய்து கொண்டு சென்று இவரது கணுக்காலை வெட்டி சித்திரவதை செய்துள்ளனர். இதனால் இவர் இங்கிருந்து தப்பியோடி ஈ.பி.டி.பி.யிடம் சரணடைந்துள்ளார். ஈ.பி.டி.பியினர் இவரை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் போய் சரணடையுமாறு கூறவே இவர் மனித உரிமை ஆணைக்குழுவின் உதவியுடன் பொலிசில் சரணடைந்துள்ளார். இதேவேளை தலைவெட்டும் தம்பிரான்கள் வடமராட்சிப் பகுதியில் மேலும் நான்கு பேரைத்தேடி வருகின்றனர் என்கிறது யாழ்ப்பாணத் தகவல் ஒன்று.

## கள்ளர்களே முறைப்பாடு செய்த கதை!

"வவுனியா நிலைமைகள் எப்படி?" - இது கொழும்பு வரும் வன்னி நண்பர்கள், உறவினர்களிடம் பலரும் கேட்கும் வினா?

"அவ்வப்போது இயக்கமோதல், இடையில் அகப்பட்டால் தியாகியும் இல்லாமல் துரோகியும் இல்லாமல் மரணம். இரகசியமாக கேட்பதைக் கொடுத்து விட்டால் சரி. பகிரங்க வரி அறவீடு இல்லை. மக்கள் மத்தியில் அச்சம் இருக்கவே செய்கிறது. எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்" இது என் பதில்..

நண்பன் விட்ட பாடாக இல்லை. "பள்ளிக்கூட அனுமதியில் மோசமான நிதி அறவீடு இடம்பெறுகிறதாமே" என்றான்!

நல்ல கேள்வி என்னுடைய தலையில். நான் அறிந்த சில உண்மைகளை அவனுக்குச் சொல்லாமல் இருக்க முடியுமா? என்னுடைய அப்பாவும் பொலிஸ் அதிகாரி. அதுவும் வவுனியாவில் தான். அவரிரும்கூட ஒரு முறைப்பாடு வந்ததாக அம்மாவுக்குச் சொன்ன போது எனக்கு கேட்டது. அது என்ன முறைப்பாடு என்ற ஆவல், அவனிடமும், உங்களிடமும் இருக்கவே செய்யும்.

அது எங்களுடைய அம்மா முன்னர் கற்பித்த முன்னணி வாய்ந்த (தேசிய) மகளிர் மகா வித்தியாலயத்தில் காணாமல் போன பற்றுச்சீட்டுப் புத்தகங்கள். நிதி ஆவணங்கள் பற்றிய முறைப்பாடு என்றேன்.'

நண்பனோ விட்டபாடாய் இல்லை! என்னைத் துருவினான், ஒரு பொலிஸ் அதிகாரியின் மகன் அரைகுறை விளக்கம் கொடுக்க எனக்கும் விருப்பம் இல்லை.

நடந்தது இதுதான். வன்னியில் இருந்து ஒவ்வொரு இராணுவ நடவடிக்கைகளுக்கும் மாறி மாறி இடம்பெயர்ந்து எவ்வளவோ கஷ்டங்கள்பட்டு கால் நடையாக வவுனியா வரும் எமது தமிழ் சனத்துக்கு எங்குபோனாலும் படிப்பு படிப்பு என்பது தான் எங்கட சனத்தினுடைய . மூச்சு.

பிறகென்ன வவுனியா வந்த சனம் ஒரு நாள் பாஸ் எடுத்து வீடு எடுத்து அல்லது அகதிமுகாமில் இருந்து அலை அலை எண்டு அலைந்து பிள்ளையளை நல்ல பாடசாலையில் விடவேண்டும் என்ற ஆசை. அதிபரிடம் மூன்று நாலு நாளாய் அலைந்ததில் இடமில்லை. வேறு பாடசாலைகளில் கேட்டுப்பாருங்கோ. எங்களுக்கு சேர்க்க வேண்டாம் என்று D.E ஓடர் என ஆரம்பத்தில் கல்லுரி அதிபர் மறுப்பார். இவரது மறுப்பு காசு அறவிடத்தான் என்பது வவுனியாவில் நீண்ட நாளைய சனத்துக்குத் தெரியும். பெற்றோர் விடாப்பிடியாக இடம் கேட்டால் ஆயிரங்களில் இறை ஆசிகளுக்கு இறைக்க வேண்டும். பிறகென்ன அடுத்த நாள் இறை ஆசிகளுடன் வகுப்புகளில் சேர அனுமதி கிடைக்கும். என்னவெய்வது சேர்த்து வைத்து வீடு, வளவு, எல்லாம் தொலைந்து போய்விட்டது. பிள்ளையின்ர படிப்பாவது நல்லா இருக்கட்டும் என்ற ஆசை மூச்சுத் தான். சில ஆயிரத்தில் போய் நிற்கும்.

அதுசரி ஏன் பொலிஸ் பள்ளிக்கூடம் போனது என்றான்? பொறன் அப்பா, ஏன் முந்துகிறாய் என்றேன்:

இறை ஆசிகளும் அபிவிருத்திச் சங்க பொருளாளரும் பற்றுச்சீட்டுபோட்டு அறவிட்ட காசு பல லட்சம். 1999ம் ஆண்டு முதலாம் ஆண்டு மாணவர் அனுமதிக்கும் பல ஆயிரங்கள் சேர அறவிட்டார்களாம். எல்லாம் சேர்த்து கணக்கு காட்டவேண்டிய தொகை எவ்வளவு தெரியுமா? எங்கட மூத்த அக்கா போனமாதம் ஏஜென்சியால் கனடா போகும் போது அங்கு அரைவாசி. இங்கு அரைவாசி கொடுத்த நாங்கள் இங்கு வைத்து கொடுத்த அந்த அரைவாசிக்கு அளவுக்கு பெரிய புள்ளிகள் சேர்ந்து அடித்துவிட்டு கணக்கு காட்டவேண்டிய நேரம். பாடசாலை அபிவிருத்திச் சங்க அலுவலகத்தை யாரோ உடைத்து பற்றுச்சீட்டுப்புத்தகம் மட்டும் களவு போயிற்று என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்களாம். அப்பாவும் போனார் விசாரிக்க! பாவம் அப்பா அம்மா படிப்பித்து நல்ல பெயர் எடுத்த பாடசாலை யாரை விசாரிப்பது?

அப்ப எப்படி பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் காணாமல் போனது? ஏன் அவசரப் படுகிறாய். பண வசூல் யார் செய்தார்களோ அவர்களே பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் யாவற்றையும் எடுத்து எரித்துப் போட்டார்கள். இதுதான் உண்மை. அடுத்த கட்டம் என்னவென்றால் இப்ப பணவசூல் பணச்செலவு யாவற்றையும் மாவட்ட கல்வி அதிகாரியால் இப்பாடசாலைக்கு நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நல்ல புதினம் என்றான். நண்பன். நேரம் போய்விட்டது. அப்பா என்னைப் பொலிஸ் பிடித்திருக்கலாம் என தேடப்போறார். நான் வாறன் மைச்சான்!

- பிரணா

## எத்தனை காலம் தான்?

நட்டாற்றிலே தத்தளிக்கிறவன் துரும்பைக் கண்டாலும் பற்றிக் கொள்வான் என்று சொல்வார்கள். அது அவனைப் பாதுகாக்கிறதோ இல்லையோ, தப்பிப்பிழைக்கும் ஆசை - அவனை அப்படிச் செய்ய வைக்கும்.

இப்போது தென்மாகாண சபைத் தேர்தலை நடாத்த முடிவு செய்த பிறகு சந்திரிகா அரசாங்கத்திற்கு ஏதாவது ஒரு துரும்பு அகப்படாதா என்ற தத்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தேர்தல் வெள்ளத்தில் கரைசேர அவர் பிடித்த துரும்பு வேறு யாருமல்ல, ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் பிரேமதாச அரசாங்கத்தால் கொல்லப்பட்ட றோகண விஜேவீரவின் மனைவி.

அவரது விருப்பத்திற்கு மாறாக, அவரது பிள்ளைகளின் கல்வி வசதிக்கு வாய்ப்பளிக்குமாறு திரும்பத் திரும்பக் கேட்ட போதெல்லாம் அதைக் கணக்கெடுக்காமல் திருகோணமலை கடற்படை முகாமில் பாதுகாப்பு என்ற பெயரில் சிறை வைத்திருந்தவர்கள், அம்மணியின் இந்த விருப்பத்தை அறிந்ததும் திடீரென அவரைக் கொழும்புக்குக் கூட்டி வந்தார்கள். கடந்த ஐந்து மாகாண சபைத் தேர்தல்களிலும் மூன்றாவது பெரிய சக்தியாக தன்னை வெளிக்காட்டிக் கொண்ட ஜே.வி.பியின் வளர்ச்சி வேகத்தால் நடுங்கிப் போயிருக்கும் அரசு தரப்பினர் அவரை தென் மாகாண சபைத் தேர்தலில் தம் சார்பில் நிறுத்த முயற்சி எடுத்தனர். ஜே.வி.பிக்கு எதிராக ஒரு அறிக்கை விடுமாறும் தம்முடன் சேர்ந்து தேர்தலில் நிற்குமாறும் மன்றாடினார்கள்.

ஆனால், அவர் இதற்கு மறுத்து விட்டதாகத் தெரிய வருகிறது. அவர் கேட்டதெல்லாம் என்னையும் என் பிள்ளைகளையும் சுதந்திரமாக வெலிசறையில் வாழ அனுமதியுங்கள் என்றது தான்.

பாவம் சந்திரிகா. அகப்பட்ட துரும்பு கூட சரிவராத நிலையில் இப்போது தென்மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நிலை. அந்த மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நிறுத்த அவர் விரும்பிய போதும். மகிந்த ராஜபக்ஷ அதை மறுத்து விட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

தன்னை தேசிய அரசியலில் இருந்து கீழிறக்கும் ஒரு சதி இது என்று அவர் கருதுவதாகத் தெரிகிறது.

சந்திரிகாவுக்கு இப்போது பெரிய தலையிடியாக இருப்பது இதுதான். யாரை முதலமைச்சர் வேட்பாளராகப் போடுவது? எப்படி றோகணவின் மனைவியை வழிக்குக் கொண்டுவருவது. என்ற தலையிடி.

தங்களது லாபத்துக்காக மட்டும் மற்றவர்களை பயன்படுத்தும் அரசியலில் சந்திரிகாவுக்கு நிகர் அவர் தான். அவரால் பயன்படுத்தப்பட்டு வீசப்பட்டவர்களின் பட்டியல் ஒரு நீண்ட பட்டியல். வசந்தராஜா, பத்மா மகாராஜா, சிறிமணி அத்துலத்முதலி என்று அது ஒரு முடிவற்ற நீண்ட பட்டியல்.

இப்போது அந்தப் பட்டியலில் ராஜபக்ஷவையும், றோகணவின் மனைவியையும் சேர்த்து விடும் முயற்சியில் இறங்கினார் சந்திரிகா.

ஆனால், 'எத்தனை காலம் தான் ஏமாற்றலாம் இந்த நாட்டிலே'?

## தட்டுப்பாடற்ற பொருள்...

இந்த நாட்டில் என்னென்னவோ, எல்லாவற்றுக்கெல்லாம் தட்டுப்பாடு நிலவினாலும் தட்டுப்பாடு நிலவாத ஒரு விடயமும் இருக்கத்தான் செய்கிறது.

அதுதான் வாக்குறுதி.

அரசியல் தலைவர்கள், ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகள் ஆகியோரால் வழங்கப்படும் வாக்குறுதிகளுக்கு எந்தத் தட்டுப்பாடும் இங்கு தெரிவதில்லை.

அதிலும் தமிழர்களுக்கு வழங்கப்படும் வாக்குறுதிகளோவென்றால், அதற்கு அளவு கணக்கீடு கிடையாது.

களுத்துறைச் சிறையில் காரணம் எதுவுமின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு அரசு தரப்பு அதிகாரிகள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு எந்த அளவு கணக்குகளும் சாத்தியமில்லை.

உடனடியாக விசாரணை நடக்கும்: வேண்டிய குறைபாடுகள் தீர்க்கப்படும் அது இதென்று பல வாக்குறுதிகள்: அவர்கள் தமது விடுதலை அல்லது விசாரணை கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய போதெல்லாம் அவர்களது உண்ணாவிரதப் போராட்டங்கள் வாக்குறுதிகளால் முடித்து வைக்கப்பட்டிருக்கின்றன. வாக்குறுதி அளித்தவர்களின் பெயர்கள், படங்கள் உட்பட வாக்குறுதிகளும் தொடர்பு சாதனங்களில் பிரசித்தமாக வெளியாகியிருக்கின்றன.

ஆனால், அவை ஒருபோதும் நிறைவேற்றப்படுவதில்லை.

இப்போதும் மீண்டும் ஒருமுறை களுத்துறை சி[illegible]லைக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கியிருக்கிறா[illegible] கூரை மீது ஏறிநின்று.

விரைவில் மீண்டும் வாக்குறுதிகளுடன் அதேகூட்டம் தயாராகும். அதேபோன்று அகதிகள் ஏமாற்றப்படுவார்கள். அதைப்போல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் தொடரும். தேர்தலில் யார் யாரை நிறுத்துவது என்ற தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கட்சிகளுக்கும், அசந்து தூங்கிக் கொண்டிருக்கும் அதிகாரிகள் கூட்டத்திற்கும் எதையும் 'மறப்போம் மன்னிப்போம்' என்ற பரந்த மனதுடன் எதிர் கொள்ளும் மக்களுக்கும் இவை வெறும் பத்திரிகைச் செய்திகளாகவே போய்க் கொண்டிருக்கின்றன.

தமிழ்க்கட்சிகள் இதிலே ஏதாவது பிழைப்பு இருக்குமா என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கக் கூடும்.

கூரையில் ஏறிநிற்கும் கைதிகள் இம்முறையும் ஏமாற்றப்படாதிருக்க ஏதாவது வழி இல்லையா?

## பதில் உண்டா, உங்களிடம்?

பிரபாகரனின் சமாதானக் கோரிக்கை மாவீரர் தின நாளன்று முன்வைக்கப்-பட்டு மாதங்கள் ஐந்து ஓடிவிட்டன.

யுத்தத்தை விட வேறு வழியில் பிரச்சினைக்கு தீர்வு இல்லை என்ற முடிவுடன் அரசாங்கம் படை நகர்த்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. உணவு, போக்குவரத்துத் தட்டுப்பாடு என்பவற்றில் வன்னி முழுவதும் பெரும் திண்டாட்டத்திற்குள்ளாகி நிற்கிறது. யுத்தம் எவ்வளவு காலம் தொடரப் போகிறது. நாம் எப்போது நிம்மதிப் பெருமூச்சு விடப் போகிறோம் என்பது அங்குள்ள மக்களின் கேள்வியாக நிற்கிறது.

காணி சுவீகரிப்பு என்ற அச்சுறுத்தல், போக்குவரத்து தடை, அகதி முகாம் வாழ்க்கை, மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு என்று எல்லாவிதத்திலும் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் யுத்தத்துள் அகப்பட்டுள்ள மக்களுக்காக, கண்ணீர் விடவேண்டாம், கவலை தெரிவிக்கக்கூட யாருமில்லாத நிலை.

அரசு அடுத்த பத்தாயிரம் பேரை படைக்கு திரட்ட ஆயத்தமாகி விட்டது.

புலிகள் ஆட்சேர்ப்பில் தீவிரமாக இருக்கிறார்கள். தமிழ்க்கட்சிகள் அடுத்த தேர்தலுக்கான தயாரிப்பில் பிஸியாக உள்ளனர். ஆடுமாடுகளை விட கேவலமாக அங்குள்ள மக்களின் நிலை நீடிக்கிறது.

இதற்கொருமுடிவே இல்லையா?

இது வன்னியிலிருந்து கொழும்புக்கு அலுவலாக வந்த ஒருவரது கேள்வி.

ஏதாவது பதில் தெரிந்தால் கூறுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு முஸ்லிம் அகதிகள்: நிவாரண நிறுத்த அச்சுறுத்தல்!

தமது தாயக பூமியில் பூர்வீக பிரதேசத்தில் அமைதியாக வாழ்க்கை நடாத்திய ஒரு சமூகம் இன ரீதியாக அடையாளப் படுத்தப்பட்டு உடமைகள் முற்றாகப்பறிக்கப்பட்ட நிலையில் தமது பூர்வீக வாழ் விடங்களிலிருந்து குறுகியகால அவகாசத்திற்குள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பரிதாபகரமான நிகழ்வு இலங்கைத் திருநாட்டின் வடபுலத்து முஸ்லிம்களுக்கு மாத்திரமே நிகழ்துள்ளது.

இத்துருஷ்ட நிகழ்வின்பின் 9 ஆண்டுகள் எழுத்தில் வடிக்க முடியாத துன்பங்களின் மத்தியில் வறுமையின் கோரப்பிடியில் அல்லலுற்று அவல வாழ்வு வாழும் இம்மக்களின் இழந்த உரிமைகளை பெற்றுக் கொடுக்க கடமைப்பட்டுள்ள இந்நாட்டு அரசானது இம்மக்களுக்கு இதுவரை வழங்கிவரும் உலர் உணவு நிவாரண உதவியையும் நிறுத்துவதற்கான நடவடிக்கையை அண்மையில் எடுத்திருந்தது. அகதி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்தாபனங்கள் எடுத்த முயற்சிகளை அடுத்து தொடர்ந்தும் வழங்குவதற்கு தற்போது ஜனாதிபதியால் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிவாரணத்தை நிறுத்தும் அரசின் நடவடிக்கையானது வெவ்வேறு முறைகளில் அகதி மக்களை அச்சுறுத்தி வருகின்றது. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்ற இந்நடவ்டிக்கையானது விசனத்திற்குரியதாகும்.

அண்மையில் நிவாரண நிறுத்தம் தொடர்பாக சமூக சேவை அமைச்சினால் மேற்படி அரச சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட ரூபா 10.000 முதல் ரூபா 35.000 வரை மீள்குடியேற்றம் சம்பந்தமாக உதவி பெற்றோருக்கானதும் தொழில் முயற்சி சம்பந்தமாக ரூபா 4.000 பெற்றோருக்கானதுமான நிவாரண உதவிகள் கட்டம் கட்டமாக நிறுத்தப்பட்டு ஜூன் மாதம் 99க்குள் முற்றாக நிறுத்தப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

உண்மையில் இவ் இடம்பெயர்ந்த வடபுலத்து அகதி முஸ்லிம்கள் பூரண விருப்பத்துடன் மேற்படி உதவித் தொகைகளை பெறமுன்வரவில்லை என்பது இங்கு கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். மாறாக

"கௌரவமாக வாழ்ந்த பரம்பரை தன்மானத்துடன் கௌரவமாக வாழ்வதற்கு இது ஒரு சந்தர்ப்பம்."

"பின் விளைவுகள், நிவாரண வெட்டு போன்ற அபாயமில்லை. பயப்பட வேண்டாம்"

இத்திட்டத்தின் மூலம் நிவாரணம் எக்காரணம் கொண்டும் வெட்டப்படமாட்டாது. தொழில் முயற்சிக்காக வழங்கப்படும் ரூபா 4 ஆயிரம் எடுத்தால் தான் வழங்கப்பட்டு பின்னர்தான் நிறுத்தப்படும். எனவே தொழில் முயற்சிக்குரிய ரூபா 4 ஆயிரத்தை எடுக்காமல் உங்களுக்கு நிவாரணமே வெட்டப்படாது"

போன்ற அறிவுரைகளும் வாக்குறுதிகளும் அரசியல் தலைவர்களாலும் அரச அதிகாரிகளினாலும் வழங்கப்பட்டு ஆசையூட்டப்பட்ட நிலையிலேயே இவ்வுதவிகளை பெற முன் வந்தனர்.

இந்நிலையில் இத்திட்டத்தை முன்வைத்து இம்மக்களின் நிவாரணத்தை வெட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க முயன்றதானது இம்மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

இதனால்தான் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு அரசாங்கத்தினால் மீள்குடியேற்றம் என்று நடைமுறைப்படுத்தி வருகின்ற அகதி மக்களின் வாழ்விட வசதிகளை அதிகரிக்க எடுத்துக்கொள்ளப்படுகின்ற நடவடிக்கையை "இடைக்கால வாழ்விட வசதி ஒழுங்கு" என்று பிரகடனப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திவந்துள்ளது.

அவ்வாறாயின் மீள்குடியேற்றத்திற்காக கொடுக்கப்பட்ட கொடுக்கப்பட்டுவருகின்ற கொடுப்பனவுகள் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மீள்குடியேற்றத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதா?

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டது மீள்குடியேற்றத்திட்டமாயின் வடக்கு முஸ்லிம்களுக்கு உறுதிப்படுத்தப்படுகின்ற அடிப்படை மனித உரிமைகள் என்ன?

மட்டுப்படுத்தப்பட்ட வாழ்விட வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக அளிக்கப்படுகின்ற பணக்கொடுப்பனவுகள் இம்மக்களின் ஏனைய எல்லா உரிமைகளையும் பாதுகாக்கப்போதுமானதா?

இம்மக்களின் நிவாரணம் நிறுத்தப்பட்டால் மாற்றுப் பொருளாதாரத்திட்டம் ஒன்றை அரசாங்கம் இந்த மக்களுக்காக வைத்துள்ளதா?

இவ்வாறாக எழும்பும் வினாக்களுக்கு இம்மக்களுக்கு சரியான விளக்கத்தை அளிக்காமல் நிவாரணத்தை வெட்டுவதற்கு எடுக்கும் அரசின் நடவடிக்கைகளை ஒரு போதும் வடக்கு முஸ்லிம்கள் அங்கீகரிக்கப் போவதில்லை.

இம்மக்களுக்குள்ள 'அகதி' என்பதற்கான அடையாளமாக உள்ள ஒரே ஒரு துரும்புச் சீட்டான இந்த நிவாரணமும் பறிக்கப்பட்டுவிட்டால், இம்மக்கள் தாயக மண்ணுக்கு மீளச்செல்வது இழந்த சொத்துக்களுக்கான நஷ்டஈடு உட்பட பல அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதில் பல சிரமங்களை எதில் கொள்ள வேண்டிவரும்.



மேலும் இம்மக்கள் மத்தியில் போஷாக்கின்மை பட்டினி, விரக்தி காரணமாக மரணவிகிதமும் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

வடக்கு முஸ்லிம்கள் தமது பாரம்பரியமான சொந்த இடங்களுக்கு தாமாகவே திரும்பி அங்கு பாதுகாப்புடனும் சுய கௌரவத்துடனும் வாழ்க்கையை மீள ஆரம்பிக்கும்வரை அவர்களுக்கு பொருளாதார ரீதியாகவும் மீட்சி ஏற்படும் வரையில் அகதிகளாகக் கணிக்கப்பட்டு நிவாரணங்களையும், அவர்களது வாழ்க்கை மேம்பாட்டுக்கான வசதிகளையும் மேலும் அதிகரித்து தொடர்ந்து அளிக்கப்படவேண்டும். இது அரசாங்கத்தின் கடமையாகும். அரசாங்கம் இதற்கான உத்தரவாதத்தை இம்மக்களுக்கு வழங்கவேண்டும்.

-பி.ஏ.எஸ்.சுபியான்

வ.மு.உ.அ.

---

# எங்கள் மண்ணில் எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள்!

வலிகாமம் வடக்கில் சிங்கள மக்களைக்கொண்டு வந்து குடியமர்த்த முடியுமானால் ஏன் எம்மை மீண்டும் குடியமர அனுமதிக்கக்கூடாது என்கின்றனர் வலி வடக்கு அகதிகள். வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மல்லாகம் நீதிவான் முகாம், குளமங்கால் முகாம் , றொட்டியாலடி முகாம், மருதனார் மடம் முகாம், சங்கானை முகாம் நவாலி வியாபாரி மூலை சக்கோட்டை பொலிகண்டி, கரவெட்டி போன்ற இடங்களில் வசித்து வருகின்றனர். ஓரளவு வசதியுள்ளவர்கள் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.



இவர்களனைவரும் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி மீண்டும் தமது தொழில்களை ஆரம்பிக்க விரும்புகின்றனர்.

மல்லாகம் நீதிவான் முகாமில் ஐந்து பரப்புக்காணியில் அறுபது குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்கு வசித்து வரும் பலாலியைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான தேவராஜா கூறுகின்றார், இஞ்சை இருந்து நாங்கள் என்னத்தைச் செய்யிறது'. என்னத்தை உழைக்கிறது?". இம்முகாம் தலைவரான தையிட்டியைச் சேர்ந்த இன்பரசன் கூறுகிறார், எமது காணிகளைச் சுவிகரிப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது'. அவர் மேலும் கூறுகையில் "நாம் சீவல் தொழிலாளிகள். தற்போது மட்டுப்படுத்தப்பட்ட தொழிற்பாடு தான் நடைபெறுகிறது.

புலிகளின் ஆட்சிக் காலத்தில் கொழும்புச் சாராயம் வருவதில்லை. இதனால் எமக்கு வருடம் முழுவதும் தொழில் கிடைத்தது. வருமானமும் கிடைத்தது. தற்போது கொழும்புச் சாராயம் வருகிறபடியால் பனஞ்சாராய உற்பத்தி அரைவாசியாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் வருடத்தில் ஆறு மாதங்களே எமக்குத் தொழில் கிடைக்கின்றது.

73 வயதான கிளிப்பெட்டை சொல்கிறார். எமக்குக்காசு தேவையில்லை. எங்களை எங்கடை இடத்தில் விட்டால் போதும். கூலித்தொழில் செய்துவரும் 65 வயதான செல்லத்துரை, 50 வயதான தங்கச்சியம்மா ஆகியோர் கூறுகின்றனர். எங்களை எங்கடை சொந்த இடத்தில் வாழ விடுங்கள். இங்கு விதவைகளும் உள்ளனர். சின்னாச்சி என்ற விதவை நான்கு பேர்கொண்ட குடும்பத்தைப் பராமரித்து வருகிறார்.

சுன்னாகம் றொட்டியாலடி முகாமில் தையிட்டி ஊறனி, மயிலிட்டி, காங்கேசன்துறை, கட்டுவன். வசவிளான் ஆகிய இடங்களைச் சேர்ந்த 130 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இம்முகாம் தலைவர் சின்னத்துரை மனோகரன் கூறுகிறார். இது எனக்கு ஏழாவது முகாம். இதுவும் நிரந்தரமில்லை. 86ம் ஆண்டு இடம்பெயர்ந்தவர்கள் இன்னமும் எமது சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை.

இம்முகாம் காணிச் சொந்தக்காரர் கொழும்பில் வசித்து வருகின்றனர். இவர் உதவி அரசாங்க அதிபர் மூலம் இந்தக் காணியை வாங்கச்சொல்லி எம்மை வற்புறுத்தி வருகிறார்.

இம்முகாமில் வசித்துவரும் 65வயதான மயிலிட்டியைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை சொல்கிறார்.எங்களை எங்கடை ஊருக்கு விட்டாப் போதும். நாங்கள் நிம்மதியா இருப்பம். இப்ப விட்டாலும் நாங்கள் நடையில்போய் பச்சைத்தண்ணியைக் குடிச்சுக்கொண்டிருப்பம். இவர் வியாபாரம் செய்து வருபவர். இன்னும் சிலர் நாளைக்கு காணிக்காரன் வந்து எழும்பச்சொன்னால் நாங்கள் எங்கை போறது என்றனர்.

இங்கு ரஜனி அருள்குமார் (18) என்ற விதவையும் வசித்து வருகின்றார். மயிலிட்டியைச் சேர்ந்த இவரது கணவன் 97ம் ஆண்டு மருதனார் மடத்தில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் இடையில் சிக்கி மரணமானவர். இவருக்கு இரண்டுவயதில் ஒரு குழந்தையும் உள்ளது. றொட்டியாலடி முகாமில் மிதிவெடியில் காலை இழந்து மூன்றுபேர் வசித்து வருகின்றனர். அருந்தவராணி மயிலிட்டி (46), இவரது கணவன் ஒரு இருதய நோயாளி.

மூத்தான் அருந்தவம் (50)

காசி அருந்தவம் (55)

72 வயதான பாறி சொல்கிறார் 9வருசமா மானத்துணிகூட இல்லாம இருக்கிறம். நாங்கள் ஊரிலை இருக்கேக்கை கடக்கரையிலை பிடிச்சோண்டாற மீனை வேண்டிக்கொண்டே ஊருக்கேவித்துப் போட்டு வாறனாங்கள். இவரைப்போல் மீன் வியாபாரத்திலீடுப்ட்டு வந்த வயோதிபப்பெண்கள் பலர் உள்ளனர். இங்குள்ள மேசன் தொழிலாளிகள் சிலர் சொன்னார்கள். எமக்குத்தொழில் இல்லை. இங்குள்ளவர்கள் தமது ஊர்க்காரரைத்தான் பிடிக்கிறார்கள். இதனால் எமக்கு தொழில்வாய்ப்பு இல்லையென்றனர். இவர்களை அரச சார்பற்ற நிறுவனங்களும் திரும்பிப்பார்ப்பதாகத் தெரியவில்லை. குழாய்க்கிணறு அமைத்துக்கொடுத்து மற்றும் பாய், பாத்திரங்கள் போன்றவற்றை வழங்கியதுடன் அவர்களின் பணிமுடிந்து விடுகிறது.

யாழ்ப்பாண அபிவிருத்தி என்ற பெயரில் பல மில்லியன்களை ஒதுக்கி தாம் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டு தொண்டுசெய்யும் தொண்டர் நிறுவனங்கள் வலிவடக்கு அகதிகள் பக்கமும் திரும்பிப்பார்த்தால் என்ன?

வரும் வழியில் வலி வடக்கு கிராமசேவகர்கள் இருவரைச் சந்தித்தோம். அவர்கள் சொன்னார்கள். எங்கடை தமிழ்க்கட்சியெழுக்கு என்ன எங்கள் மீது திடீர் கரிசனை. இப்ப பத்துவரிசமா இல்லாத அக்கறை இப்பதான் வந்திருக்கு. எங்களுக்கு நட்ட ஈட்டைத்தந்து விட்டால் பரவாயில்லை. ஒன்றும் இல்லாமல் இருப்பதிலும்பார்க்க ஏதாவது வாங்கிக்கொண்டு இருப்பது பரவாயில்லை என்றனர். கடந்த பத்து வருடங்களாக எம்மைப் போகவிடாத அரசாங்கம் இனியா போகவிடப்போகிறது. அரசாங்கம் ஒருகாலும் எம்மை எமது இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப் போவதில்லை. எனவே நட்டஈட்டையாவது வாங்கிக்கொண்டு இருப்பம் என்றனர்.

முகாமில் பலரின் உளரீதியான பிரச்சினை அயலவர்கள் இவர்களை அகதிகள் என கேவலமாக அழைப்பது தான். எல்லாரும் ஆறுமாதம் அகதிகளாக இருந்தவர்கள் தானே என்கின்றனர் இங்குள்ள அகதிகள்.

-எழவான்.

நன்றி - நூலகத்திட்டம்



# திருமலை வைத்தியசாலை :
# மருந்துகள் இல்லாத மருந்தகம் !

கிழக்கு மாகாணத்தின் மிக முக்கியமான வைத்தியசாலைகளுள் ஒன்று திருகோணமலை தள வைத்தியசாலை ஆகும். தற்பொழுது நான்கு சிறப்பு வைத்தியர்கள் (நிபு-ணர்கள்) உட்பட நாற்பது வைத்தியர்-களுக்கு அணித்தாக கடமையாற்றும் இவ் வைத்தியசாலை ஆங்கிலேயர் காலத்தில் இருந்து இயங்கி வருவதாகும். ஆயினும், இதுவரை தர முயர்த்தப்படாத வைத்தியசாலை-யாகவே ஒதுக்கிவைக்கப்பட்டு வருகிறது. சிங்கள மக்கள் செறிந்-துவாழும் பகுதிகளில் உள்ள மத்திய மருந்தகங்கள், மாவட்ட வைத்தி-யசாலைகளாக தரம் உயர்ந்து வருகின்றபோதும், இவ்வைத்தி-யசாலை கவனிப்பற்ற ஒன்றாகவே இருந்து வருகிறது. இப்பத்தியில் இவ்வைத்தியசாலை தற்பொழுது உடனடியாக எதிர்கொள்ளும் மிகமுக்கியமான பிரச்சினை ஒன்று-டன் ஏனைய பிரச்சினைகள் பற்றியும் வெளிப்படுத்தப்படுகின்றன. அதிகாரி-களின் தான் தோன்றித்தனம், அக்கறையீனம், உணர்வுச்சிக்கல் ஊழல் என்பன போன்ற காரணங்-களால் நமது நாட்டின் வைத்திய சேவை எப்படிக்குன்றிப்போயுள்ளது என்பது இவற்றைப்படிப்பவர்க்கு புலனாகும். தற்பொழுது திருகோ-ணமலை தள வைத்தியசாலையில் உயிர்காக்கும் மருந்துகளுக்கு மிக அவசரமான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக சிறுநீரக செயல் இழப்பு, இரத்த அழுத்தம், விஷக்கடி, விசர்நாய் கடி போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வருத்தம் கடுமையாகி வரும் திருகோணமலை மாவட்டத்தின் நோயாளர்களைக் காப்பாற்றக்கூடிய சூழ்நிலை மேற்குறித்த நோய்கள் தொடர்பான மருந்துகள் இன்மையால் இல்லாமல்போய்க் கொண்டிருக்கிறது என வைத்திய நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர். ஏற்கெனவே நான்கு மணரங்கள் சம்பவித்து-விட்டதாகத் தெரிகிறது.

தற்பொழுது நாய்கடித்து வரும் சகலருக்கும் ஏ.ஆர்.வி. (அன்ரி றேபிஸ் வக்சீன்) வழங்கப்படவேண்-டியுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவிக்கின்றார். ஏனெனில், சாதாரணமான நாய் (விசர் அல்ல) எனக்கருதப்பட்ட நாய், பூனை என்பன கடித்து ஊசி வழங்கப்படாமையினால் அண்மையில் இருவர் மரணமாகியுள்ளனர். ஆனால், ஏ.ஆர்.வி. ஆனது சிறிதளவு கூட கையிருப்பில் இல்லை என மாவட்ட வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இவை தவிர நோயாளர்களுக்கு தேவைப்படும் பாவித்து உடன் வீசப்படும் சத்திரசிகிச்சை உபகர-ணங்களான பிளாஸ்ரிக் ஊசிநாளத் தொடர்பிக் குழாய்கள் மருந்து செலுத்திகள் போன்றவற்றுக்கும் கடும்தட்டுப்பாடு நிலவுகிறது. சிறுநீர் ஏற்றும் பைகள், குடற்பதார்த்தம் ஏற்றும் பைகள், மூக்குவழி உணவுக்கால்வாய் தொடர்புக்குழாய்கள் போன்றன இன்மையால் சிறார்நோய்நிபுணர், சத்திரசிகிச்சை நிபுணர் ஆகியோர் தமது கடமைகளைச் செய்வதில் கடுமையான இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே வைத்தியசாலை நிர்வாகம் இவை தொடர்பாக உடனடியாக மாகாண பிராந்திய சுகாதார அதிகாரி, வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு முறைப்படி அறிவித்திருக்கிறது. ஆனால், இது தொடர்பாக இதுவரை எந்த ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் குறித்த மேல் அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை எனத்தெரிகிறது.



இது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளர் (வ.கி. மாகாணம்) நடைபெற்ற கலந்துரையாடலில் வ.கி.மா. சுகாதார அமைச்சின் செய-லாளர் அவர்கள் நோயாளர்களுக்கு தேவையான மருந்துகள் சரி, உபகரணங்கள் சரி நோயாளர்களையே வாங்கும்படி கூறச் சொல்லியுள்ளார். தான் கடமையாற்றும் பகுதி மக்களின் நிலைமையைப் பற்றி சற்றேனும் சிந்திக்காது அவ்வதிகாரி கூறிய பதிலால் நோயாளர்கள் திகைத்துப் போயுள்ளனர். திருகோணமலை நகரப்பகுதி மக்களை விடவும் இவ்வைத்தியசாலையைப் பயன்படுத்துபவர்கள் மூதூர், தோப்பூர், சம்பூர், அலிஒழுவ, கட்டைபறிச்சான், புல்மோட்டை, ஈச்சிலம்பற்று, வெரு-கல், சேருநுவர, முறக்கொட்-டாஞ்சேனை, முள்ளிப்பொத்தானை, ஆலங்கேணி போன்ற போராலும். பொருளாதாரத்தாலும் நொந்துபோன கிராமங்களைச் சேர்ந்த மக்களே. ஒருவேளை சாப்பாட்டுக்கே வழி-யின்றி வைத்தியசாலை ஆளோடியில் படுத்துறங்கும் இம்மக்களை காசுகொடுத்து மருந்து மற்றும் உபகரணங்கள் வாங்கும்படி புகையை ஊதித்தள்ளுவதுபோல கூற எவருக்கு மனம் வரும் என மக்கள் நெஞ்செறிகிறார்கள்.

உண்மையில் இம்மருந்து தட்டுப்பாட்டுக்கு காரணம் என்ன என ஆராய்ந்தபொழுது கீழ்வரும் பிரச்சினை அம்பலமாகியுள்ளது. இலங்கை மத்திய அரசின் மருந்து வழங்கற்பிரிவுக்கு வ.கி. மாகா-ணத்தின் சுகாதார அமைச்சு கடந்த பத்து வருடங்களாக பெற்றுக் கொண்ட மருந்துகளுக்கு பணம் எதுவும் வழங்கப்படவில்லை எனவும், இதன் தொகை சுமார் நூறு மில்லியன் ரூபா எனவும், அறியக்கிடக்கிறது. இதனால் மத்திய மருந்து வழங்கல் பிரிவு இவ்வரு-டத்தில் இருந்து இவர்கள் வழங்கும் பணத்தின் 60வீதத்தினை மழைய நிலுவைக்கு கழித்துக் கொள்ளவும், மிகுதி 40வீதத்திற்கு மட்டும் மருந்து வழங்கவும் முடிவு செய்து குறித்த 40 வீதத்தினையும் வழங்கியும் விட்டதென தெரியவருகிறது. இந்நிலையில் மேற்குறித்த பணம் ஏன் வழங்கப்படவில்லை? பணம் வழங்காமலேயே பத்துவருடங்களாக மருந்து வழங்க மத்திய மருந்து வழங்கல் (எம்.எஸ்.டி.) பிரிவுக்கு எப்படி முடிந்தது? இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஆவணங்-களுக்கு என்ன நடந்தது, என்பன போன்ற கேள்விகளை கணக்காய்வு-பிரிவு இன்னும் ஏன் எழுப்பவில்லை எனவும் மக்கள் வினவுகிறார்கள்.

பிராந்தி சுகாதாரப்பிரிவின் களஞ்சியத்தில் இருந்து தளவைத்தியசாலைக்கு மருந்துகளை வழங்கும் முகாமைத்துவம் மிகமோசமாக இருப்பதாக வைத்தியர்கள் குறைப்படுகின்றனனர். மருத்துவ அறிவுள்ள ஒரு களஞ்சிய காப்பாளரை அல்லது மருந்தாளர் ஒருவரின் சரியான முகாமைத்துவத்தை பல முறை கோரியும் இன்னமும் உறுதிப்படுத்தாமையால் உரிய மருந்துகள் உரிய நேரத்தில் கிடைக்காமை நிகழ்ந்து கொண்டே இருப்பதாகவும் அறியமுடிகிறது. இதனால் தேவையற்ற பல மருந்துகள் பிராந்திய களஞ்சியத்தில் தேங்கிக்கிடப்பதாகவும் அறிய-முடிகிறது.


இப்பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநர்வரையும் அறிவிக்கப்பட்டு தினசரி பத்திரிகை ஒன்றிலும் பிரசுரிக்-கப்பட்டபோதும் அதிகாரிகள், யானைத்தோலில் கொசு கடித்த கதையாய் உள்ளதாகவும் அறிய-முடிகிறது. இதேவேளை வைத்திய-சாலை என்றளவில் அதனுள் நிலவும் சில பிரச்சினைகளையும் பற்றாக்-குறைகளையும் அம்பலப்படுத்துவதும் அவசியமாகிறது.

சிகிச்சைக் களங்களில் இருந்து துண்டு வெட்டப்படும் நோயாளர்கள் மதியம் பன்னிரண்டுக்கும் இரண்டுக்கும் இடையில் மருந்து பெற முடியாது உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் மூதூர் மற்றும் தூர இடங்களுக்கு செல்பவர்கள் தமது போக்குவரத்தைத் தவறவிட்டு மறுநாள் பயணிக்க வேண்டியுள்ளது.

நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் எடுக்கவேண்டிய நோயாளர் (Antibotics) அங்கவீனர்கள் வயது போனவர்கள் கர்ப்பிணிகள் என யாவரும் மாடிப்படி ஏறி மாவட்ட வைத்திய அதிகாரியின் கையெ-ழுத்தைப் பெற வேண்டிய நிலை-யுள்ளதால் அவதியுறுகின்றனர்.

சிறுநீர் இரத்தப்பரிசோதனை செய்யச்செல்லும் நோயாளர்கள் தமக்கான மாதிரிகளை பெறுவதற்கு மீளவும் படியேறி இறங்கி அலைவதுடன் சிறுநீர் எடுப்பதற்கு வைத்தியசாலைக்கு வெளியே வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. இவை தொடர்பாக மாற்று ஏற்பாடுகளைச் செய்ய நிர்வாகம் முன்வரவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வைத்தியர்களுக்கான விடுதி வசதிகள் இவ்வைத்தியசாலையில் போதுமானதாக இல்லையெனவும் வழங்கப்பட்ட விடுதிகள் கூட வசதிகள் அற்றவையெனவும் சில வைத்தியர்கள் தெரிவித்தனர். புதிதாக விடுதி வழங்கப்படும் வைத்தி-யர்களுக்கு படுப்பதற்கு பாய்கள்கூட வழங்கப்படுவதில்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர். இதேவேளை அதேவிடுதிப் பிரச்சினை காரணமாக அழைப்பின் பேரில் இரவு நேரங்களில் வந்து கடமை செய்ய வேண்டிய தொழிநுட்பவியலாளர்கள் தமது கடமைக்கு சரியாக சமூக அளிப்பதில்-லையென பொது வைத்திய நிபுணர் சில மாதங்களுக்கு முன்பு பிரதி சுகாதார அதிகாரிவரை அறிவித்ததாகவும் அறியமுடிகிறது. பிரத்தியேக வீடுகளில் தங்கியி-ருக்கும்வரை சுதந்திரமாக எந்நேரமும் அழைப்புக்கு செவிமடுக்கமுடியாது என தொழிநுட்பவியலாளர்கள் (துணை வைத்திய சேவைகள்) தெரிவித்து இருக்கிறார்கள். இவர்களுக்கு விடுதிகள் வழங்கப்பட வேண்டும் என வைத்திய நிபுணர்கள் பரிந்துரை செய்திருந்தபோதும் அதிகாரிகளின் அசட்டையும் அசமந்தமும் காரணமாக இப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்பட-வில்லையெனவும் தெரிவருகிறது. குறித்த ஒரு அதிகாரி தான் இருக்கும் வரை இவர்களுக்கு விடுதிகள் வழங்கப்படக் கூடாது என சூளுரைத்ததாகவும் தெரியவருகிறது. அதேவேளை தமக்கான உரிமை-களுக்கு சண்டையிடும் துணை வைத்திய சேவை தொழிநுட்ப-வியலாளர்கள் தமது கடமையை சரிவரச் செய்வதில்லையெனவும் அறியமுடிகிறது. அனேகமானவர்கள் வைத்தியசாலைக்கு ஒன்பது மணிக்-குத்தான் வேலைக்கு சமூகமளிப்பதா-கவும், உரிய நேரங்களுக்கு முன்பதாக சென்றுவிடுவதாகவும் அறியமுடிகிறது. ஆக, சுகாதார சேவை என்னும் இப்பெரிய நிறுவனம் அது யாருக்காக ஏற்படுத்தப்பட்டதோ அவர்களுக்கு சேவை புரியாமல் அவரவர் பிழைப்புக்கான இடமாக மாறிவிட்டது இந்த யுத்த காலத்துள் இது ஜீரணிக்க முடியாத சோகம்.




கட்டுரை : சௌ

படங்கள் : எம்.கே.எம்.எஸ்

நன்றி - நூலகத்திட்டம்






**வேலுப்பிள்ளை தவச்செல்வம்- உதயன் பத்திரிகையின் வடமராட்சி கிழக்குப் பகுதிச் செய்தியாளர். அண்மையில் மணல்காட்டுப் பகுதியில் அநாமதேயமாகக் காணப்பட்ட இளம் பெண் ஒருவரின் சடலம் பற்றிய செய்தி ஒன்று உதயன் பத்திரிகையில் வெளி வந்ததையடுத்து இச் செய்தியாளர் இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மிரட்டப்பட்டு வருகிறார். இவர்கள் தனது கடமையைச் சரிவரச் செய்ய தடையாக இருப்பது மட்டுமல்லாமல் தனது உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடும் என்று அஞ்சும் அவர் தனது பாதுகாப்புக்கு ஆவன செய்யுமாறு கோரி சுதந்திர ஊடகவியலாளர் இயக்கத்துக்கு எழுதிய கடிதம் இங்கு முழுமையாகப் பிரசுரமாகின்றது. ( ஆர் )**

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் உதயன் பத்திரிகையில் 1995ம் ஆண்டிலிருந்து வடமராட்சி கிழக்கு செய்தியாளராகக் கடமை புரிகிறேன்.

என்னுடைய பிரதேசம் பல பாது காப்பு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் ஒரு பிரதேசம். இப் பகுதியில் படையினரின் நடவடிக்கை களும் புலிகளின் நடமாட்டங்களும் உண்டு. இத்தகைய நெருக்கடிக்கு மத்தியிலேயே நான் கடமையாற்றி வருகிறேன். எமது பகுதிக்கு வல்லி புரம், நாகர்கோவில் காவலரண்கள் ஊடாகவே சென்று வர முடியும்.

ஏப்.17ம் திகதிய உதயன் பத்திரிகையில் 'இளம் பெண்ணின் சடலம் மணல் காட்டுப் பகுதியில் காணப்பட்டது' என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியாகியது. இதைத் தொடர்ந்து எனக்கு வடமராட்சி கிழக்கில் உள்ள நான் கடந்து செல்ல வேண்டிய சில படையினரின் காவலரண்களில் தொந்தரவு ஏற்படத் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் இப்பகுதியில் உள்ள சில காவலரண் களில் நான் அச்சுறுத்தப்பட்டு வருகிறேன். இது தொடர்பாக நான் செய்தியாளராகக் கடமையாற்றும் உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கும் எழுத்து மூலமான அறிக்கை ஒன்றைக் கையளித்துள்ளேன். ஆனால் என்மீதான தொந்தரவு நின்றபாடில்லை.

கீழே அச்செய்தி வெளியானதன் பின்னர் படையினரால் எனக்கு நேர்ந்த சம்பவங்கள் குறித்து திகதி வாரியாகக் குறிப்பிட்டுள்ளேன்.

ஏப்.18ம் திகதி: நானும் எமது பிரதேசக் கிராம சேவையாளருமாக காலை எட்டரை மணியளவில் எனது மோட்டார் சைக்கிளில் பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். வழியில் நாகர் கோவில் காவலரணில் நின்ற படையினர் எம்மை வழி மறித்தனர். எங்கே போகிறீர்கள்? ஏன் போகிறீர்கள்? என்கிற வழமை யான கேள்விகளைத் தொடுத்த படையதிகாரி எழுதுமட்டுவாள் படை முகாம் அதிகாரி உங்களை விசாரணை செய்ய வேண்டும் என்றும் எழுதுமட்டுவாள் முகா முக்கு வருமாறும் உத்தர விட்டிருக்கிறார். அங்கு செல்லுங்கள் என்றார்.


ஒன்பதரை மணியளவில் நாம் எழுதுமட்டுவாளில் இருந்த கிளாலி பிரிகேட்டின் 523வது படைப் பிரிவுக்குச் சென்றோம்.

அங்கு என்னை விசாரித்த படை யதிகாரி நாகர் கோவிலில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் படையினர் எவரும் கொல்லப்படவில்லை. அத்தோடு அச்சம்பவத்தின் பின்னர் படை யினரால் பொதுமக்கள் எவரும் தாக்கப்படவுமில்லை. அவ்வாறி ருக்க நீங்கள் ஏன் தவறாகச் செய்தி கொடுத்தீர்கள்? என்று கேட்டார்.

அதேபோல் அப்பகுதியில் இளம் பெண் எவரினதும் சடலம் எதுவும் காணப்படவுமில்லை.அதுவும் தவறு தானே என்று கேட்டார்.

நான் சொன்னேன்: எனது செய்தியில் எதுவித தவறு மிருப்பதாக நான் கருதவில்லை. படையினர் கொல்லப்பட்டதும் உண்மை. பொதுமக்கள் தாக்கப் பட்டதும் உண்மை. இளம் பெண்ணின் சடலம் காணப் பட்டதும் உண்மை. என்னுடைய செய்தி தவறு என்று உங்களுடைய தலைமைப்பீடம் கருதினால் பலாலி தலைமையகத்துாடாக உதயன் பத்திரிகைக்கு மறுப்பு அறிக்கை ஒன்றை அனுப்பி வையுங்கள் என்று. படையதிகாரியோ எதுவும் பேசவில்லை.

மேலும் இப்பகுதியில் மோதல் சம்பவங்கள் நடைபெறும் பொழுது படையினர் எவரையும் உடனடி யாகத் தொடர்பு கொண்டு சரியான தகவலை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலையே நிலவுகிறது எனவும், இதனால் என்னைப்



போன்ற பத்திரிகையாளர்கள் சம்பவம் நடந்த இடத்திலிருந்து கிடைக்கக் கூடிய நம்பிக்கையான தகவல்களை உறுதிப்படுத்தி செய்தி அனுப்ப வேண்டியுள்ளது என்பதையும் நான் அவ்வதி காரிக்குச் சுட்டிக் காட்டினேன். இதனைத் தொடர்ந்து அவ்வதிகாரி என்னைப் போகுமாறு பணித்தார்.

இவ்விசாரணை காலை ஒன்பதரை தொடக்கம் பிற்பகல் மூன்றரை வரை நடை பெற்றது. இந்த விசார ணையின் போது எங்களை வீடியோவில் படமும் பிடித்துக் கொண்டார்கள்.

ஏப்.19ம் திகதி: நான் மாமுனை யிலுள்ள எனது வீட்டிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறை செல்லும் போது முதல் நாள் என்னை மறித்த நாகர் கோவில் சோதனைச் சாவடியில் படையினர் எதுவும் கேட்கவில்லை. அதனையும் தாண்டிச் சென்ற போது வல்லிபுரம் சோதனைச் சாவடியில் என்னைத் தடுத்து நிறுத்திய படையினர் காலை ஒன்பதரையிலிருந்து பதினொன்றரை வரை விசாரித் தனர். நான் எழுதிய செய்தி தவறென்றும் அது குறித்து மறுப் பறிக்கை வெளியிடுமாறும் என்னைக் கட்டாயப்படுத்தினர்.

குறித்த செய்தியை எழுதியவர்கள் என இருவருடைய குறியீட்டு இலக்கங்கள் பத்திரிகையில் கொடுக்கப்பட்டிருந்தன. மற்றைய இலக்கத்துக்குரிய செய்தியாளர் யார்? அவரை எங்களுக்குக் காட்டித் தர வேண்டும் என்றும் அச்சுறுத்தினர்.

அவ்வாறு செய்ய என்னால் முடியாது. நீங்கள் விரும்பினால் உதயன் பத்தரிகை நிர்வாகத் தினருடன் தொடர்பு கொள்ளுங் கள் என்று நான் தெரிவித்தேன்.

அவர்களோ விடாப்பிடியாக நாளைய உதயன் பத்திரிகையில் மறுப்பறிக்கை வெளிவர வேண்டும் என்றனர்.

அதை நான் தீர்மானிக்க முடியாது. உதயனின் ஆசிரியர்குழு தான் தீர்மானிக்க வேண்டும் என்று மீளவும் சொன்னேன்.

நாளை மறுப்பறிக்கை வரா விட்டால் பார்த்துக் கொள்ளு வோம் என்று கூறி என்னைப் போகப் பணித்தனர்.

ஏப்.20ம் திகதி: எனது வீட்டிலிருந்து காலை எட்டு மணியளவில் யாழ்ப்பாணம் போகப் புறப்பட்டுச் சென்றேன். வல்லிபுரம் சோதனைச் சாவடியில் என்னை மறித்த படையினர் என்னிடமிருந்த தமிழ்ப்பட வீடியோ கசெற்றை பறித்து வைத்து விட்டு பதினொரு மணிக்கு வந்து எடுக்கச் சொன் னார்கள்.

நான் மீளப் பதினொரு மணிக்கு அங்கு சென்ற போது என்னை அழைத்துச் சென்று படம் பிடித்த படையினர் குறித்த செய்தி தொடர்பாக நாளைய உதயன் பத்திரிகையில் மறுப்புச் செய்தி வெளியாக வேண்டும் என்றும் உதயன் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மறுப்பைப் போடுமாறும் பணித்தனர். மறுப்புப் பற்றி நான் முடிவெடுக்க முடியாது என்றும் உதயன் பத்திரிகை நிறுவனம் தான் முடிவெடுக்க வேண்டும் என்றும், நீங்கள் மறுப்பறிக்கை எதையாவது என்னிடம் தந்தால் அதனை உதயன் பத்திரிகைக்கு அனுப்பி வைக்கிறேன் என்றும் அவர்களிடம் தெரிவித் தேன்.

என்னைத் தூஷண வார்த் தைகளால் ஏசிய படையினர் நாளை உதயனில் மறுப்பு வந்தாக வேண்டும் என்று எச்சரித்து அனுப்பினர்.

ஏப்.21ம்திகதி: நான் வீட்டிலிருந்து யாழ்ப்பாணம் செல்லச் சென்ற போது வல்லிபுரம் சோதனைச் சாவடியில் என்னைத் தடுத்து நிறுத்திய இராணுவப் பொலிஸார், இன்னமும் உதயனில் மறுப்பறிக்கை வர வில்லை. நாளை அது வந்தாக வேண்டும். கூடவே மற்றைய செய்தியாளரின் முகவரியையும் எம்மிடம் கொண்டு வந்து தர வேண்டும் என்று எனக்கு உத்தரவு பிறப்பித்தனர்.

நானோ மீளவும் நீங்கள் இது சம்பந்தமாக உதயன் காரியா லயத்துடன் தொடர்பு கொண்டு இதற்குரிய விளக்கத்தைப் பெறுங் கள் என்று கூறினேன்.

என்னுடைய பதிலைப் பற்றி அலட்டிக் கொள்ளாத அவர்கள் நாளை மற்றைய செய்தியாளரின் முகவரியுடன் வரவேண்டும். இல்லாவிட்டால் நீ இப்பாதையால் வர முடியாது என்று எச்சரிக்கை செய்து விட்டனர்.

ஏப்.23ம் திகதி: காலையில் நான் பருத்தித்துறை செல்லப் புறப்பட்ட போது 19ம் திகதி காலை நாகர் கோவில் காவலரணில் என்னைத் தடுத்து நிறுத்திய அதே படையினர் மீளவும் என்னைத் தடுத்து நிறுத்தி வீதியின் ஓரத்தில் எனது மோட்டார் சைக்கிளை நிறுத்தும்படி கூறி விட்டு அருகிலுள்ள பூவரசம் பற்றைக்குப் பின்னால் என்னை அழைத்துச் சென்றனர். அங்கு வைத்து எனது உடைகளைக் களையச் சொல்லி மிரட்டினார்கள். பயத்தின் காரண மாக நான் அவற்றைக் களைந்தேன். அதன் பின்னர் எனது வெற்று டலைப் பரிசோதித்தார்கள். இவ்வளவும் வீதி ஓரத்தில் இருந்த பற்றை மறைப்பில் நடந்தது. பின்னர் படைவீரர் ஒருவர் எனது மோட்டார் சைக்கிளை எடுத்து பற்றைப் பக்கமாகக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார். நான் பற்றைக் குள்ளால் வெளியே வரவும் வேறு சிலர் வீதியால் போகவும் சரியாக இருந்தது. அவர்கள் என்னைக் கண்டதைக் கண்ட படையினர் அவசர அவசரமாக என்னைப் போகும்படி கட்டளையிட்டார்கள். இதன் போது படையினர் என்னை எதுவும் கேட்கவில்லை.

ஏப்.24ம் திகதி: எனது வீட்டில் பழுதடைந்த நிலையில் இருந்த வீடியோ டெக்கைத் திருத்து வதற்காக எடுத்துக் கொண்டு பருத்தித்துறைக்குப் புறப்பட்டேன். வல்லிபுரம் சோதனைச் சாவடியில் நின்ற படைவீரர் சுமார் ஒரு மணிநேரம் என்னை வெய்யிலில் தடுத்து வைத்திருந்து விட்டு சோதனைச் சாவடியுள் செல்ல அனுமதித்தார். சோதனைச் சாவடி யுள் இருந்த படைவீரர் இன்று நீ பருத்தித்துறை போக முடியாது. திரும்பிப் போ என்று உறுக்கினார். நான் திரும்பி விட்டேன்.

ஏப்.26ம் திகதி: வல்லிபுரம் சோதனைச் சாவடியில் வைத்து ஏன் இன்னமும் உதயன் பத்திரிகையில் மறுப்பு வரவில்லை என்று அங்கு நின்ற படையதிகாரி ஒருவர் கேட்டார்.

இச்செய்தி தொடர்பான சகல விபரங்களையும் உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு நான் அனுப்பி விட்டேன். நீங்கள் உங்களுக்குத் தேவையான சகல விபரங்களுக்கும் அவர்களுடன் தொடர்பு கொள் ளுங்கள் என்றேன்.

அவர் ஒரு எரித்த பார்வையுடன் உள்ளே சென்று விட்டார்.

1.இவை ஏப். 26ம் திகதி வரை எனக்கு நேர்ந்த சம்பவங்கள். குறித்த செய்தி தவறாயின் அது தொடர்பாக பத்திரிகை நிறுவனத் துடன் தொடர்பு கொள்ளும்படி நான் அவர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளேன்.
2.அச்செய்தியில் அடிக் குறிப் பிட்டுள்ள மற்றைய பத்திரிகை யாளர் யார் என்று கேட்டதற்கும் அதனைத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு எனக்கில்லை. அதற்கும் நான் கடமை புரியும் பத்திரிகை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கூறியிருக்கிறேன்.
3.குறித்த செய்தி தொடர்பாக என்னிடம் விசாரிக்கப்பட்டது மட்டுமில்லாமல் எனது அனுமதி யில்லாமல் படையினர் என்னை வீடியோப்படமும் புகைப்படமும் பிடித்து வைத்துள்ளனர்.
4.படையினர் வீதியோரத்தில் உள்ள பற்றைக்கருகில் வைத்து என்னை நிர்வாணப்படுத்தி சோதனையிட்டு என்னை அவமானப் படுத்தியுள்ள னர்.
5.ஒரு பத்திரிகையாளரான எனக்கு படையினர் போக்குவரத்துத் தடைகளைக் காரணமின்றி விதித்து எனது கடமையைச் செய்வதற்கு இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர்.

நான் இருக்கின்ற பகுதிமுற்றாக விடுவிக்கப்படாத பிரதேசமாக இருப்பதனால், எனக்குக்கிட்ட உள்ள நகரமான பருத்தித்துறைக்கு விடுவிக்கப்படாத பிரதேசங்களான அம்பன், குடத்தனை, விளாங்காடு பகுதியூடாகவே வல்லிபுரக் கோவில் முகாமைத் தாண்டிச் செல்ல வேண்டியிரப்பதால் எனக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்களை உத்தேசித்தும், எனக்குப் படையின ரால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை உத்தேசித்தும் எனது பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் எனது கடமைகளைத் தங்கு தடையின்றிச் செய்ய ஆவன மேற்கொள்ளுமாறும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வே. தவச்செல்வம்

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ்த் தேசிய விடுதலை

# பஞ்சமரின் விடுதலையையும் உள்ளடக்குமா?

தமிழ் தேசிய விடுதலை, தமிழ்த் தேசத்திற்குள் அடக்கப்பட்ட பிரிவினராக இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் விடுதலையைப் பெற்றுத் தருமா? இது தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையை நேசிக்கும் அனைவர் மத்தியிலும் எழுந்துள்ள பிரதான வினா. அதுவும் நூற்றுக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் துறந்து கொண்டிருக்கும் இத்தருவாயிலும் தமிழ்ச் சமூகத்தினரின் உயர் பிரிவினர் போருக்கு பயந்து நாட்டை விட்டு ஓடிய போது தாமும் ஓடாமல் போராட்டத்தினை தாங்கிப் பிடிக்கின்ற பிரதான சக்தியாக அவர்கள் இருக்கின்ற நிலையிலும் இவ்வினா அர்த்தமும் முக்கியத்துவமும் உடையதாகின்றது.

ஒரு போராட்டத்தின் அறுவடை அப் போராட்டத்தினை முன்னெடுத்த சமூகத்தின் அடக்கப்பட்ட பிரிவுக்கும் போய்ச்சேர வேண்டுமாயின் அவ்வடக்கப்பட்ட பிரிவினரின் அபிலாசைகளும், அவ் அபிலாசைகளை தீர்ப்பதற்கான வழி முறைகளும் அப் போராட்டத்தில் இருத்தல் வேண்டும் என்பது ஒரு அடிப்படையான விடயமாகும். குறிப்பாக அப்போராட்டத்தின் அரசியலிலும், அவ் அரசியல் முன்னெடுக்கும் அமைப்புகளிலும் அவை இருத்தல் வேண்டும்.

உண்மையில் இந்நிகழ்வுகள் நடைபெறுவதற்கு பின்வரும் முக்கிய விடயங்களில் ஏதாவது ஒன்று நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

1. சமூக மாற்றத்தினையும் இலக்காகக் கொண்ட அமைப்பு தேசப் போராட்டத்தினை முன்னெடுத்திருத்தல் வேண்டும். அங்கு சாதியால் ஒடுக்கப்பட்ட சமூக சக்திகள் சமத்துவமாக இணைக்கப்பட்டிருப்பர். தலைமை மட்டத்திலும் அவர்கள் இருப்பர். வியட்னாமில் ஹோசிமினின் தேசிய இயக்கம் இத் தன்மையையே கொண்டிருந்தது.

2. தேசப் போராட்டத்தினை, தேசவிடுதலையை மட்டும் இலக்காகக் கொண்டவர்கள் ஆதிக்க சக்திகளின் துணையுடன் முன்னெடுத்திருப்பின் அவ்வமைப்பிற்குள் தாழ்த்தப்பட்டவர்கள் பிரதான சமூக சக்தியாக அமைப்பு ரீதியாக அணிதிரண்டிருத்தல் வேண்டும். இங்கு விடுதலையை முன்னெடுக்கும் தேசிய அமைப்பிற்கு நிர்ப்பந்தங்களைக் கொடுப்பதன் மூலம் தாழ்த்தப்பட்டவர்கள் தங்களினுடைய நலன்களை உத்தரவாதப்படுத்திக் கொள்ள முடியும்.

3. தேசிய இயக்கத்திற்கு வெளியே சாதியால் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது சொந்த அமைப்பினை பலமாக வைத்துக் கொண்டு நிபந்தனையுடனான ஆதரவினை தேசப்போராட்டத்திற்கு வழங்குதல் வேண்டும். இங்கும் நிர்ப்பந்தங்கள் மூலமாக தாழ்த்தப்பட்டவர்கள் தங்களினுடைய நலன்களை பெற்றுக் கொள்ள முடியும். இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவரான அம்பேத்கார் இவ்வழிமுறையினையே கொண்டிருந்தார். நிர்ப்பந்தங்களின் மூலமே அரச உத்தியோகங்களில் இட ஒதுக்கீடு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனியான தேர்தல் தொகுதிகள் போன்ற உரிமைகளைப் பெற்றிருந்தனர்.

தமிழர்களின் தேசிய அரசியலில் இவ்விடயங்கள் எவ்வாறு இருந்தன. தேசியத்தினை முன்னெடுத்த அமைப்புகள் இது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் என்ன? தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்புகள் எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்பதை ஆராய்வதற்கு தவிர்க்க முடியாமல் தமிழரசுக் கட்சியிலிருந்து ஆரம்பிக்க வேண்டியது இன்றியமையாததாக உள்ளது. தமிழர்களின் தேசியப் போராட்டத்தினை ஒரு போராட்ட அரசியல் வடிவில் முதன் முதலாக முன்னெடுத்த அமைப்பு என்ற வகையிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்பாக தமிழரசுக் கட்சி கடைப் பிடித்த அதே அணுகு முறையையே இன்று போராட்டத்தினை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகள் பின்பற்றுவதினாலும் இவ் ஆய்விற்கு தமிழரசுக் கட்சி தொடக்கப்புள்ளியாக இருப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

தமிழரசுக் கட்சி 1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி உருவாக்கப்பட்டது இதன் தோற்றம் தமிழ்த் தேசிய அரசியலின் வளர்ச்சிப் போக்கில் அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் ஒரு அடுத்த கட்ட வளர்ச்சியைக் காட்டி நின்றது. அரசியல் ரீதியாக இது வரை கடைப்பிடிக்கப்பட்ட சம பிரதிநிதித்துவக் கோரிக்கைக்கு அப்பால், தமிழ் மக்கள் தங்களது சுய நிர்ணய உரிமையை தாமே பிரயோகிக்கக் கூடிய வகையில் ஒரு சுயாட்சித் தமிழரசை அது வற்புறுத்தியது. இவ் சுயாட்சித் தமிழரசு என்ற எண்ணக்கரு ஊடாக தமிழர்கள் ஒரு தனியான தேசிய இனம், வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம், தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்கின்ற புகழ் பூத்த திம்புச் சிந்தனைகளின் தோற்றத்திற்கு அத்திவாரத்தினை உருவாக்கிக் கொடுத்தது.

அமைப்பு ரீதியாக இது யாழ் குடா நாட்டிற்குள் மட்டும் முடங்கிக் கிடந்த தமிழ்த் தேசிய அரசியலை வடக்கு-கிழக்கு எங்கும் கொண்டு சென்றது. இக்கொண்டு செல்லலை துரிதப்படுத்துவதற்காகவும் தமிழ் மக்கள் அனைவரையும் பேரினவாத அரசுக்கு எதிராக ஒன்று திரட்ட வேண்டும் என்பதற்காகவும் தமிழர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தியிருந்த யாழ், சைவ, வேளாள ஆதிக்கச் சிந்தனை போக்கின் இறுக்கத்தினை சற்றுத் தளர்த்த வேண்டிய அவசியமும் அதற்கு ஏற்பட்டது. சித்தாந்த ரீதியாக அதனை தளர்த்துவதற்கு பதிலாக போராட்டத்திற்கு ஐக்கியம் அவசியம். ஐக்கியம் ஏற்பட வேண்டுமானால் இறுக்கத்தினைத் தளர்த்துதல் வேண்டும் என்ற வகையிலேயே அதன் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. சுதந்திரத்திற்கு பின்னர் பேரினவாத அரசுகளின் ஒடுக்கு முறை அதிகரிக்க அதிகரிக்க ஐக்கியத்தினைக் காட்டி இவ் இறுக்கத்தினை நகர்த்துவது அதற்கு இலகுவானதாக இருந்தது. தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் "தமிழ் மக்களை இன்று ஐக்கியப்படுத்தி வைத்திருப்பது தமிழர்களதோ அவர்களது அமைப்புகளதோ அரசியல் சித்தாந்த ரீதியான உழைப்பு அல்ல. மாறாக சிங்களப் பேரினவாதமே" எனக்கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந் நடவடிக்கைகளினூடாக தமிழர்கள் என்ற அடையாளமே உயர்த்தப்பட்டது. ஏனைய அடையாளங்கள் அழிக்கப்படவில்லை. மாறாக உறைய வைப்பதற்கு முயற்சிக்கப்பட்டன. இந்த வகையில் யாழ், சைவம், வேளாளம் எனும் அடையாளங்களை உறையச் செய்வதற்கு தமிழரசுக் கட்சி முயற்சி செய்தது.

இவ் உறைய வைக்கும் முயற்சிகளின் ஒரு அம்சமாகவே சாதி ஒடுக்குமுறை சம்பந்தமான விடயங்களையும் தமிழரசுக்கட்சி அணுகியது. தமிழரசுக் கட்சியின் மாநாட்டுத் தீர்மானங்களிலும், வெளியீடுகளிலும், தமிழர்கள் ஐக்கியப்பட்டு விடுதலையைப் பெற வேண்டுமாயின், சாதி ஒடுக்குமுறை குறிப்பாக தீண்டாமை நீக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டது.

தமிழரசுக் கட்சியின் ஐந்தாவது தேசிய சிறப்பு மாநாடு 1957ம் ஆண்டு யூலை மாதம் 28ம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்றது. மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சாதி ஒடுக்குமுறையை ஒழித்தல் என்பதுவும் முக்கியமான ஒரு விடயமாக விளங்கியது. மாநாட்டு தீர்மானம் -2 சாதி ஒடுக்குமுறை ஒழிப்பு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தமது அரசியல் கலாசார விடுதலையை அடைய வேண்டுமாயின் உடனே சமூகத்தில் நிலவும் தீண்டாமையை முற்றாக ஒழிக்க வேண்டுமென இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கின்றது. இவ்வேண்டுகோளை ஏற்று இலங்கைத் தமிழ் பேசும் இனம் இதை நடைமுறையில் கொண்டு வரத் தயாராயில்லை என்றால் தமது அடிப்படை இலட்சியமான இலங்கை சமஸ்டி அரசியலமைப்பின் கீழ் மொழிவாரியான ஒரு சுதந்திரத் தமிழரசை அல்லது அரசுகளை அமைத்து நிரந்தரமாகத் தமது அரசியல் விடுதலையையும் கலாசார விடுதலையையும் எக்காலத்திலும் ஒரு போதும் அடைய முடியாது என இம்மாநாடு உறுதியாக நம்புகிறது."

ஆனால், இது விடயத்தில் தந்தை செல்வாவின் கருத்து ஒரு தார்மீக மயப்பட்டதாகவே இருந்தது. ஒரு நேர்மையான அரசியல்வாதி என்ற வகையில் அவர் "எங்களுக்குள் ஒரு பிரிவினரை அடக்கிவைத்திருக்கும் எமக்கு பேரின அடக்கு முறையிலிருந்து விடுதலை கேட்பதற்கு உரிமையில்லை" என்றே கருதினார். தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைமையுரையாற்றும் போதும் இதனையே வலியுறுத்தியிருந்தார். அவர் அதில் உரையாற்றும் போது

"யாம் வெற்றி பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாக வேண்டுமானால், நமது சமூகத்திலிருக்கும் குறைகளைக் களைந்து அதைத் தூய்மை பெறச் செய்ய வேண்டும். தமிழ் மக்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் தாங்கள் மற்றவர்களால் ஒடுக்கப்படுவதாகக் கருதுகின்றனர். யாம் ஒருவருக்கு கொடுமை செய்தால் தர்ம நீதியின் படி எமக்கும் பிறரொருவர் அதையே செய்வார். தமிழ் மக்கள் அரசியற் சுதந்திரம் பெற வேண்டுமேயானால் தம் சமுதாயத்திலே உரிமையற்றவர்களாய் இருக்கும் மக்களுக்கு அவ் உரிமைகளை வழங்க வேண்டும்" என்றார்.

> தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரை சமூகமாற்ற அமைப்பு அதனை தலைமையேற்றாலோ, அல்லது தேசிய அமைப்பிற்குள் தாழ்த்தப்பட்டவர்கள் ஒரு சக்தியாக இயங்குதலோ, அல்லது தேசிய அமைப்பிற்கு வெளியே தாழ்த்தப்பட்டவர்கள் சுயாதீன அமைப்பினைக் கொண்டு ஒரு அமுக்கக் குழுவாக செயற்படுவதோ எவையும் இக்காலத்தில் நடைமுறையில் நிகழவில்லை. மாறாக தேசிய அமைப்பிற்குள் அவர்கள் கரைக்கப்பட்டது தான் நடந்தேறியுள்ளது. மேற்கூறியவற்றில் ஒன்று நடந்திருந்தால் கூட தமிழ்த்தேசிய அரசியல் தமிழரசுக் கட்சியிடமிருந்து விடுதலை இயக்கங்களிடம் கைமாறிய போது அங்கும் தாழ்த்தப்பட்டவர்களின் நலன்கள் பேணப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருந்திருக்கும்

நடைமுறையில்தமிழரசுக் கட்சி நிர்ப்பந்தங்கள் வரும் போது மட்டும் தாழ்த்தப்பட்டவர்களின் விடயத்தில் கவனத்தினைச் செலுத்தியது. ஏனைய சந்தர்ப்பங்களில் வெளியீடுகளோடும் பிரச்சாரங்களோடும் நிறுத்திக் கொண்டது. தானாக போராட்டங்கள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை. நிர்ப்பந்தங்கள் வரும் போது மட்டும் முன்னெடுத்தது. தன்னெழுச்சியாக தாழ்த்தப்பட்டவர்களின் போராட்டம் ஏதாவது நடைபெற்றால் அதில் மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவினை வழங்கியது.

தமிழரசுக் கட்சி தாழ்த்தப்பட்ட மக்கள் சம்பந்தமான விடயங்களில் சற்று முனைப்புடன் இருந்த காலப்பகுதி 1956-1961 காலப்பகுதியேயாகும். இதற்கு இரண்டு விடயங்கள் பிரதானமாக இருந்தன.

ஒன்று மகா சபையில் இருந்து வெளியேறியோரை சற்றுபலமான நிலையில் வைத்திருக்க. இக்காலத்தில் தமிழ்த்தேசியப் போராட்டம் முனைப்படைந்திருந்தது. 1956ம் ஆண்டு யூன் 5ம் திகதி பாராளுமன்றத்தில் தனிச்சிங்களச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் வெகுவாகப் பாதித்திருந்தது. அதே வேளை இதை எதிர்த்து தமிழரசுக்கட்சி காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் நடாத்திய நிகழ்வும், அதையொட்டி தமிழ்த்தலைவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் கட்சியின் நிலையை உயர்த்தியிருந்தது. இந்நிகழ்வுகள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களையும் பாதித்திருந்தன. தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்பான சிறுபான்மைத் தமிழர் மகா சபைக்குள்ளும் இப்பாதிப்பு ஊடுருவியிருந்தது. இதனால் மகாசபையின் தோற்றத்திற்கே காரணமாக இருந்த அதன் ஆரம்ப உறுப்பினர்களான த.ம.செல்லத்துரை, பு.நல்லையா என்போரும், த.கணபதிநாதன் க.மு. முருகேசு போன்றவர்களும் மகா சபையை விட்டு வெளியேறி தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டனர். தமிழரசுக் கட்சியின் துணையுடன் மகாசபைக்கு மாற்றாக சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி என்னும் அமைப்பையும் உருவாக்கிக் கொண்டனர். இவர்கள் வெளியேறியமைக்கு அவர்களிடம் இருந்த தமிழ்த் தேசிய உணர்வு, தமிழரசுக் கட்சிபால் இருந்த நம்பிக்கை என்பவற்றிற்கு அப்பால் மகா சபையில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கம் வலுவடைந்து அக்கட்சி மகாசபையை தனது முன்னணி அமைப்பு போல வைத்திருக்க முனைந்தமையும் ஒரு காரணமாகும்.

தமிழரசுக் கட்சி உருவான காலம் தொட்டு மகாசபைக்குள் தமிழ்த் தேசியவாதிகளுக்கும், இடதுசாரிகளுக்கும் இடையே முரண்பாடுகள் காணப்பட்ட போதும் 1957இல் நடை பெற்ற மகாசபையின் 14வது மாநாடே வெளியேற்றத்தினை ஊக்குவித்திருந்தது. 1957ம் ஆண்டு யூன் மாதம் 9ம் திகதி மாநாடு நடைபெற்ற போது அப்போது சமூக சேவைகள் உதவி அமைச்சராக இருந்த பி.டி.சொய்சாவை சிறப்பு விருந்தினராக அழைக்க மகாசபையின் நிர்வாகக் குழு முடிவு செய்தது. தமிழ் மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான உணர்வு வளர்ச்சியடைந்த ஒரு கட்டத்தில் அவரை அழைப்பதை தலைவராக இருந்த பிலிப், இணைச் செயலாளர்களில் ஒருவராக இருந்த த.ம. செல்லத்துரை போன்றவர்கள் விரும்பாத போதும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களின் ஆதிக்கத்தினால் அம்முடிவு எடுக்கப்பட்டது. உதவி அமைச்சர் தனிச் சிங்களக் கொள்கையை தமிழ் மக்களுக்கு விளக்கப் போவதாகவும் அறிக்கை விடுத்தார்.

உதவி அமைச்சரின் வருகையை தமிழரசுக் கட்சி எதிர்க்க முடிவு செய்தது. அவர் யாழ் புகையிரத நிலையத்தில் வந்திறங்கி மோட்டார் பவனியாக செல்ல முற்பட்ட போது தாழ்த்தப்பட்ட மக்கள் பலரின் ஆதரவுடன் தமிழரசு வாலிப முன்னணியினர் மோட்டார்களுக்கு குறுக்கே படுத்து காரை நகர விடாமல் செய்தனர். பறைமேளம் அடிக்கப்பட்டதுடன் உதவி மந்திரியே திரும்பிப் போ என்ற கோஷம் எழுப்பப்பட்டு கறுப்புக் கொடியும் காட்டப்பட்டது. இவ்வாறான எதிர்ப்பு ஒன்று நடைபெறும் என ஊகித்துக் கொண்ட மகாசபையின் தலைவரும் செயலாளரும் வரவேற்புக்கு வரவில்லை. மகாசபையின் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரான எம்.சி. சுப்பிரமணியமும் ஒரு சிலருமே வந்திருந்தனர். மாநாடு நடைபெற இருந்த யாழ் நகர மண்டபமும் மந்திரியை எதிர்க்கும் மக்களால் நிரம்பி வழிந்தது. எம்.சி.சுப்பிரமணியமும் ஏனையோரும் பொலிசின் உதவியுடன் எவ்வளவோ சிரமப்பட்டு திட்டமிட்டபடி யாழ் வாடி வீட்டிற்கு அவரை கொண்டு செல்லாமல் காங்கேசன்துறை வாடி வீட்டிற்கு கொண்டு சென்றனர். மாநாட்டில் மந்திரி பேசமாட்டார் என்பதற்கான உத்தரவாதம் கொடுக்கப்பட்ட பின்னரே எதிர்த்த மக்கள் கலைந்து சென்றனர். மந்திரி இல்லாது பத்து மணிக்கு ஆரம்பமாகவிருந்த மாநாடு 12 மணிக்கே ஆரம்பமானது. மாநாடு முடிந்த பின் மாலையில்தான் ஒரு தனிப்பட்டவரின் வீட்டில் மந்திரிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் மகாசபையில் இருந்த தேசியவாதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை. இதனால் மகாசபை முழுமையாக கயூனிஸ்ட் கட்சியினரின் ஆதிக்கத்திற்குள் சென்றது. கம்யூனிஸ்ட் பிரமுகரான சுப்ரமணியம் மகாசபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். மகா சபையில் எம்.சி.சகாப்தம் இதன் பின்னரே முனைப்பு பெற ஆரம்பித்தது. தேசியவாதிகள் முன்னர் கூறியது போல தமிழரசுக் கட்சியுடன் இணைந்தனர். தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலைக்காக உருவாக்கப்பட்ட ஒரு சமூக அமைப்பு இதன் பின்னர் தனது தனித்துவத்தை இழந்து கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும், தமிழரசுக் கட்சிக்குள்ளும் கரைந்து கொண்டது.

1958 இல் மகாசபையை ஒரு கட்சி சார்பற்ற சுயாதீன அமைப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதற்கான முயற்சி ஒன்று மீண்டும் மேற்கொள்ளப்பட்டது. அரசியற் கட்சிகளில் அங்கம் வகிப்பவர்கள் மகாசபையின் பதவிகளை வகிக்கக் கூடாது என்ற விடயம் பொதுச் சபையில் விவாதிக்கப்பட்டது. டானியல், டொமினிக் ஜீவா, மு.பசுபதி போன்ற கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதை காரசாரமாக எதிர்த்ததினால் தீர்மானம் வாக்கெடுப்பில் தோல்வியடைந்தது.

1956-1960 காலப்பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி, ஆட்சியிலிருந்த பண்டார நாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியுடன் ஒத்துழைத்தினாலும், கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களில் ஒருவரான பொன் கந்தையா அவர்கள் பருத்தித்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தமையினாலும், மகாசபை சற்று பலமான நிலையில் இருந்தது. இந்நிலையைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைப் பேணும் நடவடிக்கைகளிலும், போராட்டங்களிலும் ஈடுபடத் தொடங்கியது. இது தமிழரசுக் கட்சிக்கும் நிர்ப்பந்தத்தினைக் கொடுத்தது. தம்மை நம்பிவந்த மகாசபையின் தேசியவாதிகளை ஒரு பலமான நிலையில் வைத்திருக்க வேண்டுமானால் தாழ்த்தப்பட்ட மக்கள் தொடர்பான நடவடிக்கைகளில் இறங்குவது அதற்கு தவிர்க்க முடியாததாக இருந்தது.

தமிழரசுக்கட்சி தாழ்த்தப்பட்டவர்களின் விடயத்தில் முனைப்பாக செயல்பட்டமைக்கு இரண்டாவது காரணம் தான் நடாத்திக் கொண்டிருக்கும் அரசுக்கு எதிரான போராட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களையும் அணிதிரட்டுவதாகும். 1956-1961 கால கட்டமே தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் எழுச்சிக் காலகட்டமாகும். இக்காலத்தில் அது தொடர்ச்சியாக போராட்டங்களை நடாத்திக் கொண்டிருந்தது. பண்டாரநாயக்கா அரசும் அதனைத் தொடர்ந்து வந்த சிறிமா அரசும் அதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுத்திருந்தது. தேசமயாக்கல் என்ற பெயரில் சிங்கள மயமாக்கம் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்ட கால கட்டம் இது. தமிழரசுக்கட்சி 1956 இல் காலிமுகத்திடல் சத்தியாக்கிரகப் போராட்டம், திருமலையாத்திரை, 1957இல் சிங்கள சிறீ எதிர்ப்பு போராட்டம், வடக்கு கிழக்கிற்கு வரும் அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி காட்டும் போராட்டம், 1961 இல் மாவட்ட அரச செயலகங்களின் முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டம் என போராட்டங்களை தொடர்ந்திருந்தது.

இப்போராட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களை பங்கு பெறச் செய்வதற்கும் அவர்கள் சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியிருந்தது.

1957ம் ஆண்டு ஏப்ரல் மாதம், 13ம் திகதி பாராளுமன்றத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சார்பான சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் தமிழரசுக் கட்சியால் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இதற்கான பிரேரணையை திருக்கோணமலை பாராளுமன்ற உறுப்பினர் கு.வன்னிய சிங்கம் வழி மொழிந்தார். இதன்படி சாதிரீதியான பாகுபாட்டினை பொது இடங்களில் காட்டுதல் சட்ட விரோதமாக்கப்பட்டது. ஒருவர் இதனை மீறின் அவருக்கு ஆறுமாதத்திற்கு மேற்படாத சிறையும் நூறு ரூபாவிற்கு மேற்படாத தண்டனையும் விதிக்கலாம் எனக் கூறப்பட்டது.

1957ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ம் திகதி கம்யூனிஸ்ட் கட்சி மகாசபையின் தலைவரான எட்.ச.சுப்பிரமணியத்தை அரசின் ஆதரவுடன் செனற் சபை உறுப்பினர் தெரிவிற்கான போட்டிக்கு நிறுத்தியது. தமிழரசுக் கட்சி இதற்கு எதிராக தாழ்த்தப்பட்டவரான ஜீ.நல்லையாவை சமசமாஜக் கட்சியினரின் ஆதரவுடன் போட்டிக்கு நிறுத்தியது. வாக்கெடுப்பில் ஜீ.நல்லையா குறைந்த வாக்குகளால் வெற்றி பெற்றார்.

1958ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ம் திகதி மகாசபை தேனீர் கடைப் பிரவேசத்திற்கான அறை கூவலை விடுத்தது. இது தொடர்பான துண்டுப்பிரசுரத்தில் டிசம்பர் 13ம் திகதிக்கு முன்னர் சகல தேனீர் கடைகளும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவமாகத் திறந்து விடப்படல் வேண்டும் என்றும் தவறின் அன்றைய தினம் தேனீர் கடைகளின் முன் சத்தியாக்கிரகம் நடாத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இது தொடர்ந்து கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

→

நன்றி - நூலகத்திட்டம்



தமிழரசுக் கட்சி உஷாரானது. அது 1958ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி தொடக்கம் ஒரு வாரத்தினை தீண்டாமை ஒழிப்பு வாரமாக அனுஸ்டிப்பது என பிரகடனப்படுத்தியது. கு. வன்னியசிங்கம், சு.நடராசா, அ.அமிர்தலிங்கம் என்போர் இப்போராட்டத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டனர்.

யாழ் நகர தேனீர்கடைகளின் உரிமையாளர்களை அழைத்து சாதிப்பாகுபாட்டை நீக்குவது தொடர்பான மாநாட்டினை நடாத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி கு. வன்னியசிங்கம் யாழ்நகர தேனீர் கடை உரிமையாளர்களை யாழ் நகர மண்டபத்திற்கு அழைப்பித்தார். அங்கு நடைபெற்ற மாநாட்டில் தேனீர் கடை உரிமையாளர்கள் தமது கடைகளில் சாதிபேதம் காட்டுவதை நிறுத்துவதென ஏகமனதாக தீர்மானித்தனர்.

முதலாவதாக சூரியகுளம் சந்தியிலிருந்த கோவிந்த பிள்ளை என்ற மலையாள வம்சத்தவரின் தேனீர்க் கடை சமத்துவமாக திறந்து விடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மலையாள வம்சத்தவரான சங்கரன் சுபாஸ் கபேயினைத் திறந்து விட்டார். தொடர்ந்து அனைத்து கடைகளும் திறந்துவிடப்பட்டன.

டிசம்பர் மாதம் 7ம் திகதி மகாசபை கூட்டிய சர்வகட்சி மாநாட்டிலும் தமிழரசுக் கட்சி பங்குபற்றியதோடு 13ம் திகதி கொண்டாடப்பட்ட சிறுபான்மைத் தமிழர் தினக் கூட்டத்திலும் சு.அமிர்தலிங்கம் பங்கு பற்றிப் பேசினார்.

இதை விட இக்காலத்தில் மகாசபை பொன். கந்தையா மூலமாக கல்வி அமைச்சர் தக நாயக்காவுடன் தொடர்பு கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குடா நாட்டில் 15 பாடசாலைகளையும் நிறுவியது.

இவ்வாறு இக்காலம் முழுவதும் மகாசபைக்கும், தமிழரசுக் கட்சிக்கும் இடையே பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

1963இல் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவினைத் தொடர்ந்து எம்.சி.சுப்பிரமணியம் சார்ந்திருந்த சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்ததால் வடக்கில் அதன் செல்வாக்கு சரியத் தொடங்கியது. அதேவேளை தமிழரசுக் கட்சியின் எழுச்சி நிலையும் சரியத் தொடங்கியது. அது போராட்ட அரசியலை விடுத்து சமரச அரசியலை நோக்கி நகரத் தொடங்கியது.

1964இல் தந்தை செல்வா தலைமையில் தீண்டாமை ஒழிப்பு தொடர்பான பாதயாத்திரைப் பிரச்சாரம் ஒன்று நடைபெற்றது. 1965இல் தமிழரசுக் கட்சி ஐ.தே.கட்சி அரசாங்கத்தில் இணைந்ததைத் தொடர்ந்து இச் செயற்பாடுகளும் வீழ்ச்சி அடைந்தன.

இனி கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியவற்றுக்கு வருவோம், தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரை சமூகமாற்ற அமைப்பு அதனை தலைமையேற்றாலோ, அல்லது தேசிய அமைப்பிற்குள் தாழ்த்தப்பட்டவர்கள் ஒரு சக்தியாக இயங்குதலோ, அல்லது தேசிய அமைப்பிற்கு வெளியே தாழ்த்தப்பட்டவர்கள் சுயாதீன அமைப்பினைக் கொண்டு ஒரு அமுக்கக் குழுவாக செயற்படுவதோ எவையும் இக்காலத்தில் நடைமுறையில் நிகழவில்லை. மாறாக தேசிய அமைப்பிற்குள் அவர்கள் கரைக்கப்பட்டது தான் நடந்தேறியுள்ளது. மேற்கூறியவற்றில் ஒன்று நடந்திருந்தால் கூட தமிழ்த்தேசிய அரசியல் தமிழரசுக் கட்சியிடமிருந்து விடுதலை இயக்கங்களிடம் கைமாறிய போது அங்கும் தாழ்த்தப்பட்டவர்களின் நலன்கள் பேணப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருந்திருக்கும் விளைவு இங்கும் கூட அவர்கள் கரைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தனர். இன்று போராட்டத்தினை முன்னெடுக்கும் புலிகள் அமைப்பிலும் இந்நிலையே தொடர்கின்றது.

மீண்டும் கட்டுரையின் ஆரம்பத்தில் கூறிய வினாக்களை எழுப்பிப் பார்ப்போம். "தமிழ்த் தேசிய விடுதலை தாழ்த்தப்பட்ட" மக்களுக்கும் விடுதலையைப் பெற்றுத் தருமா?

சகித்துக் கொள்வதற்கு கசப்பானதாக இருந்தாலும் இப்போது தெரிகின்ற விடை தெளிவானது.

அதாவது இல்லையென்பதே!

தேசப் போராட்டத்தில் இரு பிரிவினர் அதிக விலை கொடுத்துள்ளனர். ஒரு பிரிவினர் பெண்கள் மறுபிரிவினர் தாழ்த்தப்பட்டவர்கள்.

விடுதலையில் இவர்களுக்கு பங்கு இல்லாவிடின் விடுதலை அமைப்புகளை மட்டுமல்ல முழுத்தமிழ் மக்களையுமே சமூக நீதி ஒரு போதும் மன்னிக்காது.

இனியாவது அவர்களின் பங்கிற்கான மார்க்கங்களை கண்டறிவோம்.

**-பரந்தாமன்**


# தமது சொந்த மக்களிடம் செல்வாக்கை இழந்து வரும் மலையகக் கட்சிகள்...!

## ஒத்திவைப்புகள்

சிலவற்றைக்கண்ட பன்னிரண்டு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய மேல், மத்திய, ஊவா, சப்பிரகமுவ, வட மத்திய ஆகிய ஐந்து மாகாணங்களுக்குமான தேர்தல்கள் கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி நடந்து முடிந்துள்ளன. பலரின் எதிர்பார்ப்புகள் பலவற்றிற்கு மாறாக மலையக மக்களின் உணர்வுகளும், தேவைகளும் அமைந்துள்ளதை தெளிவாக உணர்த்திச் சென்ற தேர்தல் முடிவுகள் தேசிய ரீதியில் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை சுருக்கமாக தொட்டு செல்லல் பொருத்தமுடையதாகும்.

அடுத்ததாக ஐந்து மாகாணங்களில் வடமத்திய மாகாணம் தவிர்ந்த ஏனைய நான்கு மாகாணங்களிலும் மலையக மக்கள் வாழ்வதால் அவர்களின் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் பொழுது இத்தேர்தல் முடிவுகள் உணர்த்தி சென்றுள்ள சில உண்மைகளை கவனத்தில் எடுத்தல் அவசியமாகும்.

மலையகத்தை பொறுத்தமட்டில் தேசிய மற்றும் பெரும்பான்மை இன கட்சிகளுடன் மலையகக் கட்சிகளும் போட்டியிட்டன. 11 இலட்சம் வரையான மொத்த சனத்தொகையைக் கொண்ட மலையகத் தமிழரில் வாக்குரிமையுள்ளோரைக் கவர



போட்டியிட்ட மலையகக் கட்சிகளுள் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மயில் சின்னத்தில் தொ.தே.ச. உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரசை தலைமையாகக் கொண்டு 14 அமைப்புக்களின் கூட்டணியாக போட்டியிட்ட இந்திய வம்சாவளி மக்கள் பேரணி, மலையக மக்கள் முன்னணி என்பனவும் அடங்கும்.

வடமத்திய மாகாணம் மற்றும், மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டம் தவிர ஏனைய ஒன்பது மாவட்டங்களிலும் போட்டியிட்ட இ.வ.ம.பே. பெற்ற மொத்த வாக்குகள் 1,45,350. நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்ட ம.ம.மு. பெற்ற வாக்குகள் 25,369. இது இவ்விரு அமைப்புக்களையும் பொறுத்த மட்டில் திருப்திக்கொள்ள முடியாது. பலத்த தோல்வி என்றே கூறவேண்டும். ஏனெனில், இவ்விரு அமைப்புகளும், எண்ணிக்கை அடிப்படையில் யாழ். மாவட்டத்திற்கு அடுத்தபடியாக அதிக தமிழர்கள் வாழும் நுவரெலியா மாவட்டத்தில் முறையே இ.வ.ம.பே 69,441 வாக்குகளுடன் மூன்றாம் இடத்தையும், ம.ம.மு. 22,896 வாக்குகளுடன் நான்காம் இடத்தையும் பெற, ஐ.தே.க. 88,020 வாக்குகளுடன் முதலாம் இடத்தையும், பொ.ஐ.மு. 79,262 வாக்குகளுடன் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மலையகத் தமிழர்களின் சார்பில் சென்ற 1993ஆம் ஆண்டு மாகாண சபைத்தேர்தல்களின் போது மொத்தம் 21 உறுப்பினர்கள் தெரிவானார்கள். ஆனால், இம்முறை 13 அங்கத்தவர்களே தெரிவாகியுள்ளனர். இவற்றில் பாரிய இழப்பை கண்டு தோல்வியடைந்தது. இ.தொ.கா. கடந்த முறை ஐ.தே கவுடன் இணைந்து போட்டியிட்டு 17 உறுப்பினர்களைப் பெற்று இ.தொ.கா. இம்முறை 8 உறுப்பினர்களையே அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. (இ வ.ம.பே.இன் சார்பில் 9 உறுப்பினர்கள் தெரிவானாலும் கொழும்பு மாவட்டத்திலிருந்து வெற்றிபெற்றவர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.) மேலும், மலையக மக்களின் தனித்துவ தலைமை தாங்களே என கூறிவரும் இ.தொ.காவிற்கு இது ஒரு பாரிய பின்னடைவாகும். மொத்தம் 14 அமைப்புகளுடன் இணைந்து போட்டியிட்ட போதிலும் கிடைத்த வாக்குகள் 1,45,350. இ.தொ.கா தனித்து போட்டியிட்டிருந்தால் இதைவிடக் குறைவான வாக்குகளையே பெற்றிருக்கும். இது எதிர்கால மலையகத்திற்கும் தலைமை கொடுக்க நினைக்கும் இ. தொ.கா. மீதும், அதன் தலைமை மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதையே காட்டுகின்றது.

மேலும் இ.தொ.கா உள்ளிட்ட இ.வ.ம.பேரணியின் தோல்விக்கு பல காரணங்களை கூறலாம்.


- தலைவர்கள் இணைந்த போதிலும் தொண்டர்கள் இணையவில்லை.
- தேர்தல் காலத்தில் உருவாக்கப்பட்ட இ.வ.ம.பே. பெயர்பற்றி மக்களிடையே விளக்கமின்மை.
- மயில் சின்னம் தொடர்பாக போதிய தெளிவின்மை.
- இவ்வமைப்பின் ஒரு சிலர் தேர்தல் காலங்களிலும் புரிய துணிந்த வன்முறைகள்.
- போட்டியிட்டவர்களின் சுயநலம். பெரும்பாலும் தொடர்ந்து வந்த தேர்தல்களில் போட்டியிட்டவர்களே. இவர்கள் தேர்தல் காலங்களில் மட்டுமே மக்களைப் பற்றியும் அவர்களின் பிரச்சினைகளைப்பற்றி சிந்திக்க முற்பட்டனர்.
- தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் மீது கொள்ளும் நம்பிக்கையின்மை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் 25 இலட்சம் ரூபா. மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் 10 இலட்சம் ரூபா இவற்றால் இதுவரை மலையக மக்களுக்கு குறிப்பிட்டு சொல்லும் படியாக எதுவும் நடக்கவில்லை.
- இவ் அமைப்புகள் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி.
- மலையக மக்கள் சிந்திக்க தலைப்பட்டுள்ளமை. (வெறுமனே இனரீதியாக மட்டுமல்ல)
- பேரினவாத கட்கிகளுக்கு நிபந்தனையின்றி துணைபோனமை.

அடுத்ததாக மலையகத்திற்கு மாற்று தலைமை கொடுக்கப் புறப்பட்ட மலையக மக்கள் முன்னணியினர் (ம.ம.மு.), கடந்த மாகாண சபைத்தேர்தலில் ஒரு ஆசனத்தைப் பெற்றனர். இம்முறை இரு ஆசனங்கள். இது எதிர்பார்க்கப்பட்டதே. ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இவ் அமைப்பு நுவரெலியா மாவட்டத்தில் பெற்ற வாக்குகளைவிட இம்முறை குறைவாகவே பெற்றுள்ளது. மேலும், இவர்கள் போட்டியிட்ட இடங்களில் பெற்ற வாக்குகளைப் பார்க்கும்போது பெரிதாக வளர்ச்சிபோக்கு ஒன்றும் காணப்படவில்லை. இதற்கு பல காரணங்களைக் கூறலாம்.

- இ.தொ.காவிற்கு மாற்றாக புறப்பட்ட இவ் அமைப்பு இன்று ஒரு குட்டி இ.தொ.கா வாக மாறியுள்ளமை.
- புதுவேகத்துடன் புறப்பட்டவர்கள் இன்று சரணடைவு (பொ.ஐ.மு.) அரசியல் நடாத்துதல்.
- கட்சியின் உட்பூ சல்கள் வேட்பு மனு தாக்கலின்போது வெளிப்படையாக தெரிந்தமை.
- கட்சியின் தலைமைத்துவம் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் இருப்பதால் கட்சியை மக்களிடம் பிரபல்யமடைய செய்ய முடியாமை.
- தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சராக அதன் தலைவர் இருந்தபோதிலும் தோட்டபுறங்களில் அமைக்கப்படும் வீடுகளுக்கு பெரும்பாலும் மக்கள் அவர்களின் ஊழியர் சேமலாப நிதியிலிருந்து 17வீத வட்டியில் கடன் பெற வேண்டியுள்ளது. (பெரும்பான்மை இன மக்களுக்கு அரசாங்கத்தால் அமைத்துக் கொடுக்கப்படும் வீடுகள் பெரும்பாலும் முழுமையாக அரசாங்க செலவிலேயே செய்து கொடுக்கப்படுகிறது.) இதனால் இவர்களின் சேவையில் மக்களுக்கு திருப்தி ஏற்படாமை.
- படித்த இளைஞர்களுக்கும் இவ்வமைப்பிற்குமிடையிலான தூரம் அதிகரித்து செல்லல்.
- இவ்வமைப்பின் மீதும் தலைமை மீதும் மக்களுக்கு பெருமளவில் நம்பிக்கை ஏற்படாமை.

இவற்றைவிட பல புதிய அமைப்புக்களின் கூட்டணியான புதிய இடதுசாரி முன்னணியில் இணைந்து போட்டியிட்ட புதிய ஜனநாயக கட்சியும் மலையகத்தில் புதிய தலைமையை உருவாக்க முயன்றது. புதிய இடதுசாரி முன்னணி (பு.இ.மு.) மொத்தமாக ஏழு மாவட்டங்கில் போட்டியிட்டு 39,005 வாக்குகளைப் பெற்றது. கொழும்பு மாவட்டத்திலிருந்து இதன் தலைவர் கலாநிதி. விக்ரமபாகு கருணாரத்ன மட்டுமே வெற்றிபெற்றார். இவரது வெற்றியானது தமிழ் பேசும் மக்கள் அனைவராலும் வரவேற்கப்படும் ஒரு அம்சமாகும். அதேவேளை இவ்வமைப்பு நுவரெலியா மாவட்டத்தில் பெற்ற வாக்குகள் 3,541. இது முழுமையாக புதிய ஜனநாயக கட்சி (பு.ஜ.க.)க்காக போடப்பட்ட வாக்குகள் என்று கூறமுடியாது. ஏனெனில் இதில் புதிய சமத்துவ சமுதாய கட்சி (நவ சமசமாஜக் கட்சி)க்கும் குறிப்பிடத்தக்க வாக்குகள் உண்டு. பு.ஜ.கட்சியால் ஏன் பெருமளவிலான வாக்குகளை பெற முடியவில்லை என்பதை நோக்கும்போது சில விடயங்களை குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

- கட்சி பற்றி மக்களிடம் போதிய விளக்கமின்மை.
- ஒவ்வெரு தேர்தல்களிலும் இவர்கள் எடுக்கும் நிலைப்பாடு. மக்களிடம் இவ்வமைப்பு பற்றிய நற்சிந்தனையை ஏற்படுத்தாமை.
- தேர்தல் காலங்களில் மட்டும் மக்கள் முன் தென்படும் இவ்வமைப்பின் தலைவர்கள். இச்செயற்பாடானது மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்கவில்லை.
- இவ்வமைப்பு பற்றி உள்ள தப்பபிப்பிராயங்களை அகற்றாமை.
- கொள்கைவாதிகளான இவர்களின் கொள்கைகள். செயற்பாடுகள் பற்றி படிப்பறிவற்ற. குறைந்த படிப்பறிவுள்ள மலையக மக்களால் விளங்கிக் கொள்ள



முடியாமை.

ஐ.தே.கவைப் பொறுத்தமட்டில் கடந்த முறை வெற்றிபெற்ற மலையகத் தமிழர் இருவரும் இம்முறையும் வெற்றிபெற்றுள்ளனர். அத்துடன் மலையகத் தமிழர்கள் வாழும் சகல இடங்களிலும் இக்கட்சி வெற்றிபெற்றுள்ளது. அல்லது பெரும் எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுள்ளது. இது மலையக மக்கள் ஐ.தே.க. மீது பூரண நம்பிக்கைக் கொண்டுள்ளனர் என்றோ, அக்கட்சி கடந்த காலத்தில் இம்மக்களை ஏமாற்றியதை மறந்துவிட்டனர் என்றோ பொருள்படாது. காத்திரமான ஒரு மாற்று சக்தி இல்லாததனால் பழக்கப்பட்ட யானைக்கே புள்ளடி இட்டுள்ளனர்.

மேலும் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் வீதத்தினைப் பார்க்கும்போது நுவரெலியா மாவட்டமே முதலிடம் பெறுகிறது. நுவரெலியா மாவட்டத்தில் மொத்தம் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 30,853 ஆகும். இது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 10.96வீதம் ஆகும். இது இம்மக்களுக்கு வாக்களிப்பு முறை பற்றியத் தெளிவின்மை மற்றும் வேட்பாளர்களும், தேர்தல் திணைக்களமும் மக்களுக்கு வாக்களிப்பு முறைப்பற்றி விளக்கக் கூடிய அக்கறைக் காட்டவில்லை என்பதுடன் மக்கள் தங்கள் அதிருப்தியை காட்ட வேண்டுமென்றே வாக்குச்சீட்டைச் செல்லுபடியற்றதாக்கியிருக்கலாம் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது.

அதேபோன்று தேர்தல்களின் பின் பல சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒரு சிலவற்றையும் சுட்டிகாட்டுதல் பொறுத்தமுடையதாகும்.

- தேர்தல்கள் முடிந்த கையோடு தொ.தே.ச. தலைவர் தவசிதேவர் ஐய்யாத்துரை அவர்கள் 'இன்று தேர்தலுக்காக அமைக்கப்பட்ட இ.வ.ம.பேரணியின் சகல நடவடிக்கைகளிலிருந்தும் விடுபட்டு. தொ.தே.ச. அதன் தனித்துவத்தை பாதுகாத்து எதிர்காலத்தில் பலமான உண்மையான மக்கள் சக்திகொண்ட அமைப்புக்களைக் கொண்ட கூட்டணி அமைத்து மலையகத்திற்கு பணியாற்றுவோம்' என்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையிலே கூறியுள்ளார்.
- இது எத்னை புலப்படுத்துகின்றதென்றால். இ.வ.ம.பே. தேர்தல்களுக்காக அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு என்பதுடன் அதற்குள் பூ சல்கள் காணப்படுகின்றது என்பதுமாகும்.
- அடுத்த தேர்தலில் இ.தொ.காவின் படுதோல்வியைப் பொறுக்கமாட்டாது. 'கொழும்புத் தமிழர்கள் சுயநலவாதிகள்' என்று இ.தொ.கா. தலைவர் குறிப்பிட்டுள்ளார். இவரின் கூற்றைப் பார்க்கும்போது தேர்தல்களின்போது மக்கள் தங்கள் விருப்பு வெறுப்புக்களைக் கைவிட்டு இ.தொ.காவிற்கு தான் வாக்களிக்க வேண்டும் என்ற கட்டாய விதியொன்று இருப்பது போல் அல்லவா உள்ளது ஆனால். சுயநலத்திற்காக இ.தொ.காவி ார் காலத்திற்கு காலம் எத்தகைய முடிவையும் எடுக்கலாம்.
- வெற்றிக்காக உழைத்த பலர் தேர்தல்களின் பின் அவ்வமைப்பின் வெற்றிபெற்ற இரு அங்கத்தவர்களில் ஒருவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பதால் திருப்தியற்ற நிலையில் பல விளக்கங்களை சொல்லி அவர்களே சமாதானமடைந்து கொள்கின்றனர். இங்கு எழும் வினா என்னவென்றால். பெரும்பான்மை இனத்தவர்களுக்கு எவ்வித தயக்கமுமின்றி வாக்களிப்பவர்களுக்கு ஏன் மற்றுமொரு தமிழன் வெற்றி பெறுவதை பொறுக்கமுடியவில்லை. இது போட்டியா? பொறாமையா?

இவையாவற்றையும் நோக்கும்போது தெளிவாக தெரியும் விடயம் யாதெனில், ஏனைய சமூகங்களை பொறுத்தவரையில் மாற்று அரசியல் தலைமை/ அமைப்பு காணப்படுகின்ற அதேவேளை மலையக மக்கள் தங்கள் மாற்று அரசியல் தலைமை/ அமைப்புக்களிலும் நம்பிக்கை இழந்த நிலையில், 21ம் நூற்றாண்டிற்கு தங்களை வழிநடாத்தக் கூடிய சுய நோக்கமற்ற மக்களின் உணர்வுகளையும், தேவைகளையும் தெளிவாக புரிந்து கொண்ட உறுதியான ஒரு புதிய தலைமைத்துவத்தின் அவசியத்தையே நடந்து முடிந்த மாகாண சபைத்தேர்தல்கள் தெட்டத்தெளிவாக உணர்த்துகின்றது.

**இடையன்**

நன்றி - நூலகத்திட்டம்



**மாணிக்கதாசன்:**

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) இராணுவத் துறைப் பொறுப்பாளராக மாணிக்க தாசன் சொல்லப்படுகின்ற போதும் இன்று அவ்வியக்கத்தின் முழுக் கட்டுப்பாடும் இவரின் கீழேயே இருப்பது இரகசியமல்ல. புளொட் இயக்கம் குறித்த பல்வேறு விமர்சனங்கள் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பளின்றன, அடிப்படையில் அவ்விமர்சனங்களின் சாராம்சம். எதிரியோடு சேர்ந்து செயற்படுவது, மற்றும் மக்களுக்கு துரோமிழைத்து வருவது, இவ்விமர்சனங்கள் குறித்து ·சம்பவங்களாக வினாக்களைத் தொடுக்காது அடிப்படையான அரசியல் கேள்விகளாகவே இந்த பேட்டி தயாரிக்கப்பட்டது. கேள்விகளைக் கேட்பது எங்களின் கடமை. அதற்கு பதில் தருவது அவரின் பொறுப்பு. மற்றவை வாசகர்களின் சுதந்திரம்.**

**கழகம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்திலிருந்து தற்போதைய அதன் நடவடிக்கைகள் தலைகீழாக மாறி இருப்பதாகவும். அது இன்று துரோகக் கும்பலாக ஆகியிருக்கிறது என்றும் எழுந்துள்ளற பரவலான குற்றச்சாட்டுக் குறித்து உத்தியோக பூர்வமாக என்ன கூறுவீர்கள்?**

எமது அரசியல் மற்றும் இராணுவச் செயற்பாட்டில் எதை எடுத்துக் கொண்டாலும் நாங்கள் அரசோடு இணைந்தது கிடையாது. ஒரு பரந்த வெகுஜன அமைப்பாக ஒருகாலத்தில் நாங்கள் இருந்தது உண்மை தான். தவிர்க்க முடியாமல் ஆயுதம் தரித்துப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டோம். எமது ஆயுதமயமாக்கலில் ஏற்பட்ட தாமதம் புலிகளுக்கு வெற்றியை ஏற்படுத்தி விட்டது. போராட்டத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு இயக்கமும் பலம்பெற்று முன்னுக்கு வந்த வரலாற்றைக் காண்கின்றோம். புளொட் ஒரு கட்டத்திலும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஒரு கட்டத்திலும் இன்னொரு கட்டத்தில் டெலோ என்றும் ஏன் ஒரு கட்டத்தில் புலியுமாக இந்த வகையான செல்வாக்கு, ஆதரவு பெறுதல் தளப்பிரதேசங்களை கொண்டிருத்தல் போன்றவற்றைக் காணலாம். இந்தக் காலகட்டத்தில் புலிகள் தங்களின் பாசிசத்தைப் பயன்படுத்தி ஏனைய இயக்கங்களை நசுக்கி தம்மைத் தாமே தலைமைக்குக் கொண்டு வந்து விட்டனர். சுழற்சிமுறையில் இந்தத் தலைமைகள் மாறிய நிலை போய் ஒரு கட்டத்தில் புலிகள் தம்மை நிரந்தரமாக்கிக் கொண்டனர். இவ்வாறான சூழ்நிலைகளுக்கு மக்கள் ஆதரவும் இருக்கத் தான் செய்யும். ஆனால் அதன் அர்த்தம் மக்களின் உண்மையான தலைமை அது தான் என்பதோ அல்லது அவர்களின் வழிமுறை தான் சரியென்பதோ ஏனைய இயக்கங்கள் தவறானவை, தமிழின விடுதலைக்கு எதிரானவை என்பதோ அல்ல.

எமது போராட்டத்தைப் பொறுத்த வரை ஆயுதந் தாங்கிய எதிர்ப்புகளை போர் என்றும் அரசியல் ரீதியான போராட்டத்தை போராட்டம் என்றும் தான் நாங்கள் அழைக்கிறோம். இன்றைய நிலையில் பாசிசத்தின் உச்சக் கட்டத்துக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், புலிகளும் நிலை கொண்டுள்ள பகுதியில் இருந்து கொண்டு புலி உறுப்பினர்கள் எவரையும் விமர்சிக்க முடியாத சூழலில் அரசியல் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் மாறாக தென்னிலங்கையில் ஆசை தீருமட்டும் ஜனாதிபதியையோ ஏனைய அரசியல் வாதிகளையோ கடுமையாகத் தாக்கி விமர்சிக்கக் கூடிய வாய்ப்புகள் உண்டு. எந்த வழிமுறைக்கூடாக வடகிழக்குப் பிரதேசத்தில் நாங்கள் காலூன்றி நிற்க முடியுமோ அந்த வழிமுறையைப் பாவித்தே நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம்.

இந்திய இராணுவம் இருக்கும் போது புலிகள் அரசுடன் நெருக்கமாக இருந்த போது நாங்கள் கொழும்பில் கூட சுதந்திரமாக உலாவ முடியாத நிலையில் தான் இருந்தோம். எமது உறுப்பினர்கள் வத்தளையில் ரயர் போட்டு புலிகளால் எரிக்கப்பட்டனர். எம்மில் பலர் இந்தியாவை நோக்கிப் பின்வாங்க நேரிட்டது. ஆனால் என்றோ ஒரு நாள் இந்தியாவும் புலிகளும் மோதிக் கொள்வார்கள் என்பதை உணர்ந்தோம். கிழக்கும் கிழக்கும், அல்லது மைனசும் மைனசும் ஒன்று சேருவதில்லை அல்லவா? இரு தரப்பும் மோதல் ஏற்பட்ட போது நாங்கள் இராணுவ உயர் அதிகாரி களுடன் தொடர்பு கொண்டு பேசி திரும்பி வந்து எமது பிரதேசங்களில் செயற்பட ஆரம்பித்தோம்.

அதிலிருந்து எமக்கான தனித்துவமான போக்கைத் தான் கடைப்பிடித்து வருகிறோம். இன்று அரசும் புலிகளை எதிர்க்கிறது. நாங்களும் புலிகளை எதிர்க்கிறோம். ஆனால் இவை இரண்டுக்குமிடையில் அடிப்படையில் வித்தியாசம் உண்டு. புலிகள் எங்களை எதிர்ப்பதால் தான் நாங்களும் எதிர்த்து நிற்க வேண்டியேற்பட்டுள்ளது. எனவே தான் வெளிப் பார்வைக்கு தோன்றுவதை வைத்துக் கொண்டு நாங்கள் படையுடன் சேர்ந்து செயற்படுகிறோம் என்று கூறுவது பிரச்சார ரீதியில் எவருக்கும் வசதியாக இருக்கும். ஆனால் அரசுடன் எவ்வளவு முரண்பட்டு செயற்படுகிறோம் என்பது வெளிக் கொணரப் படுவதில்லை. நாங்கள் எத்தனையோ தடவைகள் பொலிசுக்கு அடித்திருக்கி றோம். இராணுவத்துக்கு அடித்திருக்கி றோம். அப்படி அடித்த எத்தனையோ எங்களின் உறுப்பினர்கள் இன்னமும் சிறைகளில் இருந்து வருகிறார்கள். புலிகளின் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தொடர்பூடகங்கள் எங்களின் இந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. அரசாங்கத்துக்கு எதிராக எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறோம். 1952க்குப் பின்னர் பாராளுமன்றத்துக்கு முன்னால் இருந்து உண்ணாவிரதம் மேற் கொண்ட கட்சி நாங்கள் தான். வவுனியாவில் எல்லைப்புறங்களில் அரசாங்கத்தால் செய்ய முனைந்த எத்தனையோ குடியேற்றங்களைத் தடுத்து அந்த இடங்களிலேயே நிறுத்தி விட்டுள்ளோம். ஆனால் புலிகளின் பலமான பிரச்சார இயந்திரங்களால் தான் இவை மறைக்கப்பட்டு விட்டன.

**புலிகள் ஒரு கட்டத்தில் தங்களை பலப்படுத்தி அதனையே நிரந்தரமாக்கிக் கொண்டதாகக் கூறினீர்கள். அந்நிலைமை புலிகளின் பலத்தால் ஏற்பட்டதா அல்லது கழகத்தின் பலவீனத்தால் ஏற்பட்டதா?**

ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு இயக்கமும் பலம் பெற்றபோதும் அவை சக இயக்கங்களுக்கு எதிராக பாசிசத்தைப் பாவித்து இருப்பை உறுதி செய்யவில்லை. அதைச் செய்தவர்கள் புலிகள் தான். அதன் மூலம் தான் அவர்கள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள முடிந்தது.

**உங்களின் கருத்து இராணுவ ரீதியிலான விடயத்தில் பொருந்தக் கூடும். ஆனால் அரசியல் ரீதியில் உங்கள் பலம் நிரூபிக்கப்படவில்லையே?**

புலிகள் மட்டுமென்ன அரசியல் ரீதியில் பலம் பெற்றவர்களா? அவர்களின் பலமும் இராணுவப் பலம் தான். அவர்களின் உறுப்பினர்கள் அல்லது அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் அரசியல் மயப்படுத்தப் பட்டவர்களா என்ன? போராட்டத்தைப் பொறுத்தவரை ஆரம்பத்திலிருந்தே மக்களை அரசியல் மயப்படுத்துவதில் புளொட், ஈ.பி.ஆர்எல்.ப்., ஓரளவில் ஈரோஸ் ஆகியவை தான் அக்கறைகாட்டி வந்துள்ளன. புலிகள் ஒரு கட்டத்துக்கு மேல் வளரமுடியாமலிருப்பதும் இந்தக் குறைபாட்டால் தான்.

**அரசியல் ரீதியில் கழகம் மற்றும் தமிழ் இயக்கங்களுக்கு இருக்கும் ஆதரவுக்கும் புலிகளின் மீது இருக்கும் ஆதரவுக்கு மிடையில் வித்தியாசம் இருக்கிறது அல்லவா?**


புலிகள் தங்களின் இராணுவப் பலத்தை தமிழ் இயக்கங்கள் மீது திருப்பி விட்டார்கள். ஏனைய இயக்கங்கள் அவ்வாறு செய்து தங்களை நிலை நிறுத்திக் கொண்டதில்லை.

**சரி. இப்படிக் கேட்டால். இன்று கழகத்தில் உள்ள உறுப்பினர்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டவர்களா?**

எல்லோரும் அரசியல் மயப்படுத்தப் பட்டவர்கள் என்று கூறமுடியாது. ஆனால் இராணுவப் பிரிவில் உள்ளவர்களுக்கு தேவையான அரசியல் வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ஆயுதம் ஏந்துவதன் நோக்கம்? யாருக்கு எதிராக அதனைப் பயன்படுத்த வேண்டும்? போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கல்வி வழங்கப் பட்டுள்ளது.

**அரசியல் துறைக்கும். இராணுவத் துறைக்குமிடையிலான உறவு எப்படிப் பட்டதாக இருக்க வேண்டுமென நீங்கள் நினைக்கிறீர்கள்?**

இரண்டையும் வேறுவேறாகப் பிரிக்க முடியாது. அரசியல் இலக்குகளுக்கு அமையத் தான் இராணுவ வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். இராணுவ ரீதியான செயற்பாட்டை நியாயப்படுத்தும் நோக்குடன் அரசியல் பிரிவை நடாத்த முடியாது. இவை இரண்டுக்கு மிடையிலான உறவுகள் ஒன்றுடன் ஒன்று விட்டுப் பிரியாததாக இருப்பது அவசியம். ஆனால் இன்றைய யுத்தசூழ்நிலையின் காரணமாக இராணுவ ரீதியான அலோசனைக்கிணங்க அரசியல் வியூகங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்பதும் அத்தியாவசியமானது. இன்று இதே போன்ற முறையைத் தான் இலங்கை இராணுவத்திலும் கடைப்பிடிக்கிறார்கள். பிரிகேடியர் மட்டத்திலுள்ள ஒருவர் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஏனைய சிவில் நிலைமைகளின் சாதக பாதகங்களைக் கருத்திற்கொண்டே இராணுவ விவகாரங்களை நகர்த்துகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



**ஏனைய இயக்கங்களோடு ஒப்பிடுகையில் கழகத்தில் . அரசியல் துறையைவிட இராணுவத்துறைக்கே அதிகம் முக்கியத்துவம் வழங்கப் படுவதாக கூறப்படுகின்ற குற்றச்சாட்டுக் குறித்து...?**

நேரடியாக பாசிசத்துக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் இராணுவத்துறையின் செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் அரசியற்துறை அதனைக் கட்டுப்படுத்த முடியாது. அரசியல் ரீதியான செல்வாக்குக்கு எவ்வளவு தூரம் அனுமதிப்பது என்பதை அப்படிப்பட்ட நடைமுறைதான் தீர்மானிக்க முடியும்.

## “ தீர்வு முயற்சிக்குத்தான் நாம் ஆதரவளித்தோமே தவிர தீர்வுப் பொதிக்கல்ல ”

**- புளொட் மாணிக்கதாசன்**

**சமீபத்தில் கூட கழகத்தின் இராணுவ செயற்பாடுகள் குறித்து அரசியல் பிரிவிடம் கேள்வி கேட்க வேண்டாமென கழகத்தின் அரசியற் பிரமுகர் கூறியிருக்கிறார். அப்படியென்றால் இராணுவச் செயற்பாடு குறித்து அரசியல் ரீதியில் பொறுப்பு கூற மாட்டோம் என்றல்லவா அர்த்தம்?**

அப்படியில்லை. கட்டுப்பாடும், இறுக்கமும் கொண்ட இராணுவமாக இருக்கும் பட்சத்தில் அவ்வாறு ஏற்பட வாய்ப்பில்லை. இன்று பிரபாகரனுக்கு இருக்கின்ற தலையிடியை விட எமக்குத் தான் அதிகம். ஏனென்றால் நாங்கள் மக்கள் மத்தியில் இருந்து வருகிறோம். மக்களுக்கும், சிவில் அமைப்புகளுக்கும் பதில் கூறிவருகிறோம். வருஷத்துக்கு ஒரு தடவை கதைக்கும் புலிகளுக்கு இந்தசிரமங்கள் தெரியாது.

**சரி. கடந்த ஒரு தசாப்த காலமாக நீங்கள் எவ்வாறான அரசியல் வெற்றிகளை அடைந்திருக்கிறீர்கள்?**

அரசாங்கம் செய்ய முயற்சித்த குடியேற்றங்கள் பலவற்றைத் தடுத் திருக்கிறோம். ஜெனரல் கொப்பேகடுவவுக்கூடாகவும் இந்த முயற்சிகள் இகசியமாக செய்யப்பட்ட வேளை நாங்கள் கடுமையாக எதிர்த்து நின்று அதனை செய்ய விடவில்லை. அதில் எங்களுக்குப் பெரும் திருப்தி. அவ்வாறான தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளில் சின்ன வயசு கல்வியறிவற்ற பெடியன்களே சமயோசிதமாக மேற்கொண்டனர். அதேவேளை நாங்கள் ஏறத்தாழ 12 தமிழ் குடியேற்றங்களை எல்லைப்புறங்களில் நிறுவியிருக்கிறோம். அவற்றுக்கூடாக கிராமங்கள் சிலவற்றை உருவாக்கி யிருக்கிறோம்.

**வேறு...?**

வேறு... சிரமதானங்கள், கணவர் இழந்தவர்கள் மற்றும் அகதிகளுக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள், நோயாளர் களுக்கான உதவிகள், வசதியிழந்தவர்கள் தங்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு உதவி , மாரி காலங்களில் அடிமட்ட மக்களுக்கு ஆயிரக்கணக்கான கிடுகுகளை விநியோகித்து வருகிறோம். மக்கள் கடைகள் சிலவற்றை அமைத்து வருகிறோம்.

**ஒரு தசாப்த காலமாக நீங்கள் செய்ததாகக் கூறிய மேற்படி செயற் பாடுகள் குறித்து நீங்கள் திருப்தி காண்கிறீர்களா?**

திருப்தி கண்டதால் தான் மக்கள் எங்களிடம் பிரதேச சபையையும் மூன்று பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் தந்திருக்கிறார்கள். மக்கள் திரும்பிக் கொண்டிருப்பதன் சமிக்ஞை தான் அவை.

**நீங்கள் செய்ததாக் கூறிய சில சீர்திருத்த நடவடிக்கைகளை கருத்திற் கொள்ளும் போது ஒரு போராளி இயக்கத்தின் கொள்ளளவு இவ்வளவு தானா என்கின்ற கேள்வி எழுகிறது அல்லவா?**

அவ்வளவு மட்டுமல்ல. ஜனநாயக வழிக்கு வந்த ஏனைய இயக்கங்களோடு ஒப்பிடுகையில் நாங்கள் தான் மக்களின் பல பிரச்சினைகள் குறித்து ஜனநாயக ரீதியில் போராடியிருக்கிறோம். உண்ணாவிரதங்கள், கடையடைப்புகள் என எங்களின் எதிர்ப்புக்களைத் தெரிவித்து வந்திருக்கிறோம். சர்வதேச ரீதியில் இடம் பெற்று வரும் ஏகாதிபத்திய நடவடிக்கைகளை எதிர்த்தும் நாங்கள் ஆர்ப்பாட்டங்கள் பல நடத்தியிருக்கி றோம். போரில் நாங்கள் ஈடுபட முடியா விட்டாலும் போராட்டத்தில் நின்று கொண்டு தான் இருக்கிறோம். சுழற்சி அடிப்படையில் மீண்டும் நாங்கள் போருக்கும் தள்ளப்படலாம். அந்த சுழற்சியின் அடிப்படையில் நாங்களும் புலிகளும் ஒன்றாக செயற்படும் நிலைமையும் ஏற்படலாம். ஒரு சுழற்சி முறையில் இராணுவத்துடன் இருக்கத் தள்ளப்பட்டுள்ளோம்.

**ஏன் பழைய நிலைக்குப் போக முடியாது?**

அந் நிலைமைக்கு போதிய வாய்ப்பு கிடைத்தால் நாங்கள் போருக்கும், போராட்டத்துக்கும் தயாராக இருப்போம்.

இன்று ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற இயக்கங்கள் இராணுவ ரீதியில் தயாராவதற்கு இருக்கக்கூடிய பிரச்சினை எமக்கு இல்லை. எமக்கு நிறைந்த அனுபவம், தளப்பிரதேசம், வழிநடத்தல், இராணுவத்துறை சார்ந்த அறிவு என்பவை உண்டு. எங்களுக்கு அது இலகுவானது.

**சரி. கழகத்தின் ஆரம்ப கால அரசியல் இலக்கான "தமிழீழம். சோஷலிசம்" என்பவை இன்றும் செல்லுபடியானவை தானா?**

"பெரியவரின்" உண்மையான நோக்கம் வர்க்க ரீதியானது தான். சோஷலிசத் தமிழீழத்தை அடைய வேண்டுமென்பது தான் அவரின் இறுதி லட்சியமாக இருந்தது. அவர் இருந்த போது அதற்கேற்றவகையில் தான் கட்சியை வழிநடத்தினார். தென்னாசியா வில் ஒரு மோசமான ஏகாதிபத்திய சக்தியாகவே இந்தியாவையும் அவர் அடையாளம் கண்டார். அதன் அடிப்படையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்க்காத அதே வேளை அதனை ஏற்கவும் மறுத்தார். அது இரு நாடுகளின் வர்க்க நலன் சார்ந்த ஒப்பந்தம் என்பது அவரது கருத்தாக இருந்தது. அவரது கருத்துக்களின் வளர்ச்சியாகத் தான் தமக்கு எதிர்காலத்தில் ஒரு சாத்தியமான, சாதகமான நாடு தேவையென்பதால்

→

நன்றி - நூலகத்திட்டம்



மாலைத்தீவுப் புரட்சியை மேற்கொண்டோம்.

தமிழீழத்துக்கு ஆதரவான ஒரு நாட்டுக்கு தமிழீழம் பிரிவதால் அந் நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமைகள் ஸ்திரத்தன்மைகள் குழப்பமடையாத பின்தளம் ஒன்று தேவையென்பதால் தான் மாலைதீவுப் புரட்சி மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழப் போராட்டம் குறித்த மாறு பட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் ஜே.வி.பி.யுடன் கூட உறவுகளை வளர்த்து பரஸ்பர உதவிகளைப் பரிமாறிக் கொண்டதும் இந்த வர்க்க நோக்கத்துடன் தான். அந்த நோக்கிலிருந்து நாங்கள் இந்திய இராணுவம் இருந்த காலத்தில் நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறியபோது பழைய ஆயுதங்களை வேண்டிக் கொண்டு புதிய ஆயுதங்களை ட்ரக்டர் ட்ரக்டராக அள்ளித் திணித்தார்கள். இலங்கை அரசாங்கத்திடம் ஜனநாயக வழிக்கு வந்துவிட்டதாகக் கூறியபோது அவர்களும் ஆயுதங்களை அள்ளித் தந்தார்கள். பின் எப்படி ஜனநாயக வழிக்கு வந்ததாகக் கூற முடியும். நாங்கள் விரும்பினாலும் இந்த அரசுகள் எங்களை விடப்போவதில்லை. இன்று ஆயுதங்களை பாசிசத்துக்கு எதிராகவும், அதே வேளை பொது எதிரியுடன் தந்திரோபாய ரீதியிலான உறவையும் கொண்டியங்கி வருகிறோம்.

## ❛❛ ஸ்ரீலங்கா ராணுவமே எங்கள் எதிரி! தமிழீழமே எங்கள் இலக்கு!

விலகவில்லை. அந்த அடிப்படையில் தான் நாங்கள் இன்னமும் வவுனியாவில் பல இடங்களில் கூட்டுறவுப் பண்ணை களை நடாத்தி வருகிறோம்.

**தமிழீழ இலக்கில் இன்றைய உத்தியோபூர்வ நிலைப்பாடு என்ன?**

அந்தப் பதத்தை நேரடியாகப் பாவித்து அரசியல் செய்ய முடியாத, ஆயுதம் தாங்கிப் போராட முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஆயுதம் தரிப்பது அவசியம். பிரச்சினை தீர்க்கப்படும் வரை ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாதது தான். அதற்காகத் தான் படைப் பிரிவினை நாங்கள் தொடர்ந்து வைத்திருக்கிறோம்.

**சரி இப்படிக் கேட்கிறேன். இன்று கழகம் என்கின்ற ஒரு இயக்கம் ஏன் தேவை?**

முன்னர் கூறியதைப் போல சுழற்சி அடிப்படையில் மீண்டும் நாங்கள் போர்புரியும் காலம் ஏற்படலாம். இன்றைய நிலையில் நிரந்தரமான ஒரு இலக்கைத் தீர்மானிக்க முடியாது.

**அப்படியென்றால் தமிழீழம் இலக்காக இருக்க முடியாது...?**

தமிமீழம் தானே எங்கள் நோக்கம். அதற்காகத் தான் நாங்கள் புறப்பட்டோம். அர்ப்பணிப்பு, தியாகம் எல்லாமே அதற்காகத் தானே. பிரபாகரன் சில வேளை செத்தால் அப்போது ஏற்படும் இடைவெளி, அலலது போராட்டத்தில் ஒரு மந்தகதியான நிலைமை தோன்றினால் நாங்கள் முழுமையாக இறங்கும் முயற்சி தோன்றலாம். இன்று யோராட்டம் திசை திரும்பிய நிலையில் அதனை நிறுத்தி விட்டுத் தான் திருப்பி சரியான வழியில் இயக்க வேண்டும்.

**அப்படியென்றால் இன்றுகூட உங்களின் பொது எதிரியாக...?**

என்றென்றைக்கும் எங்களின் பொது எதிரி ஸ்ரீ லங்கா இராணுவம் தான்.

**இராணுவமா? அரசா?**

அரசு தான்.

**ஆனால் இன்று அந்த அரசுக்கும் இராணுவத்துக்கும் அல்லவா ஆதரவு வழங்கி வருகிறீர்கள்?**

இலங்கை பாராளுமன்றத்தில் இருப்பதால் நாங்கள் அரசு சார்பானவர்களா?

**ஆனால் அதன் மூலம் இந்த கட்டமைப்பை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் என்று கூறினால்?**

நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் பாராளுமன்றத்திற்குள் பிரவேசிப்பதில் ஒன்றும் தவறில்லை. அந்த ஆசனங்களைப் பயன்படுத்துவதில் தான் எங்களின் வெற்றி தங்கியுள்ளது. அதனை எமது உரிமைக் குரலெழுப்பு வதற்காகப் பயன்படுத்துவதை விட்டு விட்டுத் தமது சொந்த மகிழ்ச்சிக்காகவும் சுயலாபங்களுக்காகவும் பயன்படுத்துவது தான் பிரச்சினைக்குரியது. எங்களுக்கு இருக்கிற இரத்தக்கொதிப்போ உணர்வோ எமது பாராளுமன்ற ஆசனங்களில் உள்ளவர்களுக்கு இல்லைத்தான். அது குறித்து எமது கட்சியில் பிரச்சினைகள் உண்டு.

**நீங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியதன் பின்...?**

இல்லை, நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பவில்லை. ஜனநாயக வழிக்கு வந்தால் நாங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டும்.

**அவ் ஆயதங்கள் நீங்கள் குறிப்பிடும் எதிரிக்கு எதிராகத் திருப்பப்படாமல் போராட்டத்துக்கு எதிராக திருப்பப்படுவதாக அல்லவா குற்றம் சுமத்தப்படுகிறது?**

எங்களை இந்த நிலைமைக்குத் தள்ளிய பொறுப்பை புலிகள் ஏற்க வேண்டும். அப்படிக் கொண்டு வந்து விட்டு அரசோடு நிற்கிறாகள் என்கின்ற குற்றச்சாட்டை சுமத்துவதற்கு புலிகளுக்கு தார்மீக உரிமை கிடையாது.மீண்டும் தமது பிரதேசங்களில் சென்று போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தமிழ் இயக்கங்கள் தயாரானால் அதனைப் புலிகள் அனுமதிப்பார்களா? தம்மால் துரத்தப்பட்ட முஸ்லிம்களையே திருப்பி அழைக்காத புலிகள் எப்படி ஏனைய இயக்கங்களை அனுமதிப்பர்? டெலோவை புலிகள் வேட்டையாடத் தொடங்கிய போது டெலோ அரசோடு இருக்க வில்லை. மக்களோடு இருந்த காலத்தில் தான் புலிகள் நசுக்கத் தொடங்கினர். ஈ.பி.ஆர்.-எல்.எப்க்கும் அதே நிலைமை தான். இந்த நிலைமையில் நாங்கள் மக்களோடு நிற்பதற்கு ஒரு பிரதேசம் வேண்டியிருக்கிறது. தற்காலிகமாக இராணுவம் நிலை கொண்டிருக்கிற பிரதேசத்தில் நாங்கள் நிலை கொண்டிருக்கிறோம் . அவ்வளவு தான்.

**சரி. புலிகளின் மீதான அழித் தொழிப்பு நடவடிக்கைகளில் கழகமும் ஈடுபட்டு வருவதாகச் சொன்னால்..?**

நாங்கள் புலிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி அழித்தொழிப்பில் ஈடுபட்டதில்லை. அவர்களிடம் இருந்து எங்களை தற்காத்துக் கொள்வதற்கான சந்தர்ப் பங்களில் மாத்திரம் தான் அவர்களுக்கு எதிராக ஆயுதம் துாக்கப்பட்டுள்ளது.

**இராணுவ சோதனை நடவடிக்கை களில் சேர்ந்து கூட்டாக செயற்படுகிறீகள் அல்லவா?**

சுற்றி வளைப்புகளுக்கு ஒரு போதும் கழகம் போவது கிடையாது. ஆனால் நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் போன்ற பிரதான இராணுவ சோதனை சாவடிகளில் கழக உறுப்பினர்கள் இருத்தப்பட்டுள்ளனர். அதற்கான காரணம் மக்களை உறுதிப்படுத்தி மக்களுக்கு சிரமமேற்படாமல் அனுப்ப வேண்டியுள்ளது. அவர்கள் புலிகளின் பிரதேசத்திலிருந்து வரும் எல்லோரையும் சந்தேகப்படுகிறார்கள். புலி வருது புலி வருது என்று தான் பார்க்கிறார்கள். சில வேளைகளில் புலிகளும் வந்திருக் கிறார்கள். பிடிபட்ட எத்தனையோ புலிகளைக் கூட நாங்கள் வெளியில் எடுத்து விட்டிருக்கிறோம். அதனைச் சொன்னால் வெளியுலகம் நம்பாது. புலிகள் எங்களை துரோகிகள் என்று தான் முத்திரை குத்தி வைத்துள்ளது.

**உங்கள் இலக்கு எனக் கூறும் தமிழீழத்தை பாராளுமன்ற வழிமுறைக் கூடாக அடைய முடியுமென்கின்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?**

பாராளுமன்றங்களுக்கூடாகவும் இணக்கங்கள் காணப்படலாம். அதற்கு உலகில் ஏகப்பட்ட விடுதலைப் போராட்ட அனுபவங்களும் உண்டு. ஆனால் ஆசியச் சூழலில் அதற்கான வாய்ப்புகள் குறைவு. அனைத்து உரிமைகளையும் கொண்ட தமிழீழத்தை இந்தப் பாராளுமன்ற வழிமுறைக்கூடாகப் பெறமுடியாது.

**தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்ற சந்தேகம், கைது, தடுப்பு, சித்திரவதை என்பனவற்றுக்கு காரணமாகவுள்ள அவசரகால சட்டத்துக்கு உங்கள் இயக்கம் ஆதரவு அளித்து வந்தது பற்றி...?**

எந்தக் காலத்திலும் ஆதரவு வழங்கவில்லை. ஈபி.டி.பி. மட்டும் தான் தமிழ் இயக்கங்களில் அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவளித்து வருகிறது. மற்றும்படி கூட்டணி எதிர்த்து வாக்களிக்கிறது.

**அவசரகாலச் சட்டம் தொடர்பான கழகத்தின் நிலைப்பாடு என்ன?**

தமிழ் மக்களை நசுக்கப் பாவிக்கப்படும் இந்தச் சட்டத்துக்கு தமிழ் எம்பி.க்கள் ஆதரவளிப்பது பெரும் முட்டாள்தனம்.

**இந்த அரசாங்கம் பதவியேற்ற முதல் இருவருடங்களாக கழகம் ஆதரவளித்துத் தானே வந்திருக்கிறது?**

கழகத்திலுள்ள சில மிதவாதப் போக்கின் விளைவாகவும் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

**அந்தளவுக்கு கழகத்தின் அரசியல் சீரழிந்துள்ளதாகக் கூறலாமா?**

அரசியல் பிரிவுக்குள் சில முரண்பாடுகள் உண்டு தான். ஆனால் அவை குறித்து மேலதிகமாகப் பேச விரும்பவில்லை.

**சம்பவமாகக் கூறாமல் சிக்கலை மாத்திரம் கூறுங்களேன்?**

நாங்கள் பாசிச இயக்கம் இல்லையே. ஜனநாயக இயக்கம். அந்த விதத்தில். மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் எமது இயக்கத்தில் இருக்கிறது. அந்த வகையில் ஏற்படுகின்ற வாக்குவாதங்கள் சில முரண்பாடுகளை தோற்றுவித்து விடுகின்றன.

**இயக்கத்தில் அரசியல் விவாதங் களுக்கான வழிகள் இருக்கின்றன அப்படியா?**

ஆம், அதன் காரணமாகத் தான் சில பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக வெளியில் பேசப்படுகிறது.

**வடகிழக்கில் சிவில் நிர்வாகம் தான் இருக்கிறது என உலகத்துக்கு பறை சாற்றவென வடகிழக்கில் பொதுவாக தேர்தல்கள் நடத்தப்படுவது வழக்கம். இந் நிலைமையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட இருக்கிறீர்களே?**

சகல தேர்தல்களும் தவறானவை என்பதல்ல. அதனை நாங்கள் ஏன் பயன்படுத்தக்கூடாது. அரசு எங்கும் சிவில் நிர்வாகத்தை அப்படியே நடத்தப்போவதில்லை. அதனை நாங்கள் பயன்படுத்துகிறோம்.

**வடகிழக்கில் சிவில் நிர்வாகம் இல்லையென்பது ஒரு போதும் கழகத்தால் அம்பலப்படுத்தப்பட்டதில்லையே?**

நாங்கள் இருக்கின்ற பகுதிகளில் மாத்திரம் தான் நாங்கள் பதில் சொல்லலாம்.

**ஆனால் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் என அழைக்கப்படும் உங்கள் இயக்கம் வவுனியாவுக்கு மட்டும் தான் பொறுப்பு சொல்லுமா?**

மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களிலும் எமக்குச் சேவை செய்ய அனுமதி கேட்டோம் அனுமதி தரவில்லை. ஆனால் வவுனியா மக்கள் தந்திருக்கி றார்கள். அங்கும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலும் மக்களுக்குச் சேவை செய்கிறோம்.


**அரசின் தீர்வு யோசனை தொடர்பாக..?**

வரலாற்றில் பல தலைவர்களைப் போல சந்திரிகாவும் பொதி எனும் பேரில் ஏற்க முடியாத யோசனையை முன்வைத்திருக்கிறார்.

**ஆனால் நீங்கள் ஆதரவளிப்பதாக பத்திரிகையில் செய்திகள் வெளியாகியிருந்தனவே?**

தீர்வு முயற்சிக்குத் தான் ஆதரவளித்தோமேயொழிய தீர்வுப் பொதிக்கு அல்ல. அதற்கு நாம் ஆதரவளிக்கவில்லை.

**நேர்காணல் : ஆனந்தன்**



# சித்திரவதைக்குப் பின்னான வாக்குமூலம்

உன்னை அவர்கள் கைது செய்து
எங்கோ கொண்டு சென்று விட்டார்கள்
எனது குழந்தைக்குப் பிடித்தமான
உனது 'சேட் கொலரின்' மடமடப்புச்சத்தம்
இன்னும் அவனுடைய விரலிடுக்குகளில்
கேட்டுக் கொண்டேயிருக்கிறது.
அவர்கள் வாகனங்களோடு
நட்சத்திரங்களோ, ஆட்காட்டிகளோ இல்லாத இரவையும்
சூரியனை மறைக்கவும் கூடிய ராட்சத சிறகொன்றையும்
கொண்டு வந்திருந்தார்கள்
அது
இன்னும் மிக நீண்ட காலத்தின் பின்னும்
எனது குழந்தையின் கண்களில்
எங்களுடனேயே தங்கியிருக்கிறது.

அவர்களால் உன்னைத் தலைகீழாகத் தொங்கவிடவும்
நீண்ட கூரிய ஆயுதங்களால் தாக்கவும்
கொல்லவுங் கூட முடியும்

அவர்கள் பற்றிய உனது கணிப்பீட்டை
அவர்களின் துப்பாக்கிக் குழல்களும்
சப்பாத்துக்களில் பூசப்பட்ட குருதியும்
நிரூபித்து விட்டது...
நிரூபித்து விட்டது....
நம்பிக்கை கொள்
நீ பேசாதிருக்கும் வரை
உண்மையில் நீ பேசாதிருக்கும் வரை
அவர்கள் தோற்றுப் போவார்கள் நிரந்தரமாகவே
சிறைக் கம்பியிடுக்குகளின் வழி
ரோஜாப் பூக்களின் வாசனையும்
வண்ணத்திப் பூச்சிகளின் சிறகுகளும்
உன்னை எப்போதுமே வந்தடையாதெனினும்
நம்பிக்கை கொள்
நீ பேசாதிருக்கும் வரை
அவர்கள் தோற்றுப் போவார்கள்
நிரந்தரமாகவே.

**போஸ்நிஹாலே**
கிளிநொச்சி

நன்றி - நூலகத்திட்டம்





# வரலாற்றுப் பாட நூல்களில் இனவாதம்:

## சில அவதானங்கள்

புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றி அதிகமாகப் பேசப்படும் இவ்வேளையிலே, முதலாந் தவணையும் முடிவுற இருக்கும் இத்தறுவாயில் இன்னமும் பல பாடநூல்கள் தமிழ் மொழி பாடசாலைகளுக்கு வந்து சேரவில்லை. கொழும்பு நகரை அண்மித்த பாடசாலைகளுக்குக் கூட புத்தகங்கள் கிடைக்காமை குறிப்பிடத்தக்கது. பிலியந் தலை வலயத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு 9ஆம் தரத்திற்கான நான்கு பாடநூல்கள் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளன. இந்நிலைமையில் புதிய கல்விச்சீர்திருத்தம் தமிழ்ப் பாடசாலைகளில் எதிர்பார்த்த கல்வி இலக்குகளை எட்ட முடியுமா என்ற கேள்வி பெற்றோர் கள் மத்தியிலே எ்ழுந்துள்ளது. அத்துடன் கிடைக்கப் பெற்ற சில பாடநூல்களிலும் இதுவரையும் காணப்படாத வகையிலே எழுத்துப் பிழைகள், சொற் பிழைகள், வாக்கியப் பிழைகள், கருத்துப் பிழைகள், கருத்துத் திரிபுகள் எனத் தொகையாகக் காணப்படும் பிழைகள் தமிழ்ப் பெற்றோர் மத்தியிலே பெரும் கவலையையும், கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கல்வியில் சமத்துவம், சம சந்தர்ப்பம் பற்றியெல்லாம் ஐ.நா. மனித சாசனத்திலும் இலங்கையின் தேசியக் கல்விக் கொள்கையிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆனால், நடைமுறையில் கல்வியில் சமத்துவம் - சமசந்தர்ப்பம் என்ற கோட்பாடு இலங்கையிலே பெரும்பான்மை, சிறுபான்மை இனங்கள் என்ற வகையிலே பெரு்ம் இடைவெளியைக் கொண்டு திகழ்வதை ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

1992 இல் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையில் பாடசாலைக் கல்வியினூடாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படும் தேசிய பொதுக்குறிக்கோள்கள் ஒன்பது முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

* **தேசிய பிணைப்பினையும். தேசிய முழுமைப் பாட்டினையும். தேசிய ஒருமைப் பாட்டினையும் எய்துதல்.**
* **வியாபகப் பாங்குடைய சமூக நீதியை நிலைநிறுத்தல்.**
* **நாட்டு மேம்பாட்டிற்கான முயற்சிகளில் விறுவிறுப்பாக பங்குகொள்ளலானது ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கின்ற ஆழ்ந்த. இடையறாத அக்கறையுணர்வு தொடர்ந்து உறுதி செய்தல் பேணப்படுதல் வேண்டும்.**
* **விரைவாக மாறிவரும் உலகில் மாறுகின்ற நிலைமைகளுக்கு இணங்கி வாழக்கற்றல். மாற்றத்துக்கு இணக்கஞ் செய்கின்ற காரணிகளைச் சிறப்பாக்கலும். வளர்த்தலும் இன்றியமையாதவை. ஒருவர் தமக்கும் பிறருக்கும் நலனளிக்கும் வகையில் மாற்றத்தை நெறிப்படுத்துந்தகைமைகளையும் மேற்கூறிய கற்றலுடன் இணைத்துக் கொள்ள வேண்டும்.**

**காப்பு உணர்வையும் உறுதிப்பாட்டு உணர்வையும் எய்தும் வகையில் சிக்கலானதும். எதிர்பாராததுமான நிலைமைகளை சமாளிக்கும் தகைமையை வளர்த்தல்.**

மிகவும் பெறுமதிவாய்ந்த விழுமியங்களையும், அரசியல் நாகரிகத்தையும், சமநீதி முறைமையையும் கொண்டு காணப்படும் இக்குறிக்கோள்கள் நடைமுறையில் எவ்வாறு உள்ளன. தமிழ் மாணவ சமுதாயத்தின் கல்விப் பங்களிப்பில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன என்பதை எடுத்துப் பார்க்கும் போது எமக்குப் பெரும் ஏமாற்றமாகவே உள்ளது. தமிழ்ப் பாடநூல்களிலே, குறிப்பாக வரலாற்று நூல்களிலே எந்தளவுக்கு தேசிய பொதுக்குறிக்கோள்கள் பிரதிபலிக்கின்றன எனப் பார்க்கும் போது அதிர்ச்சியாகவே உள்ளது. காரணம் இன ஐக்கியத்தை வளர்ப்பதற்குப் பதிலாக அவை இனக்குரோத கருத்துக்களை விதைப்பனவாகவே உள்ளன.

பாடசாலையில் சமூகக் கல்வியும், வரலாறும் எனும் பாடம் , க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குரிய கட்டாய பாடங்களுள் ஒன்றாகப் போதிக்கப்பட்டு வருகிறது. 1990ம் ஆண்டிலிருந்து வரலாறு ஒரு தனிப்பாட நூலாகவும் வெளியிடப்படுகிறது.

வரலாற்று நூலினை வெளியிடும் நோக்கம் பற்றி கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் தமது முகவுரைகளிலே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு பிரசை குறைந்தது அவருடைய சொந்த நாட்டின் வரலாறு பற்றியாதல் அறிந்திருக்க வேண்டியது முக்கியம். வரலாற்றில் வரும் விடயங்களுள் நாடுகளைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டபோர்கள் பற்றியும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அமைக்கப்பட்ட குளங்கள், கால்வாய்கள், அணைக் கட்டுகள் முதலின பற்றியும். சமய கலாசார அபிவிருத்தியின் பொருட்டு அமைக்கப்பட்ட விகாரைகள், கோவில்கள், பள்ளிவாசல்கள் ஆகியன பற்றியும், கலைப் படைப்புகள் பற்றியும் கற்கிறோம். இவை பற்றிக் கற்கும் போது போர்களின் பெறுபேறுகள் நிலையில்லாதன என்பதையும் ஏனைய கருமங்களின் பெறுபேறுகள் ஓரளவுக்கு நிலையானவை என்பதையும் நாம் விளங்கிக் கொள்கின்றோம். போர்களில் தோல்வியடைந்தவர்கள் போலவே வெற்றி பெற்றவர்களும் ஒரு நாள் இறக்கின்றனர். ஆயின் அமைதியும், ஒற்றுமையும் நிலவும் காலங்களில் அமைக்கப்படும் குளங்குட்டைகள், ஆகியனவும், சமயக் கட்டிடங்களும் ஒற்றுமையின் பெறுமதியை உலகுக்கு எடுத்துக் காட்டுவதுடன் பல நூற்றாண்டு காலம் நிலைத்திருந்து நம்முன்னோர்களுடைய சேவைகளைப் பரம்பரை பரம்பரையாக ஞாபகப்படுத்துகின்றன. பூசல்கள் சூழ்ந்த உலகிலே வாழுகின்ற மாணவருக்கு ஒற்றுமையின் முக்கியத்துவத்தை விளங்க வைப்பதே பாடசாலைகளில் வரலாற்றினைக் கற்பிப்பதன் முக்கிய நோக்கமாகும். மேலும், இன்று சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என நாம் வேறுபட்டுள்ளோமாயினும் மிகப்பழைய காலத்திலிருந்தே நாம் ஒன்று சேர்ந்து இலங்கை மக்களாக வாழ்ந்து வருகின்றோம் என்பதை இந்நூல் சிறியதாயினும் மாணவருக்கு விளங்க வைக்கும். அது தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்ற எமது முக்கியமான குறிக்கோளுக்கு ஓர் ஊன்று கோலாக அமையும்.

பூசல்கள் சூழ்ந்த உலகிலே வாழுகின்ற மாணவருக்கு ஒற்றுமையின் முக்கியத்துவத்தை விளங்க வைப்பதே பாடசாலைகளில் வரலாற்றினைக் கற்பிப்பதன் முக்கிய நோக்கமாகும்...

இவ்வாறு அருமையாகக்கூறும் கல்வி வரலாற்றுத் திணைக்கள ஆணையாளர், இவ்வரலாற்று நூல்களின் பாட உள்ளடக்கங்கள் பல இந்நாட்டின் வாழும் சிறுபான்மை இனங்களை வேதனைப்படும் வகையிலும், அவர்களின் கலாசாரங்களை அவமதிக்கும் வகையிலும் எடுத்தாளப்பட்டிருப்பதையும், அதேவேளை சிங்கள மாணவர் மத்தியிலே தமிழர் இந்நாட்டுக்குடிகளல்லர்: அவர்கள் வந்தேறு குடிகள் மட்டுமல்ல ஆக்கிரமிப்பாளர்கள் என்ற கருத்தினையும் விதைத்து வேரூன்றத்தக்க வகையிலே எழுதப்பட்டுள்ளன என்பதை அறிவாரா? வரலாற்றுப் பாட நூல்களை எடுத்து நோக்கும்போது நாம் பல அடிப்படைக்குறைபாடுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

1. **நூல் ஆலோசனைக் குழுவிலே ஒரு தமிழறிஞர் தானும் இடம் பெறவில்லை.**
2. **நூல் எழுத்தாக்கக் குழுவிலே ஒரு தமிழாசிரியரும் இடம் பெறவில்லை.**
3. **விடயங்கள் நேரடியாக சிங்கள மொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.**
4. **வரலாறு சிங்கள அரசர்கள் பற்றிய வரலாறாகவே அமைந்துள்ளது.**
5. **இந்நாட்டின் சிறுபான்மையினரின் வரலாறுகள் இடம் பெறாமை.**
6. **சில கருத்துக்கள் தமிழரைப்பற்றி சிங்கள மாணவர்கள் தவறாக விளங்கிக்கொள்ளக் கூடிய வகையிலே எழுதப்பட்டுள்ளமை.**

**உதாரணமாக தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்கள். வந்தேறு குடிகள் என்ற கருத்துக்கள்.**

7. **தமிழரின் வரலாறு மறைக்கப்பட்டும். திரிபுபடுத்தப்பட்டும் எழுதப்பட்டுள்ளமை.**

இவற்றை உதாரணத்துடன் சற்று விரிவாகப் பார்ப்போம்.

வரலாறு 7, 8, 9,10 ஆம் தர நூல்களில் இலங்கையில் அந்நியர் படையெடுப்புக்கள் பற்றிக் குறிப்பிடப்படும் போது, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், யாவா மன்னன் ஆகியோருடைய படையெடுப்புக்களைக் குறிப்பிட "அந்நியர் படை எடுப்பு" என்ற பதமே பெரும்பாலும் கையாளப்பட்டுள்ளது. ஆனால், தென்னிந்திய அரசர்களின் படை எடுப்பை விளக்கமட்டும் "தென்னிந்திய ஆக்கிரமிப்பு" என்ற பதம் கூடுதலாக எடுத்தாளப்பட்டுள்ளது. இதற்கு ஏராளமான உதாரணங்கள் இப்பாட நூல்களிருந்து நாம் எடுத்துக்காட்ட முடியும்.

"அக்காலத்தில் ஏழு ஆக்கிரமிப்பாளர் ஆயிரக்கணக்கான போர்வீரர்களுடன் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து மாதித்த என்ற துறைமுகத்தில் இறங்கினார்கள்" (வரலாறு 7ம் ஆண்டு 5ம் அத்தியாயம் 37ம் பக்கம். 2ம் பந்தி)

"ஆக்கிரமிப்பாளருள் ஒருவன் மதிப்புமிக்க புனிதப்பொருளான புத்தருடைய பாத்திரத்தை எடுத்துக்கொண்டு இந்தியா சென்றான். (3ம் பந்தி)

"இளவரசன் தாதுசேனவுக்கு அனுராதபுர இராச்சியத்தில் உரிமை இருந்தது. இதனை அறிந்து கொண்ட இந்திய ஆக்கிரமிப்பாளர் இளவரசனைப் பிடிப்பதற்கு முயன்றார்கள்" (அத்தியாயம் 7 பக்கம் 44. பந்தி 3)

"இலங்கையின் சிங்காசன உரிமைபற்றி எழுந்த பிணக்குகளிலே தென்னிந்திய இராச்சியங்களும், தென் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கூலிப்படைகளும் சம்பந்தப்பட்டன". (47ம் பக்கம் 2ம் பந்தி.)

"தென்னிந்தியாவிலிருந்து அடிக்கடி கூலிப்படைகள் கொண்டு வரப்பட்டமையும், அவர்களுடைய உதவியைக் கொண்டு சிங்காசனத்தைப் பெற்றுக் கொள்ளுதலும், இந்த நாட்டின் அரசில் விவகாரங்களிலே பலவகையான சிக்கல்கள் உண்டாவதற்குக் காரணமாக அமைந்தன. இங்ஙனம் கொண்டு வரப்பட்ட படை வீரர்களுள் சிலர் அரசனிடமிருந்து நிலபுலன்களைப் பெற்று இங்கே குடியமர்ந்தார்கள். இவர்கள் சிங்கள மன்னர்களுடைய தனிப்பட்ட பாதுகாப்புப் படைகளாகவும் இருந்தனர். இந்த இந்தியக்கூலிப்படைகள் சிற்சில சந்தர்ப்பங்களிலே நாட்டின் உண்ணாட்டுப் பிணக்குகளிலே ஒரு பக்கம் சார்ந்து செயற்பட்டனர். இவ்வாறே தென்னிந்தியர் படையெடுப்புக்களை மேற்கொண்ட சந்தர்ப்பங்களிலே இவர்கள் பக்கஞ் சார்ந்து அனுராதபுர அரசனுக்கு எதிராகப் போர் புரிந்த சந்தர்ப்பங்களுமுள" (48ம் பக்கம் 2ம் பந்தி)

"வரகுணவர்மனுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு சேன இலங்கையிலிருந்து அனுப்பிய ஒரு படையின் உதவியுடன் ஸ்ரீ வல்லபவைத் தோற்கடித்துப் பாண்டிய நாட்டுச் சிங்காசனத்தை வரகுணவர்மன் பெற்றுக் கொண்டான். அத்துடன் இலங்கைமீது படையெடுத்த போது இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட எல்லாப் பொருள்களையும் இலங்கைப் படையினர் மீண்டும் இங்கு கொண்டு வந்தார்கள்." (49ம் பக்கம் 3ம் பந்தி.)

இங்கே கவனிக்கக்கூடிய ஓர் அம்சம் யாதெனில், தமிழ்ப்படை வீரர்களை உதவிக்கு அழைத்த போது அவர்களை கூலிப்படைகள் என்றும், அதேவேளை சிங்களப் படைகளை தென்னிந்தியாவிற்கு அனுப்பிய போது அவர்களை "படையினர்" என்றும் குறிப்பிடப்படுகிறது.

"பிற்காலத்திலே சோழர் பாண்டியர் மீது படையெடுத்ததினால் பாண்டிய மன்னர்கள் இலங்கை மன்னர்களிடமிருந்து உதவிகள் கோரினார்கள். இப்படியான ஒரு வேண்டுகோளை நிறைவேற்றுதற் பொருட்டும், ஐந்தாம் காசியப்ப மன்னனுடைய உதவிப் படைகள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (49ம்பக்கம் 4ம் பந்தி)

இங்கே உதவிக்கு தமிழ்ப் படைகளை அழைத்த போது "கூலிப் படைகள்" எனக் குறிப்பிட்ட அதே வேளை இங்கிருந்து சிங்களப் படைகளை அனுப்பிய போது "அவை உதவிப் படைகள்" எனக் குறிப்பிடப்படுகின்றன.

"பரந்தகனின் படைகள் அனுராதபுரம் உட்படப் பல பிரதேசங்களைச் சூறையாடிக் கொண்டு இந்தியா திரும்பின என்று கூறப்படுகின்றது. (50ம் பக்கம் 2ம் பந்தி)

"இராசராச மன்னனுடைய மகன் முதலாம் இராசேந்திரன் 1017இல் மீண்டும் ஒரு படையை அனுப்பி மலை நாட்டு மலைப் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டு மன்னனைப் பிடிப்பதற்காக றுகுணு ரட்டையையும் ஆக்கிரமித்தான். இந்த ஆக்கிரமிப்பின் போது ஐந்தாம் மிகிந்து மன்னன் கைது செய்யப்பட்டுத் தென் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டான். (50ம் பக்கம் 4ம் பந்தி)

"கலிங்க வமிசத்தைச் சேர்ந்த மாக என்ற ஆக்கிரமிப்பாளன் ஒருவன் தென்னிந்தியாவிலிருந்து ஒரு பெரிய கூலிப்படையுடன் வந்து 1214இன் இறுதிப்பகுதியிற் பொலன்றுவையைக் கைப்பற்றினான். (11ம் அத்தியாயம் 64ம் பக்கம் 3ம் பந்தி)

தென்னிந்தியாவிலிருந்து போரிடவரும் படையும் "கூலிப்படை" என்றே குறிப்பிடப்படுகின்றது.

"கலிங்க வமிசத்து மாகன் அரசனானதுடன் கொடுங்கோல் காலப்பகுதி ஆரம்பித்தது. இவன் தனது கூலிப்படையினர் வசிப்பதற்கு விகாரைகளைப் படைமுகாம்களாக மாற்றி அவற்றுக்குரிய நிலபுலங்களை இவர்களுக்கிடையிற் பங்கிட்டு வழங்கினான். இவன் புத்தசாசனத்தை அழிக்க வேண்டுமெனத் திட்டமிட்டுச்

→

நன்றி - நூலகத்திட்டம்



செயற்பட்டான். விகாரைகளை இடித்து வீழ்த்தினான். பௌத்த தர்ம நூல்களுக்குத் தீவைத்தான். பிக்குகளை மனிதாபிமானமற்ற முறையில் துன்புறுத்தினான். அது மாத்திரமன்றி அக்காலச் சமூக அமைப்பினையும், அவன் சீர்குலைக்க முனைந்தான். மாகனுடைய தொல்லைகளிலிருந்து தப்பிய மக்கள் அனேகர் தமது நிலபுலங்களைக் கைவிட்டுவிட்டு றுகுணுரட்டை, மாயாரட்டை, மலயரட்டை ஆகிய இடங்களுக்குச் சென்றார்கள். மாகனின் கைகளிற் சிக்கிக்கொள்ளப் பயந்த பிக்குகள் தந்ததாதுவையும் கைக்கெட்டிய தர்ம நூல்களையும் எடுத்துக் கொண்டு மலயரட்டைக்குச் சென்றார்கள். நாற்பது ஆண்டுகளாக இராசரட்டையில் நிலவிய மாகனின் கொடிய ஆட்சியினால் பொலன்னறுவை இராசதானி சீரழிந்து வீழ்ந்தது. பழைய இராசரட்டையை மையமாகக் கொண்டு உருவாகிய நீர்வள நாகரிகமும், நிர்மூலமாகியது. (64ம் பக்கம் 4ம் பந்தி)

"சிங்கள மன்னர்களால் இங்கே கொண்டுவரப்பட்ட தென் இந்தியக்கூலிப்படைகள் மத்தியில் இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளை வழிபட்டவர்கள் இருந்தார்கள் என்பதற்கு இடமுண்டு. இக்காலத்துக்குரிய சில கலைப் படைப்புகளிலே இந்து மதத்தவர்களுடைய செல்வாக்குக் காணப்படுகின்றதென அறிஞர்கள் கூறியுள்ளார்கள். (12ம் அத்தியாயம் 67ம் பக்கம் 1ம் பந்தி)




## எட்டாம் தரத்திற்கான வரலாற்று நூல்:

"தலைநகர் உட்பட இராசரட்டையின் பல பகுதிகளிலே காணப்பட்ட கட்டிடங்களைத் தகர்த்து விழுத்தினான். அக்கட்டடங்கள் சிலவற்றிலே தான் கொண்டுவந்த கூலிப் படைகளைக் குடியிருத்தினான. அவனுடைய கொடுமையைக் கண்டு பயந்த மக்கள் தென் மேற்குப்பகுதிகளுக்குத் தப்பி ஓடினார்கள்."

"விகாரைகளுக்குச் சொந்தமாக இருந்த நூற்களஞ்சியங்களில் இருந்த நூல்களை எடுத்து எறிந்து தீவைத்தான். இராசரட்டை நாகரிகத்தின் அச்சாணியாக விளங்கியி குளங்கள், கட்டுகள் அனைத்தையும் அழித்து நாட்டின் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்தான். இது இராசரட்டை நாகரிகத்துக்கு இடிவிழுந்தாற் போலானது" (1 ம் அத்தியாதியம் - 1ம் பக்கம் 2ம் பந்தி)

"அவனுடைய (2ம் பராக்கிரமபாகு மன்னன்) ஆட்சிக்காலத்தில் யாவா நாட்டைச்சேர்ந்த சந்திரபானு என்ற ஓர் அரசன் இலங்கை மீது இரு தடவைகள் படை எடுத்ததாகக் கூறப்படுகிறது" (2ம் பக்கம் 3ம் பந்தி)

இவனும் அந்நிய நாட்டவனாக இருந்த போதும் தமிழனாக இல்லாதபடியால் ஆக்கிரமிப்பு என்ற சொல் பயன்படுத்தப்படாது படை எடுத்தான் என்று எழுதப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

"ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் வன்னிப்பகுதிகள் அனைத்தையும் கைப்பற்றினான். (8ம் பக்கம் 2ம் பந்தி)

இங்கே சிங்கள மன்னன் தமிழ் பிரதேசத்தைக் கைப்பற்றும்போது ஆக்கிரமித்தான் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.

"மாயாதுன்னை (1521-1581) முதலாம் இராசசிங்கன் (1581-1593) போன்ற மன்னர்கள் மலை நாட்டைக் கைப்பற்றுவதற்கு எத்தனித்தார்களாயினும், முதலாம் இராச சிங்கமன்னனே வெற்றி பெற்றான்."(9ம் பக்கம் 1ம் பந்தி)

இங்கே சிங்கள மன்னர்கள் அயல் இராச்சியங்கள் மீது படையெடுத்த போது கைப்பற்றுதல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆக்கிரமிப்பு என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.

"ஆயினும், இலங்கையின் பிரதான இராச்சியமாக இருந்த கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்ட பின்னர்" (9ம் பக்கம் 1ம் பந்தி)

போர்த்துக்கேயர் அந்நியராயினும் அவர்கள் தமிழராக இல்லாதபடியால் கைப்பற்றல் என்ற சொல்லே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு என்ற சொல் கையாளப்படவில்லை.

இக்கோயில்கள் சிங்கள மன்னர்களுக்குச் சேவைபுரிந்த தென்னிந்தியக் கூலிப்படையினர் வழிபடுவதற்காகக் கட்டப்பட்டனவாகவும் இருக்கலாம். (3ம் அத்தியாயம் - 29ம் பக்கம் 3ம் பந்தி)

பொலன்னறுவைக்கால கட்டிடங்கள் என்ற இப்பாடத்திலே தமிழ் அரசர்களின் ஆட்சிச் சிறப்புகள் கூறப்படாது சிங்கள மன்னர்களுக்குச் சேவை புரிந்த தென்னிந்தியக் கூலிப்படைகளுக்காக கோயில் கட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுவது வரலாற்றுத் திரிபும், தமிழ்ப்படையினரை அவமதிக்கும் தன்மையுமாகும்.

## ஒன்பதாந்தர வரலாற்று நூல்:

"கி.மு. 6ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்நாட்டில் இயக்கர், நாகர் எனப்பட்ட இருபிரிவு சுதேச மக்கள் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இயக்கர் எனப்பட்டோர் மகியங்கனை, லக்கலை போன்ற பிரதேங்களிலும், நாகர் எனப்பட்டோர் நாகதீவிலும் அதாவது யாழ்ப்பாணத்திலும், களனியிலும் வாழ்ந்து வந்தாரெனக் கூறப்படுகிறது." (1ம் அத்தியாயம் - 1ம் பக்கம் 2ம் பந்தி)

9ம்தர வரலாற்று நூலிலே ஏற்கெனவே மேற்கண்ட வரலாறு இடம்பெற்ற போதும் தற்போது புதிதாக வெளியிடப்பட்டுள்ள சுற்றாடற்கல்வி தரம் 6 நூலிலே பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இலங்கைக்கு முதலில் விஜயனும் அவனுடைய தோழர்கள் 700 பேரும் வந்தனர்" என இன்று இலங்கையில் சிங்களவர் என அழைக்கப்படுவோர் இந்தியாவிலிருந்து வந்த ஆரிய மொழி பேசும் கூட்டத்தினர் எனக் கொள்ளப்படுகின்றது. இதற்குப் பின்னர் இலங்கையில் குடியேறியோர் இவர்களுடன் கலந்து வாழ்ந்தனர் என அனுமானிக்கப்படுகின்றது. இவர்களை விட திராவிட மொழிபேசும் தமிழர்கள் காலத்துக் காலம் இலங்கையில் குடியேறினர்" (8ம் பாடம் 55ம் பக்கம்)

இவ்விரு கூற்றுக்களையும் எடுத்து நோக்கும் போது இலங்கையில் ஏற்கெனவே வாழ்ந்து வந்த இயக்கர், நாகர் பற்றிய விபரங்கள் புதிய 6ம்தர சுற்றாடற் கல்வி நூலிலே மறைக்கப்பட்டு விஜயனின் வருகையிலிருந்தே இலங்கை வரலாறு ஆரம்பமாகிறது. இதனை ஓர் திட்டமிட்ட வரலாற்றுத்திரிபு எனக்கொள்ள வேண்டியிருக்கிறது.

"தென்னிந்திய ஆக்கிரமிப்புப் படையுடன் வந்த மாகான் பொலன்நறுவையைப் பிடித்துக் கொண்டதையடுத்து ராசரட்டை மக்கள் பாதுகாப்புத்தேடித் தென் மேற்குத்திசை நோக்கியும், மலயரட்டை, றுகுணுரட்டை ஆகியவற்றை நோக்கியும் இடம் பெயர்ந்தனர்" (3ம் அத்தியாயம் - 4ம் பக்கம் 1ம் பந்தி)

"பின்னர் தென்னிந்தியாவிலிருந்து வந்த புலகண்டன் உட்பட்ட ஏழு ஆக்கிரமிப்பாளர் வலகம்பா மன்னனைத் துரத்திவிட்டு அனுராதபுரத்துச் சிங்காசனத்தை அபகரித்துக் கொண்டனர்."

"தென்னிந்தியாவிலிருந்து வந்த பாண்டு பாரிந்தன் முதலான இந்திய ஆக்கிரமிப்பாளர் ஐவர் அனுராதபுரத்தைக் கைப்பற்றினர்" (5ம் அத்தியாயம் - 46ம் பக்கம் 2ம் பந்தி)

"விஜயனும் கூட்டத்தினரும் வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்து வந்த இயக்கர், நாகர் என்றழைக்கப்பட்ட சுதேச மக்கள் பிறநாட்டு வியாபாரிகள் இங்கு வந்தபோது அவர்களுடன் வியாபாரப் பொருள்களை பண்டமாற்றுச் செய்தார்கள் என்பதற்குரிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன" (50ம் பக்கம் 3ம் பந்தி)

1997ம் ஆண்டு மறுபதிப்பு செய்யப்பட்ட 9ம்தர வரலாற்று நூலிலே இக்குறிப்புக்கள் காணப்பட 1998ல் அடுத்த வருடம் வெளியிடப்பட்ட 6ம் தர சுற்றாடற்கல்வி நூலிலே இயக்கர், நாகர் விடயம் முற்றாக மறைக்கப்பட்டுள்ளது. இலங்கை வரலாறு எவ்வளவு விரைவாக மாற்றப்பட்டு வருகிறது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்.

"தென்னிந்தியப்படை எடுப்புக் காரணமாகவும், பேமா படை எடுப்புக் காரணமாகவும் இலங்கை பெரும் புகழ்பெற்று விளங்கியது". (6ம் அத்தியாயம் - 64ம் பக்கம் 1ம் பந்தி)

இலங்கை பிற நாடுகள் மீது படை எடுக்கும்போது "ஆக்கிரமிப்பு" என்ற சொல் பயன்படுத்தப் படுவதில்லை.

"மாகனும் குறிப்பாக இலங்கையின் வடக்குக் கரையோர ஓடத்துறைகள் மூலம் தென் இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான கூலிப் படைகளைக் கொணர்வித்துத் தனது படைப்பலத்தை பெருப்பித்தான் எனத் தோன்றுகிறது. (59ம் பக்கம் 1ம் பந்தி)

யாவா மன்னன் அன்னியனான போதும் தமிழனாக இல்லதபடியால் படைஎடுத்தான் என்ற பதமே பிரயோகிக்கப்பட்டுள்ளது.

## 10ம் தர வரலாற்று நூல்:

"போர்த்துக்கேயர் கோட்டே இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டமை"

"போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்பட்டமை" (4ம் அத்தியாயம் - 33ம் பக்கம் உப தலைப்புக்கள்)

போர்த்துக்கேயர் அன்னியரான போதும் இலங்கை இராச்சியங்களை ஆக்கிரமித்த போதும், அவர்களால் கைப்பற்றப்பட்டது என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது.

"1621இல் யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேயருடைய ஆதிக்கத்தின் கீழ் ஒலிவேரா கொண்டு வந்தான்." (35ம் பக்கம் 4ம் பந்தி)

"போர்த்துக்கேயரால் இணைத்துக் கொள்ளப்பட்டமையாலும் சீதவாக்கை இராச்சியம் மறைவுற்றது" (37ம் பக்கம் 1ம் பந்தி)

"1619இல் யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்றிக்கொண்டமையினால்...." (5ம் அத்தியாயம் - 40ம் பக்கம் 1ம் பந்தி)

"மலையக இராச்சியத்தின் மேற் பயங்கரமான ஒரு படையெடுப்பினை 1630இற் போர்த்துக்கேயர் மேற்கொண்டார்கள். (41ம் பக்கம் 3ம் பந்தி)

"போர்த்துக்கேயர் 1638இல் மீண்டும் மலையக இராச்சியத்தின் மீது படைஎடுத்தனர். (41ம் பக்கம் 4ம் பந்தி)

"தியோகோடிமேலோ எனப்பட்டவனுடைய தலைமையின் கீழ் 1638 இல் பெரிய ஒரு படை எடுப்பினை மேற்கொண்டனர்" (42ம் பக்கம் 4ம் பந்தி)

"1638இற் போர்த்துக்கேயர் மலையக இராச்சியத்துக்குச் சட்டபூர்வமான உரிமை கோரிக் கொண்டு எவ்வாறேனும் கைப்பற்றிக்கொள்ளும் குறிக்கோளுடன் அடிக்கடி அதன்மேற்பெரும் படையெடுப்புக்களை மேற்கொண்டு பெரும் விரோதிகளாக இருந்தனர்" (43ம் பக்கம் 3ம் பந்தி)

"1747 முதல் 1782வரை ஆட்சிசெய்த இந்த மன்னனுடைய காலத்தில் (ஸ்ரீவிஜய இராசசிங்கன் ஒல்லாந்தர் முதன் முதலாக மலையக இராச்சியத்தின் மீது படையெடுத்தார்கள்"

"ஆங்கிலேயர் 1769இல் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஒல்லாந்தர் வசமிருந்த பிரதேசங்களைக் கைப்பற்றினார்கள்" (46ம் பக்கம் 1ம் பந்தி)

"1815இல ஆங்கிலேயர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டு அரசனை நாட்டிலிருந்து துரத்தும்வரை மலையகத்தை ஆட்சி செய்த ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னனே மலையகத்து இறுதி மன்னனுமாவான்" (46ம் பக்கம் 1ம் பந்தி)

தமிழர் என்றால் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதை சிங்கள மாணவர்கள் மனதிலே பதியச்செய்ய இந்த நூல்களை எழுதியவர்கள் எவ்வளவு கவனமெடுத்து அதனை செய்து முடித்துள்ளனர் என்பதை இப்போது நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

அடுத்து ஆறாந்தர ஆங்கில நூலை எடுத்துப் பார்த்தால் ஒவ்வோர் இன பிள்ளையும் தாம் எந்த நாட்டிலிருந்து வந்தவர் என்பதைக் குறிப்பதாக ஒரு பாடம் உள்ளது. அதில் பொட்டும், பூவும் அணிந்த 'கீதா' என்ற தமிழ் சிறுமி இந்தியாவிலிருந்து வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் தமிழர் இந்தியாவிலிருந்து வந்த வந்தேறுகுடிகள் என்பதை நியாயப்படுத்துவதற்காகவும், பிரச்சாரப் படுத்துவதற்காகவும் சிங்கள மாணவர் மனதில் இதை பதியச் செய்யவும் இவ்வாறு செய்யப்பட்டுள்ளதோ என எண்ணத்தோன்றுகிறது.

இன ஐக்கியத்தைப் பற்றிப் பேசும் அரசாங்க இந்நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக மலரப் போகும் வருடாந்தம் சுமார் நாற்பது இலட்சம் மாணவர்களின் கரங்களிலே இத்தகைய தவறான கருத்துக்களை பரப்பக் கூடிய பாடநூல்களை வெளியிட்டுக் கொண்டிருந்தால் இன ஐக்கியத்தை எவ்வாறு கட்டி எழுப்ப முடியும்?



இறுதியாக, தொகுத்து நோக்கும் போது வரலாறு என்பது ஒவ்வொரு இனத்துக்கும் உண்டு. ஒவ்வொரு இனமும் தனித்துவமான வரலாற்றினைக் கொண்டுள்ளன. தமது இனத்துவத் தனித்துவத்தை அவை வரலாற்றுப் பாடத்துக் கூடாகக் காண வேண்டும். ஒவ்வொரு இனமும் தத்தமது வரலாற்று முகத்தைத் தரிசிக்க வேண்டும். சிங்கள இனம் எவ்வாறு தமது இனத்துவ தனித்துவத்தைக் காண விளைகின்றதோ அவ்வாறே சிறு பான்மை இனங்களுக்கும் தமது தனித்துவத்தைத் தரிசிக்க உரிமை இருக்க வேண்டும். நாட்டில் நாற்பது இலட் சம் மாணவர் தொகையில் பத்து இலட்சம் தமிழ் மாணவர்கள் கற்கும் போது அவர்களும் சரித்திரம் வாயிலாக தமது இனத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியினையும், வரலாற்றுப் பெருமைகளையும் அறிய வேண்டும். தமது முன்னோரும் இந்நாட்டின் வரலாற்றுப் பங்குதாரர் என்ற உண்மையை உணர வேண்டும். ஆனால், இங்கே 10 இலட்சம் மாணவர்கள் அன்னியராக்கப்படுகிறார்கள். எதிர்காலத்தில் நாமும் இந்நாட்டுக்கு பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற உணர்வு தடுக்கப்படுகிறது. அப்படியாயின்,

"பூசல்கள் சூழ்ந்த உலகிலே வாழுகின்ற மாணவருக்கு ஒற்றுமையின் முக்கியத்துவத்தை விளங்க வைப்தே பாடசாலைகளில் வரலாற்றினைக் கற்பிப்பதன் முக்கிய நோக்கமாகும்" என்ற கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளரின் கூற்றுவெற்று வேட்டாகப் பெறுமதியற்றுப் போகிறது.


தற்காலத்தில் மேலைநாட்டுக்கல்வி அமைப்பிலே சிறுபான்மையினரின் வரலாற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. மேலைத்தேச மாணவருக்கு கீழைத்தேய வரலாறு நல்லெண்ணத்தை ஊட்ட பயன்படுத்தப்பட்டுள்ளது. கீழைத்தேச கலை, கலாசார, வரலாற்று சிறப்பம்சங்கள் விசேடமாக விதந்துரைக்கப்படுகின்றன. இந்தத் தன்மை கற்கும்போதே பிற இனத்தவரும் சிறப்பான அரசியல் பாரம்பரியங்களைக் கொண்டவர்கள் தான் என்ற எண்ணம் சிறுவயதிலே அவர்கள் மனங்களில் விதைக்கப்படுகின்றன. வெள்ளையர் நாடுகளில் கறுப்பர் இனத்தவரின் சிறப்புக்கள் "கறுப்பு வைரம்" எனப்போதிக்கப்படுகின்றன. மனித நாகரீகம் இன்று இனவாதத்துக்கு அப்பால் கல்விக் கூடாக மலர்ச்சிப் பெற்றுள்ளதை இவை எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், இலங்கையிலோ பல நூற்றாண்டுகளாக சகோதர இனங்களாக வாழ்ந்து வந்த இரு இனங்களுக்கிடையே பகைமையை வளர்க்கும் போக்கே நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் திட்மிட்டு பரப்பப்பட்டு வருகிறது. இதன் ஒரு அம்சம் தான் பாட நூல்களிலும் இன்று பிரதிபலிக்கின்றன.

□

வே. சண்முகராஜா (அதிபர்)
தமிழ் மகா வித்தியாலயம்,
நுகேகொடை.

நன்றி - நூலகத்திட்டம்






**இந்தியாவில் தலித் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் பற்றியும் சாதிய ஒடுக்குமுறைகள் பற்றியும் விரிவான, ஆதாரபூர்வமான நூலொன்றை Human Rights Watch எனும் அமைப்பு வெளியிட்டுள்ளது.**

**Broken People- Caste Violence Against India's 'Untouchables' என்ற இந் நூல் (292 பக்கங்கள்) மார்ச் மாதம் வெளியாகியுள்ளது. (இணைய முகவரி) www.hrw.org எனும் நூலின் சாராம்சமாகத் தரப்பட்டிருக்கும் முதலாவது பகுதியிலிருந்து முக்கியமான பகுதிகளை தமிழில் தருகிறோம்.**

**-ஆர்.**

# இந்தியா: தலித்துகள் மீது தாக்குதல்!

இந்தியாவின் சனத்தொகையில் 160 மில்லியன் மக்கள் தலித் என்று இப்போது பொதுவாக அழைக்கப்படும் ஒடுக் கப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட "சாதி" மக்களாவர். தலித் என்ற சொல் பிரயோகம் முதன்முதலாக அம்பேத்கார் அவர்களாலேயே பாவிக்கப்பட்டது. தலித் என்பதன் அர்த்தம் 'முறிக்கப்பட்ட" மக்கள் என்பதாகும். இவர்கள் தொடர்ச்சியாக அரசாலும் பொலிஸாலும் உயர்த்தப்பட்ட சாதிகளாலும் மற்றும் அவர்களது கூலிப்படைகளாலும் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி வருகிறார்கள். இந்தியாவில் பல மாநிலங்களில் முழுக் கிராமங்கள் பலவுமே சாதியின் பேரால் ஒடுக்கி வைக்கப்பட்டுள்ளன. தேசிய சட்டங்களும் அரசியல் யாப்பும் இவர்கள் மீதான ஒடுக்குமுறையை மறைக்கவே பயன்படுகின்றன.

1950இல் தீண்டாமை இந்தியாவில் அரசியல் யாப்பு மூலமாக ஒழிக்கப்பட்டு விட்டாலும், அது நாளாந்த யதார்த்தமாகவே இன்றும் நிலவி வருகிறது. இம் மக்களின் பிரச்சினைகளும் துயரங்களும் இந்தியாவின் பிரதானமான கவனத்தைப் பெறுவதில்லை. மிகப் பெரியளவு வன்முறைகள் இடம் பெற்றால் மட்டுமே ஏதாவது தெரிய வருகிறது. மாநில அரசுகளும் சரி மத்திய அரசும் சரி தலித்துக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது குறித்து எவ்வகையான நிர்ப்பந்தமும் அற்ற நிலையிலேயே உள்ளன. அரச வேலை வாய்ப்புக் களையும் கல்வி வாய்ப்புக்களையும் இருக்கிற ஒதுக்கீடுகளும் கோட்டாக்களும் மிகக் குறைவான எண்ணிக்கைகளிலேயே தலித்துக்களைப் போய்ச் சேருகின்றன.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது நடைமுறைப்படவில்லை என்பது மட்டுமல்ல. தலித்துக்கள் தெரிவிக்கிற முறைப்பாடுகளையும் புகார்களையும் பொலிஸார் பதிவு செய்ய மறுப்பதும் வழக்கமாக இருக்கிறது.

தலித்துக்களுககான சட்டரீதியான பாதுகாப்பு, நிலச்சீர்திருத்தங்கள் என்பன இந்தியாவின் பல மாநிலங்களில் அமுல் படுத்தப்படாமலேயே உள்ளன.

சில மாநிலங்களில் தலித்துகள் அரசியல் அதிகாரங்களில் பங்கு பற்றியிருந்தாலும் இந்தியக் குடியரசின் தலைவராக தலித் ஒருவர் இருந்தாலும் ஒட்டுமொத்தமான தலித் மக்களின் வாழ்வு இன்னும் பயங்கரமான ஒடுக்குமுறைக்குள்ளேயே இருக்கிறது. 80களில் முனைப்பு பெற்ற தலித் எழுச்சி இன்று பல தளங்களிலும் விரிவாகி வருகிறது. இதற்கெதிராக உயர் சாதியினர் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். தலித் தலைவர்களும் தலித் செயல்வாதிகளும் போலிக் குற்றச் சாட்டுக்களின் பேரில் கைது செய்வதும் 'தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்' என்ற பேரிலும் 'பயங்கரவாதி' என்ற போர்வையிலும் கைது செய்யப்பட்டுச் சிறையில்



அடைக்கப்படுவதும் தாராளமாக இடம் பெற்று வருகின்றன.

பீகார் போன்ற சில மாநிலங்களில் ஒடுக்குமுறைக்கு எதிராக போரிட தலித்துகள் நக்ஸலைட்டுகளுடன் இணைந்துள்ளனர். இதனைக் காரணம் காட்டி ஒட்டுமொத்தமாகவே தலித் மக்கள் அனைவரையும் பயங்கரத்துக்குள் ளாக்குகின்றன வேலையைப் பொலிஸாரும் படையினரும் செய்து வருகின்றார்கள்.



உயர்த்தப்பட்ட சாதி நிலக்கிழார்கள் தனிப்பட்ட முறையில் ஆயுத சேனைகளை உருவாக்கி வைத்துள்ளனர். 1969 இலிருந்து ஆயிரக்கணக்கான தலித் பொதுமக்களை இந்த சேனைகள் கொன்றொழித்துள்ளன. ரணவீர் சேனா எனப்படுகிற ஒரு சேனை மிகவும் மூர்க்கமானதாகும். 1995க்கும் 1999க்கும் இடைப்பட்ட காலத்திற்குள் 400க்கும் மேற்பட்ட தலித் பொதுமக்களை ரணவீர் சேனா பீகாரில் கொன்றொழித்துள்ளது.

1997 டிசம்பர் 1ஆம் திகதி லக்ஸ்மன்பூர்பாதே என்ற கிராமத்தில் 16 குழந்தைகளையும் 27 பெண்களையும் 18 ஆண்களையும் ரணவீர் சேனா கொன்றுள்ளது. 5 இளம் பெண்கள் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு அவர்களுடைய உடல்கள் சிதைக்கப் பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பல அரசியல்வாதிகள் சேனைகளுக்கு ஆதரவாக இருப்பதோடு அரசாங்கத்த வர்களாகவும் உள்ளனர். பல சந்தர்ப்பங்களில் பொலிஸார் ரணவீர் சேனாவுடன் சென்றிருக்கிறார்கள். உதாரணமாக 1997 ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பீகாரில் போர்பூர் மாவட்டத்திலுள்ள எக்வாரி என்ற கிராமத்தில் தலித்துக்களைப் பாதுகாக்கவென நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் ரணவீர் சேனா நுழைந்ததுமே அவர்களுக்கு உதவியாகச் சென்று பூட்டப்பட்டிருந்த தலித் மக்களின் வீட்டுக் கதவுகளை உடைத்துத் திறந்து விட்டனர். எட்டுத் தலித்துகள் **கொல்லப்பட்டனர்** பெரும்பாலான **பொலிஸ்** நிலையங்கள்



உயர்த்தப்பட்ட சாதிக்காரரின் பிரதேசங்களிலேயே இருப்பதால் தலித்துக்கள் அந்த இடங்களுக்குச் செல்ல முடியாது என்பது வேறு விடயம்.

தமிழ் நாட்டில் தலித்துகளான பள்ளர் சமூகத்துக்கும் ஓரளவுக்கு உயர்த்தப்பட்ட சாதியான தேவர்களுக்குமிடையே 1995இலிருந்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. வளைகுடா நாடுகளுக்குச் செல்லக் கிடைத்த வாய்ப்புகளால் பள்ளர் சமூகம் பொருளாதார ரீதியாக மெல்ல மெல்ல எழுச்சி பெற்றது. இதனால் நிலபுலன்களை வாங்கவும் பயிரிடவும் அவர்கள் ஆரம்பித்தனர். வேறு வேறு வேலைவாய்ப்புக்களிலும் அவர்கள் ஈடுபடக்கூடியதாக இருந்தது. கூடவே புதிய அரசியல் விழிப்புணர்வும் அரசியல் இயக்கங்களும் அவர்களிடையே உருவாகின. இவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியாத தேவர் சமூகத்திலிருந்து பலத்த எதிர்ப்புக் கிடைத்தது. கொலை பாலியல் வன்முறை என்பன பள்ளர் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டன.

உள்ளூர் பொலிஸார் பெரும்பாலுமே தேவர் சமூகத்திலிருந்தே பெறப் பட்டிருந்தனர். இவர்கள் பள்ளர் சமூகத்தைச் சார்ந்த கிராமங்கள் மீது அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இப்படியான தாக்குதல்களில் குருசாமி குருஅம்மாள் எனும் 26 வயது கற்பிணிப் பெண் ஒருவரை நிர்வாணமாக்கி தெருத்தெருவாக இழுத்துச்சென்று தாக்கியுள்ளனர் பொலிஸார். பின்னர் அவரை 26 நாட்களாக சிறையில் அடைத்து வைத்தனர்.

'எவ்வளவு தான் நான் கத்திக்கதறிய போதும் அவர்கள் விடவில்லை. அவர்களுடைய வதையில் எனது குழந்தையும் செத்துத் தான் பிறந்தது.' என்று Human Rights Watch இடம் தெரிவித்தார் குருஅம்மாள்.

1997 யூலை மாதம் அம்பேத்கார் சிலையை உடைத்து இழிவு செய்தமைக்கு எதிராக தலித் மக்கள் நடத்திய அமைதியான ஆர்ப்பாட்டத்தின் மீது எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் பொலிஸார் துப்பாக்கப் பிரயோகம் செய்தனர். 10 பேர் கொல்லப்பட்டனர். 26 காயமடைந்தனர்.

பொலிஸாரும் உயர்த்தப்பட்ட சாதிக்காரரின் குண்டர் படையும் தலித் வாக்காளர்களையும் தாக்கி வருகின்றனர். 1998 பெப்ரவரி மாதம் தமிழ் நாட்டில் ஒரு தலித் கிராமத்தை பொலிஸார் தாக்கினர். கிராமத்தினர் செய்த 'தவறு' பாராளுமன்ற தேர்தல்களைப் பகிஷ்கரித்தமையாகும். பெண்கள் பயங்கரமாகத் தாக்கப்பட்டு அவர்களுடைய வாய்களுக்குள் தடிகளும் இரும்புக் குழாய்களும் செலுத்தப்பட்டன. தானியக் களஞ்சியங்கள் தீ மூட்டப்பட்டன. ■

# சுதர்சன் துரையப்பா: பரதத்தில் புதுமை!

**"காலங் காலமாகக் கற்றதையே திருப்பித் திருப்பி ஒப்புவிக்கும் வறட்டுத் தனத்திலிருந்து என்னை மாற்றிக் கொள்ள விழைந்தேன். பரதத்துக்குப் புதிய சேர்க்கைகளும் புதிய கற்பனைகளும் அவசியமாகின்றன. ஏனென்றால், ஒரு கலையின் விருத்தியும் பரிணாமமும் அவற்றில் தான் தங்கியுள்ளன" - சுதர்சன்**

"வாழ்வின் இயக்கத்தில் ஒவ்வோர் விடயமும் எமக்குள் ஏதோவொரு வகையிலான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆயினும், என்னைப் பாதிக்கும் விடயம் ஒரு கலைப்படைப்பாக வெளிப்பட வேண்டுமானால் அது எனது வாழ்வு சார் சூழலுக்கு எவ்வளவு பொருத்தமுடையதாக இருக்கிறது என்பதும் எனது ஆளுமைக்கு எவ்வகையான தாக்கத்தைத் தருகின்றது என்பதும் முக்கியமானது. அந்த வகையிலேயே எனது படைப்புக்களைப் பார்க்கிறேன்"

இது சுதர்சன் துரையப்பாவின் கூற்று.

ரொறன்ரோ நாட்டிய உலகில் ஒரு வித்தியாசமான தனித்துவம் கொண்ட படைப்பாளியாக விளங்குகின்ற சுதர்சனின் படைப்புகளாக தழும்புகள், காமக்கோலம், இன்டிகோ (Indigo) ஆகிய நடனக்கோவைகள் இதுவரை வெற்றிகரமாக மேடையேறியுள்ளன. நாட்டியத்தில் புதுமை செய்யும் கலைஞராக இப்படைப்புக்கள் அவரை வெளிக்காட்டி-யுள்ளன.

பரதம், கதகளி, யோகாசனம், தற்காப்புத் தாக்குதல் கலைகள் (Martial Arts) என்பவற்றில் பயிற்சி பெற்றவர் சுதர்சன் என்பதால் அவருடைய நடனத்திலும் ... ன அமைப்புக்களிலும் இவற்றின் தாக்கத்தை நிறையவே காணக் கூடியதாக உள்ளது.

"காலங் காலமாகக் கற்றதையே திருப்பித் திருப்பி ஒப்புவிக்கும் வறட்டுத் தனத்திலிருந்து என்னை மாற்றிக் கொள்ள விழைந்தேன். பரதத்துக்குப் புதிய சேர்க்கைகளும் புதிய கற்பனைகளும் அவசியமாகின்றன. ஏனென்றால், ஒரு கலையின் விருத்தியும் பரிணாமமும் அவற்றில் தான் தங்கியுள்ளன" என்று சொல்கிறார் சுதர்சன்.

காட்சிகளின் நெருக்கம் கருதி அவரின் நடனத் தெரிவுகள் தெளிவான அளிக்கைக்கு உறுதுணை புரிவதை அவருடைய படைப்புக்களில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்து வகையில் நடனத்திற்கு ஒரு புதிய அகராதியை உருவாக்க வேண்டும் என்று விரும்புகிறார் அவர்.

அவருடைய 'தழும்புகள்' எமது மத்தியில், குறிப்பாக இங்கு வாழ்கிற இலங்கை, இந்திய, பாகிஸ்தான் மக்களிடையே பெருமளவு நிலவுகிற நிறவாதம் சம்பந்தமானது. கறுப்புநிறம் என்பது அழகற்றது: இரண்டாம் தரமானது: வெறுப்பைத் தருவது போன்ற கருத்துக்களின் பலவகையான தாக்கங்கள் தழும்புகளை நிகழ்வின் மூலமாக வெளிக் கொணர்ந்திருக்கிறார் சுதர்சன்.


SUDHARSHAN'S "INDIGO"
NALO HOPKINSON

சிறுவயதில் இருந்தே நடனம் பயின்று வரும் ஒருவர் தனது கறுப்பு நிறத்தை வெறுத்து கடும் வெள்ளைப் பூச்சுக் களைப் பூசித் தன்னுடைய நிறத்தை மாற்றி அமைக்கிறார். தன்னுடைய சுயத்தை மூட்டை கட்டி வைத்து விட்டுப் புதிய முகமூடி ஒன்றுக்குள் புகுந்து விடுகிறார் அவர். தன்னைத் தானே வெறுத்துக் கொள்கிற நிலை அவரிடம் மேலோங்குவதையும், அந்நிலை தொடர்ந்து அவருடைய நடன மாணவர்களுக்கும் பரிமாற்றப் படுகிற கிரியைகள் தொடர்வதை யும் தழும்புகள் நடன நிகழ்வின் போது வெளிக்கொணர்கிறார் சுதர்சன். சுயத்துக்கும் வெளிப் பூச்சுக்கும் இடையேயான மனப்போராட்டத்தை நேர்த்தியான நடன அமைப்புக்களூடாகத் தருகிறார்.

எமது நிறத்தை ஒரு தழும்பாகவே கருதுகிற எம்மவர்களுக்கு ஒரு சுயதேடலுக்கான வாய்ப்பைத் தழும்புகள் தந்திருக்கிறது.

அண்மையில் ரொறன்ரோவின் Festival of Short Works என்னும் நாட்டிய விழாவில் இடம்பெற்ற சுதர்சனின் தயாரிப்பு Indigo. இது நீர் பற்றிய ஒரு நடனப்படிமங்களின் நிகழ்வாகும். நீரின் உருவாக்கம், நீரின் அலைவு, நீரின் நுட்பங்கள், நீரின் பாய்ச்சல், நீர் நிலைகள் எனப் பலவாறாக விரிகிறது இந்த நடனம்.

கூடவே எமது உடலிலும் உள்ள நீர் நிலைகளையும் - யோனி, ஆண்குறி, கருப்பை, முலை - நடனம் தனக்குள் இழுத்துக் கொள்கிறது.

Nalo Hopkinson என்னும் ஒரு பெண் மட்டுமே மேடையில். பொருத்தமான இசையும் அவருடைய நடனமும் மட்டும் தான். நடனத்தை வடிவமைத்திருந்தவர் சுதர்சன். Nalo Hopkinson ஒரு ஆபிரிக்க - கனடியப் பெண். மிகவும் பருத்த உடலுடையவர். இவரைத் தெரிந்தெடுத்தமைக்கு வலுவான காரணங்கள் பல உள்ளன என்று சொல்கிறார் சுதர்சன்.


"மனிதருள் பெண்ணே ஒரு தாங்கியாகச் செயல்படுகிறாள். அவள் இல்லாமல் மனிதத்தின் தோற்றத்தையும் உயிர்ப்பையும் நாம் கற்பனை செய்யவும் முடியாது: புராணங்களும் இதிகாசங்களும் கூடப் பெண்களை நதிகளாக உருவகம் செய்வதையும் பார்க்க முடியும். இது பெண்களின் வலிமையை உணர்த்துகிறது என்றே நான் பார்க்கிறேன். இதனால்தான் நீர் பற்றிய இந்த நடனத்துக்கு ஒரு பெண்ணைத் தெரிவு செய்தேன்." என்கிறார் சுதர்சன்.

நடனம் என்றாலே இளமை, மெல்லிய வாளிப்பான உடல் என்ற கருத்துக்கள்தான் பெருமளவுக்கு வழக்கமாக இருக்கின்றன. அந்த வகைமாதிரியுடனும் சுதர்சனுக்கு உடன்பாடில்லை. Indigo நடனத்தின் சிறப்புக்கும் வெற்றிக்கும் அதனுடைய வளைவு, நெளிவு, சுழிப்புகள் நிறைந்த சிக்கலான உடல் அசைவுகளும் ஒரு காரணம். மிகவும் பருத்த, அழகான உடல் கொண்ட Nalo Hopkinson இன் அசைவுகளும் நளினமும் சபையை ஆச்சரியத்தின் உச்சிக்குக் கொண்டு சென்றுவிட்டது. சிக்கலான அந்த உடல்வளைவு நடனங்களை வேறுயாராவது இவ்வளவு அழகாகச் செய்திருக்க முடியுமா என்ற வினாவே பலரிடம் இறுதியில் எழுந்த வினாவாகும்.



ஒரு நீர்க்குடம் போல Naloவின் உடல் சுருங்கி, வடிவம் பெற்றதைப் பலர் நம்பவே இல்லை! நேர்த்தியான அளிக்கை, ஜலதரங்கம், தென்னமெரிக்க Baka இனத்துப் பெண்களின் நீரின் தாளம் எனப்படும் இசைத் தொகுப்பு ஆகியவையே பின்னணி இசையாக இருந்தது. இடையிடை ரொறன்ரோவின் Glass Orchestra இசையும் பயன்படுத்தப்பட்டது. முற்றுமுழுதாக நீர்மையைக்கொண்ட இசையும் இசைக்கருவிகளுமே பயன்பட்டிருந்தன.

காமக்கோலம், இரண்டு பெண்களுடைய காதல், கலவி உறவுகளையும் ஆண் - பெண் உறவையும் நடனப்படிமங்களூடாகச் சித்திரித்த ஒரு அழகிய நிகழ்வாகும். இந்த நிகழ்வுகளில் சுதர்சனுடன் கூடவே மாலினி கிருபாகரன், டன்ஸ்ரன் ஈபேர்ட், பாகேசிறீவாஸ் ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.



ரொறன்ரோவில் அலட்டலும் ஆரவாரமும் இல்லாமல் நவீன நடனத்துக்கும் நடனத்தின் நவீனத்துவத்துக்கும் சுதர்சன் ஆற்றுகிற பங்கும் அவருடைய அளிக்கைகளும் முக்கியமானவை. பரதத்தைப் புதிய திசைகளுக்கு இழுத்துச் செல்வதற்கும் இவை வழிகாட்டும் என்பதே எனது கருத்து. எனினும் சுதர்சனுடைய நிகழ்வுகள் அனைத்துமே பெரும்பான்மையாகத் தமிழர்களுக்கு முன்னால் நிகழ்த்தப்படுபவை அல்ல. கனடாவின் மைய நீரோட்ட நடன அரங்குகளிலேயே இவை இடம்பெறுகின்றன. இந்த நிலையை மாற்றுவதற்கு சுதர்சனுக்கு நாங்களும் உதவி புரியத்தான் வேண்டும்.

அவருடைய தழும்புகள், மனவெளி கலையாற்றுக்குழு ஆதரவில் ஆறாவது அரங்காடல் நிகழ்வில் மேடையேற உள்ளது ஒரு நல்ல செய்தியாகும். பரவலாகத் தமிழர்களின் பார்வைக்கும் அவரது நடன நிகழ்வுகள் வரவேண்டும். அப்போதுதான் தமிழர்கள் மத்தியில் நடனம் குறித்துப் புதிய விழிப்புணர்வுகள் ஏற்பட முடியும். □

**கனடாவிலிருந்து**
**பா.அ. ஜயகரன்.**

நன்றி - நூலகத்திட்டம்



இட்டாலோ கால்வினோ

# நூலகத்தில் ஒரு தளபதி

ஆங்கிலம் வழி தமிழாக்கமும் குறிப்புகளும்:

**வ.கீதா - எஸ்.வி.ராஜதுரை**

**புகழ் வாய்ந்த** பாண்டூரியா தேசத்தில் ஒரு நாள் உயர் அதிகாரிகளின் மனங்களில் ஒரு ஐயம் தோன்றிவிட்டது. இராணுவத்தின் கௌரவத்திற்கு ஊறுவிளைவிக்கும் அபிப்பிராயங்கள் புத்தகங்களில் உள்ளன என்ற ஐயம்தான் அது. இராணுவத் தளபதிகள் உண்மையில் தவறுகள் செய்யக் கூடியவர்கள் தான் என்றும், போர்கள் என்பன எல்லாச் சமயங்களிலுமே போற்றத்தக்க முடிவை நோக்கிக் குதிரைப்படைகள் மேற்கொள்ளும் துரிதமான தாக்குதல்களாக அமைவதில்லை என்றும் கருதும் போக்கு - இப்போது மிகப்பரவலாகியுள்ள போக்கு - பண்டைக்கால, நவீனகால, வெளிநாட்டு, பாண்டூரிய நூல்கள் பலவற்றால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன என்பதை விசாரணைகளும் புலனாய்வுகளும் வெளிப்படுத்தியிருந்தன.

நிலைமையைக் கணித்தறிய பாண்டூரியாவின் தலைமைத் தளபதிகள் ஒன்றுகூடி விவாதித்தனர். ஆனால், எங்கிருந்து தொடங்குவது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஏனெனில், அவர்களில் ஒருவருக்குக் கூட புத்தகங்கள் தொடர்பான விஷயங்களில் நல்ல பரிச்சயம் கிடையாது. கண்டிப்பும் கறாருமிக்க தளபதி ஃபெடினா தலைமையில் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. பாண்டூரியாவிலிருந்து மிகப் பெரிய நூலகத்தின் நூல்கள் அனைத்தையும் பரிசீலிப்பது அந்தக் குழுவின் வேலை.


அந்த நூலகம், தூண்களும் மாடிப்படிகளும் நிறைந்த ஒரு பழைய கட்டிடத்தில் இருந்தது. சுண்ணாம்பு உதிர்ந்து கொண்டிருந்த சுவர்களில் ஒரு சில இடங்கள் விரிசல் கண்டிருந்தன. குளிர்நிறைந்த அறைகளில் அடைத்துத் திணிக்கப்பட்டிருந்த புத்தகங்கள் வெளியே பிதுங்கிக் கொண்டிருந்தன. ஒரு சில பகுதிகளுக்குள் புகவே முடியாதிருந்தது. சில மூலை முடுக்குகள் எலிகளுக்கு மட்டுமே சொந்தம். இராணுவச் செலவுகளின் சுமையால் திணறிக் கொண்டிருந்த பாண்டூரியா அரசின் வரவு செலவுத்திட்டம் அந்த நூலகத்திற்கு எந்த உதவியையும் வழங்கவியலாததாக இருந்தது.

நவம்பர் மாதத்தில், மழை பெய்து கொண்டிருந்த ஒரு காலை நேரத்தில் இராணுவம் நூலகத்தின் பொறுப்பை எடுத்துக்கொண்டது. தளபதி குதிரையிலிருந்து இறங்கினார். வாட்டசாட்டமான விறைப்பான உடம்பு, நன்கு சிரைக்கப்பட்டிருந்த பருமனான கழுத்து, ஒற்றை மூக்குக் கண்ணாடிக்கு மேலே சுளித்திருந்த புருவங்கள். முகவாய்களை நிமிர்த்திக் கொண்டும், கண்ணிமைகளை உயர்த்தியவாறும் ஒடிசலான நான்கு லெஃப்டினெண்டுகள் ஒரு காரிலிருந்து இறங்கி வந்தனர். ஒவ்வொருவரின் கையிலும் ஒரு சிறிய சூட்கேஸ். அதன் பிறகு படை வீரர் பட்டாளமொன்று கோவேறு கழுதைகள், வைக்கோல் போர்கள், சமையல் கருவிகள், கூடாரங்கள், முகாம் வானொலிக் கருவி, சமிக்ஞைக் கொடிகள் ஆகியவற்றுடன் வந்து கட்டிடத்தின் பழைய முற்றத்தில் முகாம் அமைத்தது.

கதவுகளின் பக்கத்தில் காவல் வீரர்கள் நிறுத்தப்பட்டனர். "இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகள் முடியும்வரை" யாரும் உள்ளே நுழையக் கூடாது என்ற அறிவிப்புத் தாள் கதவுகளில் ஒட்டப்பட்டது. விசாரணை மிகவும் இரகசியமாக மேற்கொள்ளப்படுவதை அனுமதிக்கும் உத்திதான் அது. பனியில் விறைத்துப் போகாமலிருக்கும் பொருட்டு கனத்த கோட்டுகள், மப்ளர்கள், கம்பளிக் குல்லாய்கள் ஆகியவற்றை அணிந்துகொண்டு ஒவ்வொரு நாள் காலையிலும் நூலகத்திற்கு வந்து கொண்டிருந்த அறிவாளிகள் மீண்டும் தத்தம் வீட்டிற்கே திரும்ப வேண்டியதாயிற்று. குழப்பமடைந்த அவர்கள் ஒருவரையொருவர் வினவினர்: "என்ன இது, எதற்கு இந்தப் பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகள் இந்த நூலகத்தில்? இந்த இடத்தை அவர்கள் நாசப்படுத்திவிடமாட்டார்களா? போதாததற்கு, குதிரைப்படை வேறு! துப்பாக்கியால் சுடவும் போகிறார்களா என்ன?"

நூலகப் பணியாளர்களைப் பொறுத்தவரை, கிழவர் திருவாளர் கிரிஸ்ப்பினோ மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட்டிருந்தார் - புத்தகங்கள் என்னவிதமாக அடுக்கப்பட்டிருந்தன என்பதை இராணுவ அதிகாரிகளுக்கு விளக்கும் பொருட்டு. அவர் குள்ளமான ஆள். முட்டை போன்ற வழுக்கைத் தலை. மூக்குக் கண்ணாடிக்குப் பின்னால் குண்டூசித் தலைகளைப் போன்ற கண்கள். நடவடிக்கையைப் பொறுத்தவரை, எல்லாவற்றுக்கும் முதலாவதாக தளபதி ஃபெடினாவின் அக்கறைக்குள்ளான விஷயம், படை வீரர்களைக் கொண்டு வருவதும் திரும்பிக் கொண்டுபோய்ச் சேர்ப்பதும் தான். ஏனெனில், விசாரணையை நடத்தி முடிக்காமல் விசாரணைக்குழு நூலகத்தை விட்டு வெளியே போகக்கூடாது என்பதுதான் அவருக்குத் தரப்பட்டிருந்த ஆணை. அது அதிக கவனம் குறிக்கப்பட வேண்டிய வேலை. விசாரணைக் குழுவைச் சேர்ந்தவர்களின் கவனம் திசை திருப்பப்பட அவர்கள் இடம் கொடுத்துவிடக் கூடாது. எனவே அவர்களது சாப்பாட்டுக்குத் தேவையான உணவுப்பொருட்கள், படை வீடுகளில் பயன்படுத்தப்படும் அடுப்புகள், வேண்டிய அளவிற்கு விறகுக்கட்டைகள், பழையவை என்றும், சுவாரசியமற்றவை என்றும் பெயர் பெற்ற சஞ்சிகைகள் ஆகியன வரவழைக்கப்பட்டன. பனிக்காலத்தில் நூலகம் முன்பு ஒரு போதும் அப்படி வெதுவெதுப்பாக இருந்ததில்லை. பாதுகாப்பான இடங்களில் தளபதிக்கும் அவருக்குக் கீழுள்ள அதிகாரிகளுக்கும் வைக்கோலால் நிரப்பப்பட்ட படுக்கைகள் போடப்பட்டன. அவற்றைச் சுற்றி நாலாபுறமும் எலிப்பொறிகள்.

பிறகு ஒவ்வொருவருக்கும் பொறுப்புகள் ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு லெஃப்டினெண்டும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிய நூல்களை, வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட நூற்றாண்டைச் சேர்ந்த புத்தகங்களைப் பரிசீலிக்க வேண்டும். புத்தகங்கள் வகைப்படுத்தப்பட்டு அடுக்கப்படுவதையும் ஒரு குறிப்பிட்ட புத்தகம் இராணுவ அதிகாரிகளாலோ, கீழ்நிலை அதிகாரிகளாலோ, சாதாரணப் படைவீரர்களாலோ படிக்கத் தகுந்ததா அல்லது இராணுவ நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டியதா என்பதைத் தீர்மானித்து, அதற்கு உரிய இரப்பர் முத்திரைக் குத்துவதையும் மேற்பார்வையிடும் பொறுப்பு தளபதிக்கு.



விசாரணைக்குழு, தனக்குப் பணிக்கப்பட்ட கடமையைச் செய்யத் தொடங்கிற்று. ஒவ்வொரு நாள் மாலையும் தளபதி ஃபெடினாவின் அறிக்கையை, முகாம் வானொலி நிலையம் இராணுவத் தலைமையகத்திற்கு அறிவித்துவந்தது: இத்தனை புத்தகங்கள் பரிசீலிக்கப்பட்டன. இத்தனை புத்தகங்கள் சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டன. இத்தனை புத்தகங்கள் அதிகாரிகளும், படைவீரர்களும் படிக்கத் தகுந்தவை எனத் தீர்மானிக்கப்பட்டன". புத்தக எண்ணிக்கைகள் பற்றிய இத்தகைய சுவாரசியமற்ற, சலிப்பூட்டும் அறிக்கைகளுடன் எப்போதாவது சில அசாதாரணமான செய்திகளும் இராணுவத் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டன: மூக்குக் கண்ணாடியை உடைத்துவிட்டு புத்தகங்களைச் சரியாகப் படிக்க முடியாமல் திணறும் ஒரு அதிகாரிக்கு உடனடியாக ஒரு மூக்குக் கண்ணாடியை அனுப்பவேண்டும். அபூர்வமான கையெழுத்துப் பிரதியிலேயே இருந்ததும் யாரும் கவனிக்காதிருந்ததுமான சிசரோவின்[1] புத்தகமொன்றை ஒரு கோவேறு கழுதை தின்றுவிட்டது - இப்படிப்பட்ட செய்திகள்.

ஆனால், இவற்றையெல்லாம் விட முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களும் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. அவற்றைப் பற்றிய செய்திகள் எதனையும் முகாம் வானொலி நிலையம் இராணுவத் தலைமையகத்திற்கு அனுப்பவில்லை. அதாவது, புத்தகக்காடுகள் குறைந்துகொண்டு வருவதற்குப் பதிலாக மென்மேலும் அடர்த்தியாகவும், சிக்கலும் சிடுக்குகளும் நிறைந்ததாகவும் வன்மத்தோடும் வளர்ந்து கொண்டிருப்பது போல் தோன்றியது. திருவாளர் கிரிஸ்ப்பினோ மட்டும் உதவிக்கு வராமலிருந்திருந்தால் அதிகாரிகள் அந்தக் காட்டில் வழிதவறிப் போயிருப்பர். எடுத்துக் காட்டாக இதைச் சொல்லலாம். ஒரு நாள் லெப்டினெண்ட் அப்ரோகாட்டி துள்ளிக்குதித்து, தான் வாசித்துவந்த புத்தகத்தை மேசைமீது விட்டெறிந்தான்: "இதென்ன அக்கிரமம்! கார்த்தேஜியர்களை[2] நல்லவர்களாகக் காட்டி ரோமானியர்களை விமர்சிக்கிறது, ப்யூனிக் போர்கள்[3] பற்றிய இந்தப் புத்தகம். இதைப்பற்றிய புகாரை உடனே தெரிவிக்க வேண்டும்." (சரியாகவோ, தவறாகவோ, பாண்டூரிய தேசமக்கள் தங்களை ரோமானியர்களின் வழித்தோன்றல்களாகக் கருதினர் என்பதை இங்கு சொல்லியாக வேண்டும்.) மிருதுவான செருப்பணிந்து, அமைதியாகவும் ஓசைப்படாமலும் நகர்ந்துவந்த வயோதிக நூலகர் அந்த லெப்டினெண்டிடம் ஒரு புத்தகக் கட்டைக் கொடுத்துவிட்டுக் கூறினார்: "அது ஒன்றும் இல்லை. இந்தப் புத்தகம் இந்த இடத்தில் ரோமானியர்களைப் பற்றி என்ன சொல்கிறது என்பதைப் படியுங்கள். இதையும் உங்கள் அறிக்கையில் சேர்த்துக் கொள்ளுங்கள். இதோ இந்த வியஷங்களையும் தான்." லெப்டினெண்ட் பதற்றத்துடன் அந்தப் புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கினான். பின்னர் சுவாரசியத்துடன் படிக்கத் தொடங்கிக் குறிப்புகள் எடுத்தான். குறிப்புகள் எடுக்கையில் தலையைச் சொரிந்து கொண்டு முணுமுணுக்கத் தொடங்கினான்: "அட கடவுளே! யார் கண்டார்கள். இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் இருக்குமென்று. ஆமாம் ஆமாம்! ரொம்ப நல்ல விஷயம்தான்! "சிலுவைப்போர்களுக்கு[4] உத்வேகம் கொடுத்த இலட்சியங்களின் புனிதத்தன்மை பற்றி சந்தேகம் எழுப்ப என்ன தைரியம் இவர்களுக்கு. ஆமாம் ஐயா ஆம். சிலுவைப்போர்கள் பற்றி" என்று கத்திக்கொண்டு கோபத்தோடு ஒரு புத்தகத்தை. மூடிவைத்தான் லெப்டினெண்ட் லுக்கெட்டி. அவனிடம் திருவாளர் கிரிஸ்ப்பினோ புன்முறுவலுடன் கூறினார்: "ஓ அந்தப் புத்தகமா. அதிலுள்ள விஷயம் பற்றிய அறிக்கையை நீங்கள் அனுப்பவேண்டுமானால், அது குறித்து மேலதிக விவரங்களை தரும் வேறு சில புத்தகங்களையும் நான் தரட்டுமா?" அலமாரியில் பாதியை அடைத்துக் கொண்டிருந்த புத்தகங்களை வெளியே எடுத்துக் குவித்தார். லெப்டினெண்ட் லுக்கெட்டி முன்புறமாகச் சாய்ந்து புத்தகங்ளோடு புத்தகமாய் ஒட்டிக் கொண்டான். அடுத்த ஒருவார காலம் அவன் புத்தகங்களைப் புரட்டுவதும் முணுமுணுப்பதும் காதில் விழுந்து கொண்டிருந்தது: "அப்பப்பா இந்த சிலுவைப் போர்களா, நாம் தான் மெச்சிக்கொள்ள வேண்டும்."

போகப் போக விசாரணைக்குழுவின் மாலை நேர அறிக்கைகளில் பரிசீலிக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை மென்மேலும் பெரிதாகிக் கொண்டே வந்தது. ஆனால், நல்ல புத்தகங்கள் எத்தனை, கெட்ட புத்தகங்கள் எத்தனை என்பன குறிக்கப்படுவது நிறுத்தப்பட்டது. தளபதி ஃபெடினாவின் ரப்பர் முத்திரைக்கு வேலையில்லாமல் போயிற்று. யாரேனுமொரு லெப்டினெண்டின் வேலையை மேற்பார்வையிடுகையில், "இது நல்ல நாவல் என்று ஏன் முடிவு செய்துவிட்டாய்? இதில் இராணுவ அதிகாரிகளைவிடப் படைவீரர்களே நல்லபடியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். பதவிகளில் உள்ள மேல் - கீழ் வரிசை மீது இந்த நாவலாசிரியர் இங்கு மரியாதை காட்டுவதே இல்லை" என்று தளபதி கூறினால், அந்த லெப்டினெண்டோ வேறு நாவலாசிரியர்கள் இதே விஷயத்தில் வேறு விதமான கருத்துச் சொல்லியிருப்பதை மேற்கோள் காட்டுவான். வரலாறு, தத்துவம், பொருளாதாரம் என்று பல விஷயங்களைப் பேசிப் பேசிக் குழம்பிப் போவான். இதனால் மணிக்கணக்கில் பகிரங்கமான விவாதங்கள் →

நடைபெற்றுவந்தன.

சாம்பல் நிறச் சட்டையணிந்து, கிட்டதட்ட கண்ணுக்கே புலனாகதவர் போல இருந்த திருவாளர் கிரிஸ்ப்பினோவோ எப்போதுமே சரியான நேரத்தில்தான் விவாதத்தில் தலையிடுவார். விவாதிக்கப்படும் விஷயம் தொடர்பான சுவாரசியமான தகவல்கள் கொண்ட புத்தகம் என்று தான் கருதும் ஏதோவொரு புத்தகத்தைக் கொண்டுவந்து தருவார். அது, ஒரு குறிப்பிட்ட புத்தகம் பற்றி தளபதி ஃபெடினா கொண்டிருந்த நம்பிக்கைகளை அடியோடு தகர்த்துவிடும்.

இதற்கிடையே படைவீரர்களுக்கு அதிகம் வேலையில்லாமல் போனதால் அவர்களுக்குச் சலிப்புத் தட்டிவிட்டது. அவர்களில் மிகவும் படித்தவனான பாரபாஸ்ஸோ, படிப்பதற்கு தனக்கொரு புத்தகம் தருமாறு அதிகாரிகளிடம் கேட்டான். முதலில் அவர்கள், துருப்புகள் படிப்பதற்குத் தகுதியானவை என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருந்த சில புத்தகங்களிலொன்றைத் தரவிரும்பினார். ஆனால், இன்னும் பரிசீலிக்கப்படாத புத்தகங்கள் இருப்பது அவர்களது நினைவுக்கு வந்துவிட்டது. கடமையைச் செய்வதற்குரிய நேரத்தைப் படைவீரன் பாரபாஸ்ஸோ புத்தகத்தைப் படிப்பதில் வீணடித்துவிடுவதை விரும்பாத தளபதி அதுவரை பரிசீலிக்கப்படாதிருந்த ஒரு புத்தகத்தை அவனுக்குக் கொடுத்தார். அது திருவாளர் கிரிஸ்ப்பினோவின் ஆலோசனையின் பேரில் தரப்பட்ட புத்தகம். மிக எளிதாகப் படிக்க முடியும் என்பது போலத் தோற்றமளித்த நாவல். படித்து முடித்ததும் அதைப்பற்றிய தகவலை பாரபாஸ்ஸோ தளபதியிடம் தெரிவிக்க வேண்டும் என்பது கட்டளை. இதேபோல மற்ற படைவீரர்களும் தாங்கள் படிப்பதற்கும் புத்தகங்கள் கேட்டனர். அவர்களுக்கும் புத்தகங்களும் அதேபோன்ற வேலையும் தரப்பட்டது.

படிக்கத் தெரியாதவர்களுக்கு படைவீரன் டொம்மாஸோன் உரக்கப் படித்துக் காட்டுவான். அவன் படித்துக் காட்டுவதைக் கேட்பவர்களோ தமது அபிப்பிராயங்களைப் படித்துக் காட்டியவனிடம் கூறுவர். பகிரங்கமான விவாதங்களில் அதிகாரிகளுடன் படைவீரர்களும் கலந்து கொள்ளத்தொடங்கினர்.

விசாரணைக்குழுவின் வேலையில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி அதிகமாக ஏதும் தெரியவில்லை: நெடிய பனிக்கால வாரங்களில் நூலகத்தில் நடந்தது என்ன என்பது அறிவிக்கப்படவில்லை. நாம் தெரிந்து கொண்டதெல்லாம் இதுதான்: தளபதி ஃபெடினா, தலைமையகத்திற்கு அனுப்பிக்கொண்டிருந்த அறிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துவந்து கடைசியில் ஒரேயடியாய் நின்று போய்விட்டன: தலைமைத் தளபதி அதிர்ச்சியடைந்தார்: விசாரணையை மிக விரைவாக முடித்துவிட்டு ஒரு முழுமையான அறிக்கையைக் கொண்டுவருமாறு வானொலியில் ஆணை பிறப்பித்தார்.

நூலகத்திற்கு அந்த ஆணை சென்றடைந்தபோது தளபதி ஃபெடினாவின் மனத்திலும் அவரது ஆட்களின் மனத்திலும் முரண்பட்ட உணர்ச்சிகள் ஏற்பட்டிருந்ததைக் காண முடிந்தது. ஒரு புறம் திருப்திப்படுத்தப்பட வேண்டிய புதிய புதிய அக்கறைகளை அவர்கள் இடைவிடாது கண்டறிந்து கொண்டிருந்தனர், தங்களால் ஒருபோதும் கற்பனை செய்து பார்த்திராத அளவுக்குப் புத்தகங்கள் படிப்பதிலும், ஆய்வுகள் செய்வதிலும் மகிழ்ச்சியடைந்துவந்தனர். மற்றோர் புறமோ, வெளி உலகிற்கு மீண்டும் திரும்பிச் செல்வதற்கு, அவ்வுலக வாழ்க்கையை மீண்டும் வாழ்வதற்கு அவர்களால் இனியும் காத்திருக்க முடியவில்லை.

அந்த உலகமும் வாழ்க்கையும் இப்போது மேலும் சிக்கலானதாகவும், அவர்களது கண்களுக்கு எதிரிலேயே புதுப்பிக்கப்பட்டவையாகவும் தோன்றின: எனினும், மற்றோர் புறமோ, நூலகத்தைவிட்டு வெளியேற வேண்டிய நாள் விரைவாக நெருங்கிக் கொண்டிருந்தது என்ற உண்மை அவர்கள் உள்ளங்களில் கிலேசத்தை நிரப்பியது. தாங்கள் செய்துவந்த பணியைப் பற்றிய விவரங்களை அவர்கள் தந்தாக வேண்டும் என்பதுதான் அந்த கிலேசத்திற்குக் காரணம். அவர்களது தலைகளில் ஏராளமான கருத்துக்கள் பொங்கிவழிந்து கொண்டிருந்தன. தாங்கள் சிக்கிக்கொண்ட ஒரு இடுக்கமான மூலையிலிருந்து எப்படி வெளியே வருவது என்பது அவர்களுக்கும் புரியவில்லை.

மாலை நேரத்தில் அவர்கள் முதலில் கிளைகளிலுள்ள மொட்டுக்கள் அந்திநேரச் சூரியக் கதிரில் ஒளிர்வதையும், பின்னர் நகரத்தில் விளக்குகள் எரியத் தொடங்குவதையும் ஜன்னல்கள் வழியாகப் பார்த்துக் கொண்டிருப்பர். அப்போது ஒருவன் கவிதையொன்றை உரக்கப் படிப்பான். ஃபெடினா அவர்களோடு இருப்பதில்லை. இறுதி அறிக்கையை எழுதிமுடிக்கும் பொருட்டுத் தன் மேசையருகேத் தன்னைத் தனியாக விட்டுவிடும்படி ஆணையிட்டிருந்தார். ஆயினும் அடிக்கடி மணியடித்துக் கொண்டுதானிருந்தது. "கிரிஸ்ப்பினோ, கிரிஸ்ப்பினோ" என்று அவர் அழைத்துக்கொண்டேயிருந்தது மற்றவர்கள் காதில் விழாமல் இருக்கவில்லை. அந்த வயோதிக நூலகரின் உதவியில்லாமல் அவரால் எதையும் செய்ய முடியாமல் போயிற்று. கடைசியில் அவர்களிருவரும் அதே மேசையில் சேர்ந்து உட்கார்ந்து அறிக்கையை எழுதினர்.

ஒரு பிரகாசமான காலைநேரத்தில் விசாரணைக் குழு இறுதியாக நூலகத்தை விட்டு வெளியேறி தலைமைத் தளபதிகளிடம் அறிக்கையை அளிக்கச் சென்றது. தலைமைத் தளபதிகள் அடங்கிய கூட்டத்தின் முன்பாக விசாரணையின் முடிவுகளை ஃபெடினா விளக்கினார். அவருடைய பேச்சு, மானுடகுல வரலாற்றின் தோற்றத்திலிருந்து இன்று வரையிலான ஒருவகைத் தகவல் களஞ்சியமாக அமைந்திருந்தது. விவாதத்திற்கு அப்பாற்பட்டவை என பாண்டூரிய தேசத்தின் நல் மக்களால் கருதப்பட்டுவந்த கருத்துகளின் மீதான தாக்குதல்கள் இருந்த ஆவணம் அது: தேசத்தின் அவலங்களுக்குக் காரணம் ஆளும் வர்க்கங்களே எனப் பிரகடனப்படுத்தும் அறிக்கை அது. தவறான கொள்கைகளுக்கு, தேவையற்ற போர்களுக்குத் தரப்பட்ட வீரமிக்க பலிகள் என்று மக்களைப்போற்றும் அறிக்கை அது. ஓரளவு குழப்பமான அறிக்கைதான் - புதிய கருத்துக்களை அண்மையில் தழுவிக் கொண்டவர்களுக்கு நேர்வதைப் போன்ற, மிகவும் எளிமைப் படுத்தப்பட்டவையும், முரண்பட்டவையுமான பிரகடனங்கள் கொண்ட அறிக்கை. ஆனால், அதனுடைய ஒட்டுமொத்தமான அர்த்தத்தைப் பொறுத்தவரை சந்தேகத்திற்கிடமே இல்லை. திகைப்படைந்தனர் தலைமைத் தளபதிகள். அவர்களது கண்கள் அலகவிரிந்தன. பிறகுதான் அவர்களது குரல் மேலெழும்பி வந்தது. அவர்கள் கத்தத் தொடங்கினர். தளபதி ஃபெடினா தனது பேச்சை முடிக்கக் கூட அனுமதிக்கப்படவில்லை. அவரை இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு அனுப்ப வேண்டும், அவரது பதவி அந்தஸ்த்தைக் குறைக்க வேண்டும் என்ற பேச்சு அடிப்பட்டது. ஆனால், அப்படிச் செய்தால் இராணுவத்திற்கு அவப்பெயர் ஏற்பட்டுவிடலாம் என்ற அச்சமும் தோன்றாமலில்லை. எனவே "தளபதியும் நான்கு லெப்டினெண்டுகளும் கடமையாற்றி வருகையில் அவர்களுக்குக் கடுமையான மூளைக்கோளாறு" ஏற்பட்டதன் காரணமாக உடல்நலக் குறைவின் பொருட்டு பதவியிலிருந்து ஓய்வு பெறும்படி செய்யப்பட்டனர். குளிரில் விறைக்காமலிருக்கும் பொருட்டு கனத்த கோ[illegible]ளும், தடிப்பான ஸ்வெட்டர்களும் அணி[illegible]ாதாரண உடையில் அவர்கள் செல்வதையும், புத்தகங்களுடன் அவர்களுக்காகத் திருவாளர் கிரிஸ்ப்பினோ காத்துக் கொண்டிருப்பதையும் அடிக்கடி காண முடிந்தது.

குறிப்புகள்:

1. சிசெரோ: கி.மு. 106-43- இல் ரோம் நகரில் வாழ்ந்த சிசெரோ (Marcus Tullius Cicero) கவர்ச்சிமிக்க சொற்பொழிவாளர் மட்டும் அல்ல, அவர் ஒரு தத்துவவாதியும், அரசியல்வாதியும் ஆவார். விவேகம், நீதி, தைரியம், நிதானம் ஆகிய நான்கும் மனிதருக்கு இருக்க வேண்டிய நற்பண்புகள் என்று கூறிய அவர், அரசு நடவடிக்கைகளில் முடியாட்சி நெறிகள், பிரபுத்துவ நெறிகள், ஜனநாயக நெறிகள் ஆகிய மூன்றும் சேர்த்து கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்திவந்தார்.

2. கார்தேஜியர்கள் (Carthageans): இன்றைய ஆப்பிரிக்க நாடான டுனீசியாதான் ரோமப்பேரரசு நிலவிய காலத்தில் கார்த்தேஜ் என அழைக்கப்பட்டு வந்தது.

3. ப்யூ னிக் போர்கள் (Bunic Wars): கார்த்தேஜ் அரசுக்கும் ரோமப் பேரரசுக்குமிடையே ஏறத்தாழ 120 ஆண்டுகள் (கி.மு. 264 - 146) நடந்த மூன்று போர்கள். இந்தப் போர்களின் போதுதான் கார்த்தேஜ் ஹானிபால் (Hannibal) ரோம் நகரத்தையும், ரோமப் பேரரசைச் சேர்ந்த வேறு சில நகரங்களையும் கைப்பற்றினார். ஓர் ஐரோப்பிய நகரைக் கைப்பற்றிய முதல் ஐரோப்பியனல்லாதவன் ஹானிபால் தான்.

4. சிலுவைப் போர்கள் (Crusades): இஸ்லாமியர்களிடமிருந்து, கிறிஸ்தவர்களின் புனிதத் தலமான ஜெருசலத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற பெயரால் மத்தியகால ஐரோப்பிய அரசர்கள், இஸ்லாமிய அரசுகளுக்கு எதிராக நடத்திய போர்கள். அவற்றின் நோக்கம், அன்று மிகவேகமாகப் பரவி வந்த இஸ்லாமிய மதத்தினை ஐரோப்பாவில் பரவாமல் தடுப்பதும், ஜெருசலத்தை கைப்பற்றுவதுமாகும் என்று சொல்லப்பட்டாலும், ஐரோப்பிவிற்கும், ஐரோப்பா அல்லாத பிற நாடுகளுக்கும் இடையே இருந்த வர்த்தக மார்க்கத்தைக் கைப்பற்றுவதும், இஸ்லாமிய அரசர்களின் நாடுகளைக் கைப்பற்றி ஐரோப்பிய அரசுகளின் எல்லைகளை விரிவுபடுத்துவதுமாகும்.

Courtesy: INDEX CENSORSHIP NO:6-1999



என்
கனவுகளுக்கு மட்டும்தான்
நீ சொந்தக் காரன் அல்ல....

என் பொன்மேனியில் உணர்வூட்டும்
ஐம்புலன்கள் அனைத்துக்குமே உரித்தானவன் நீ...

இங்கெல்லாம்-
எப்போதும்
என் மனக் கதவைத்
திற[illegible]போட்டே உட்கார்ந்திருக்கிறேன்....

மூடிக்கொண்டால் ஒரு வேளை
உன் நினைவில் ஊறும்
தாபங்கள் அனைத்தும் அத்தலைந்துவிடுமே
என்ற கழிவிரக்கம் தான்...

காட்டில் வீழ்ந்து மறைந்து போகும்
நிலவொளிகள் போல்-
அலைகளில் கரையொதுங்கி அழிந்துபோகும்
நுரைக் குமிழிகள் போல்
என் மென் உணர்வுகள் அனைத்தும்
உதித்து உதித்து மடிந்து கொள்கின்றன
என் மன்னவனே....

இருந்துவிட்டு இருந்துவிட்டு-
அணிவகுத்து என் செவிகளில் பொழியும்
உன் மொழி அழகின்
குளிர்ச்சியிலே
இதம்கண்டு
இறக்கைகள் இல்லாமலே
மேலே மேலே போகிறேன்....

காதலனே....

ஒடிந்தது சிறகென வீற்றிருந்து
எத்தனை நாள்தான் அழுதிட முடியும்....?

ஒருவகையில் பார்த்தால்
சிறைக் கம்பிகளுக்குள்
குந்தி இருக்கும்
கைதிகள் போல்தான் நாமெல்லாம்.....

நமக்குள்...
சுதந்திரம் இருந்தபோது
அதுபற்றித் தெரியவில்லை...
அனைத்தையுமே தவறவிட்டோம்....

இன்று-
அது பறிக்கப்பட்டபோது
ஆளுக்காள் ஆசைப்பட்டு
இயலாமைக்குள் துடிக்கின்றோம்.

இந்த உணர்வு....,
இந்த உயிர்....,
இந்த உலகில்...
வேறு எந்த மனிதனிடம்.....

-சஸ்னி

1999.04.15

நன்றி - நூலகத்திட்டம்



## நூல் மதிப்பீடு

# "வரைவிலக்கணங்களை விலக்கும் ராஜேஸ்வரி"

அருந்ததி ரட்ணராஜா



'வசந்தம் வந்து போய் விட்டது'
-ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்.
வெளியீடு:
குமரன் வெளியீட்டகம்
சென்னை.
விலை இந்திய ரூபா 55.00

ராஜேஸ்வரியின் பெண் பாத்திரப்படைப்பாக்கத்தின் திறனுக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாக வரும் மற்றோர் நாவல். பெண் என்றதும் உடலளவுகள் உடன் நினைவுக்கு வரும். பின் எப்போதோ சொல்லிவைத்த வரைவிலக்கணத்துக்கமைய அவள் இருப்பாள் என்ற சிந்தனை ஓடும். அடுத்து தமிழ்ப் பெண் ஆங்கிலப் பெண் என்றால் இப்படி இப்படித்தான் இருக்கவேண்டும்: இருப்பார்கள் என்று நாமே கற்பித்துக்கொண்டு விடுவோம்.

ராஜேஸ்வரி இந்த வரையறைகளை விலக்கிவிடுகிறார். சற்று மாறியும் சிந்திக்க வைக்கின்றார். இந்த நாவலில் சராசரி தமிழ்ப்பெண்களையும் ஒவ்வொரு கோணத்தில் நிற்கும் ஆங்கிலப் பெண்களையும் சந்திக்கின்றோம். எனக்கு எமிலியையும், சேராவையும் கொஞ்சம் அலச ஆவலாக இருக்கின்றது. இருவரும் ஒரு விதத்தில் ஒற்றுமைப்பட்டவர்கள் இருவருக்கும் தமிழ்ப்பெயரில் பிள்ளைகள் இருக்கின்றனர். எமிலிக்கு ரவியும் சேராவுக்கு கிருஷ்ணாவும்.

எமிலி கதையின் முக்கியபாத்திரம். சேரா சின்னதாய் வந்து சொல்பவள் தான்.

ஆனாலும், எனக்கு சேரா என்ற பெண் மனதில் உருவமாய் வந்து பேசிப் போனாள். சில பாத்திரங்களில் எம்மையறியாமல் எம்மை மீறி மனம் பதிவதற்கு சில பின்னணிகள் காரணமாக இருக்கலாம். எனக்கு எப்பவும் ஓவியப்பெண்களில் ஓர் நாட்டம். சேரா நுண்கலைத்துறை மாணவியாக அறிமுகமாகி, உலகம் முழுக்க ஓடித் ஓடித்திரிந்து ஓவியக் கண்காட்சி வைப்பவள். இந்தப் பாத்திரத்தை மனக்கண்ணில் கண்டு இரசித்து மகிழ்ந்தேன்.

எமிலி ஓர் 'Ideal Woman' இப்படி ஒரு பெண் இருந்தால், எப்படி இருக்கும் என்ற ராஜேஸ்வரியின் அதீத கற்பனையிலிருந்து படைக்கப்பட்டவள் எமிலி அதீத கற்பனையோ அல்லது உண்மையிலேயே இப்படி ஓர் பெண்ணை ராஜேஸ்வரி சந்தித்தாரோ தெரியாது. நான் எமிலியை கற்பனையில் தான் கண்டிருக்கிறேன்.

தனக்கென்று குழந்தை வேணும். ஆனால் கணவன் குடும்பம் என்ற தொல்லைகள் வேண்டாம் என்ற கருத்தைக் கொண்டிருப்பவள் - அப்படியே தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறாள். இந்த அவளின் வாழ்க்கை எந்தளவிற்கு வெற்றியளித்திருக்கிறது - குறிப்பாக அவள் தன் மனதுக்கு எந்தளவு உண்மையாக இருக்கிறாள் என்ற கேள்விகளை எமிலியை நோக்கி கட்டாயம் கேட்க வேண்டும் போல் இருக்கிறது.

கலியாணமும் கணவனும் இல்லாமல் இந்த உலகில் வாழமுடியாதா? என்ற கேள்வி இன்று பெண்கள் மத்தியில் அதிகம் எழுப்பப்படுகின்ற கேள்வி தான். எமது கலாசாரத்தில் திருமணம் செய்யாமல், குழந்தை பெற்றுக் கொள்வது அதுவும் அவளே விரும்பி, நினைத்துக்கூட பார்க்கக் கூடாத விடயம். அதனால் கலியாண பந்தத்தை விரும்பாத பெண்களும் கூட சமூகத்திற்காக தம் விருப்பை விட்டே கொடுத்து விடுபவர்களாகின்றனர். இதிலிருந்து சூழ்நிலை காரணமாகவோ அல்லது தாமாக விரும்பியோ தப்பித்த பெண்கள் கூட தமக்கென்று குழந்தையை பெற்று வளர்ப்பதென்பது கேள்வியாகவே மிஞ்சி நிற்கின்றது. தனித்து வாழும் சூழ்நிலைக்குறப்டும் பெண் குழந்தை ஒன்றை தமது பிற்பட்டகாலத்தில் தத்தெடுப்பது தான் எமது சமூகம் அறிந்த விடயம். இதிலிருந்து மாறி நிற்கின்றாள் எமிலி.

இந்திய பிராமணனைக் காதலித்து அவன் குழந்தையை வயிற்றில் சுமக்கும்வேளை அவனை சந்தோஷமாக இந்தியாவிற்கு வழியனுப்பிவைக்கிறாள். அவள் காதலன் தனக்கு ஓர் குழந்தை இவள் வயிற்றில் பிறக்கப்போகுது என்ற விளக்கமே இல்லாமல் இந்தியாப் போய் அழகாக சீவிக்கத் தொடங்குகிறான். நல்ல ஆண்கள் தான். மேற்கத்தைய கல்லூரிக் காதலர்கள் கட்டில் வரை உறவை வளர்த்துக் கொள்வது சகஜம் என்ற விளக்கத்துடனேயே இந்த கதாபாத்திரங்களை நோக்க வேண்டும். குழந்தையைப் பெற்றுக்கொள்வதும், விடுவதும் பெண்ணின் பொறுப்பு - அவள் குழந்தை பெறமாட்டாள் என்ற நம்பிக்கை ஆண்களுக்கு இருக்கும் போல -

இவ்வாறு ரவியும் தானும் என வாழ்க்கையை அமைத்துக் கொண்ட எமிலி இப்படித் தான் தன்னை நினைத்துக் கொள்கிறாள்.

".......ஆனால், உங்களைப் போல் ஊர் உலகமெல்லாம் சொந்தங்கள் இல்லாவிட்டாலும் என் காலி- லேயே நிற்கப் பழகிக் கொண்டு விட்டாள். எனது விடயங்களையும் எனது குழந்தையின் விடயங்களையும் முடியுமானவரையில் சுமுகமாகச் செய்கிறேன் என்று நம்புகிறேன்"

தன் தகப்பன் மீதான வெறுப்பு எமிலிக்கு. தகப்பன் இல்லாமல் தான் ஒரு பெண் தனித்து நின்று ஒரு குழந்தையை வளர்க்க வேண்டும் என்ற வேகத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அல்லது போனால் தாயாக, தகப்பன் இல்லாத நிலையில் குழந்தையை குறிப்பாக குழந்தையின் ஆரம்ப காலகட்டங்களில் வளர்க்கும் சிரமங்களை அவள் தானாகவே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாள். இந்த நிலையில் அவள் மூலம் இந்தக்குறிப்பு வருகின்றது.

"..... தகப்பன்கள் என்ற பெயரில் உப்புச்சப்பில்லாமல் சில மனிதர்கள் உறவைத் தொடர்கிறார்கள் என்று உணர்ந்து கொள்ள முடியாத வயது ரவிக்கு. அவனது தகப்பன் வித்தியாசமானவன். ஆனால் அந்தத் தகப்பனுடன் வாழும் நிலை ரவிக்கில்லை. அந்தக் குறையைத் தீர்க்கிறான். எத்தனையோ தரம் முயன்று பார்த்திருக்கிறேன். ஆனால், சிலவேளைகளில் எனது அப்பா எங்கே இருக்கிறார்? எப்படியிருக்கிறார்? என்னைப் பார்க்க ஏன் வரமாட்டேன் என்கிறார்? என்றெல்லாம் அவன் கேட்காமலில்லை"

தகப்பன் இல்லாமல் குழந்தைப் பெற்றதில் இந்தச் சந்தர்ப்பங்களில் எமிலி எந்தளவு துக்கப்பட்டிருப்பாள். 'தகப்பன்மார்கள் கெட்டவர்கள் என்ற பொதுவான விதிமுறை ஒன்றும்,' என்றும் குழந்தைகளுக்கு வரப்போவதில்லை. ரவியின் இளமைக் காலத்தில் தகப்பனை இல்லாமல் செய்த குற்றம் எமிலிக்கு மனவருத்தமான விடயம்தானே. கொஞ்சம் வளர்ந்தபின் எந்த நல்ல தகப்பனையும் குழந்தைகள் கவனிக்காமல் விட்டுவிடுவது பொதுவான விடயம்.

கதையைப் படித்துக் கொண்டு போகும்போது எமிலி பற்றி எமக்கெழும் கேள்விகளை ஆசிரியர் குமார் என்ற பாத்திரம் மூலம் எமிலியை நோக்கி கேட்கவைக்கின்றார், ரவியின் தகப்பன் ... கூறும்போது,

"...ஆனந்த் ஒரு நல்ல மனிதன். என்றே தொடங்குகிறான். மேலும்.. "நான் தான் அவரைக் கல்யாணம் செய்யமறுத்தேன் என்னைத் தாயாக்கிவிட்டு ஏமாற்றிவிட்டு ஆனந்த் என்னைப் பிரியவில்லை..." தனக்கு வாழ்கையில் ஏற்பட்ட அனுபவங்களின் முடிவே தான் தனது எதிர்காலத்தை இவ்வாறு அமைத்துக்கொள்ள உறுதிப்படுத்தின என்று விளக்குகிறாள்.

"எமிலி தன் சுயநலத்தக்காக ரவியை அவன் தகப்பனிடமிருந்து பறித்ததைப்பற்றிக் கேட்கும் போதும் அவன் தன் நிலையில் நின்றே பேசுகிறாள்.

"இரண்டு பெற்றோரும் வளர்த்தாற் தான் குழந்தைகள் சரியாக வளர்வார்கள் என்பதில்லை. சண்டையும் சச்சரவுமான இரண்டு பெற்றோரிடம் வாழும் சூழ்நிலையை விட அமைதியும் அன்புமுள்ள ஒரு பெற்றோர் ஒரு குழந்தையின் மன, உடல் வளர்ச்சிக்கு மிகவும் உதவுவார்கள் என்று நம்புகின்றேன். மீண்டும் அவள் அவளின் அனுபவபின்னணியை வைத்து தனது வாழ்வைக் கூடவே ஓர் குழந்தையின் வாழ்வையும் அமைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது புலப்படுகிறது.

இது இவளின் ஒரு பக்கம். ஆண் துணையில்லாமல் இளம் பெண்கள் வாழ்வதில் வரும் சிக்கல்கள் இந்த முற்போக்கான ஆங்கிலப் பெண்ணையும்விட்டு வைக்கவில்லை என்றே கூற விரும்புகிறேன். டேவிட்டுடன் ரெயிலில் ஏற்பட்ட சந்திப்பு தனியே ரெஸ்டோரன்ட்டுக்கு போகும்வரை நட்பாகியது. அவன் தன் சினேகிதியின் கணவன் என்பது அறிந்ததும் எமிலி விலகிக்கொள்கிறாள். ஆனால், இதுவே டேவிட்டும் அவன் மனைவியும் பிரிய காரணமாகிவிடுகிறது. "உலகத்தைவிட்டு எங்கேயாவது ஓடவேண்டும் போலிருக்கிறது என்றும் ரவி உடலால் சுகம் அடையும் போது நான் உள்ளத்தால் பேதலித்துப்போயிருக்கிறேன்" என்றும் அழுதுவிடும் நிலையில் எமிலி குமாருக்கு கூறுகிறாள். அவளுக்கு குமார் இச்சந்தர்ப்பத்தில் அவள் துக்கத்தைக்கேட்க ஓர் துணையாக நிற்கிறான்.

"I wish I have a shoulder to cry" எமிலியின் இந்த வாக்கியம் அவள் அமைத்துக்கொண்ட இந்த தனித்த வாழ்க்கையை கேள்வியாக நிறுத்துகிறது. யாருக்கும் ஓர் நல்ல துணை, நம்பிக்கையான துணை, எங்களைக் கேட்கஓர் ஆள் தேவை. அது ஆணாகத்தான் இருக்கவேண்டுமென்றில்லை. இச்சந்தர்ப்பத்தில் பாலியல் ரீதியான உறவை மறப்போம். ஆனால், முடியாதென்பது கடினம் தான். எமிலி கூட டேவிட் தன் சிநேகிதியின் கணவனாக இல்லாதுபோனால் அவனுடன் தன்னைப் பகிர்ந்து கொண்டிருக்க மாட்டாளா?

முடிவாக,

டேவிட்டிலிருந்து தப்பத்தான் என்னுடன் பழகிறாயா? குமார் கேட்டான்.

"நான் யாருக்கும் தப்பிவாழத் தயாராயில்லை. எனக்கு என்ன வேண்டும் என்று தெரியும். எப்படி வாழ வேண்டும் என்று தெரியும். என் பாதையில் என்னுடன் நீங்கள் துணைவரத் தயாராயிருந்தால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன். எமிலி வழக்கம்போலத் தெளிவாகச் சொன்னாள்." ஆசிரியர் எமிலிக்கு ஒரு துணை தேடிக்கொடுத்து விடுகிறார். ஏன்? தன்னம்பிக்கையும் துணிவும் நேர்மையும் என பல நற்குணங்களுடன் இருக்கும் எமிலி தனித்து வாழ்ந்து சாதித்திருக்கமாட்டாளா? கேள்வியாக் நிறுத்திக்கொள்கிறேன்.

அடுத்து சேரா, இவள் ஏமாற்றப்பட்டவள். தமிழ் வாலிபனைக் கல்லூரியில் காதலித்து வயிற்றில் குழந்தையுடன் கைவிடப்படுகிறாள். காதலனின் தமக்கையின் நாடகமே அவள் தன் காதலனைப் பிரியக் காரணமாகின்றது. இங்கேயும் கூட சேராவின் காதலன் குற்றமற்றவனாகவே காட்டப் படுகிறான். அவன் குழந்தை சேரா வயிற்றில். சேரா ஓவியக் கண்காட்சியை அமெரிக்காவில் நடத்திவிட்டு இந்த நல்ல செய்தியுடன் காதலனைத் தேடி வர அவன தமக்கை அவரைன காதலனைச் சந்திக்காமலே வழிபண்ணிவிடுகிறாள். சேரா கிருஷ்ணாவை பெற்றுக் வளர்க்கிறாள்.

ராஜன் சேராவை பன்னிரண்டு வருடங்களில் பின் தன்னையே உரித்துபடைத்திருக்கும் கிருஷ்ணாவுடன் காண்கிறான்.

சேரா ராஜன் சந்திப்பு அவன் குடும்பத்தையே குழப்பிவிடுகிறது.

கடைசியாக - சேரா ராஜனின் மனைவியிடம் வரும் காட்சியை மிக அழகாக படைத்திருக்கிறார் ஆசிரியர். "மிகவும் எடுப்பான உடையணிந்து ஒரு ஆங்கிலப் பெண் உஷாவின் கட்டிலை அணுகிவந்துகொண்டிருந்தாள்.

"சாந்தியிடம் நேராக வந்து, எனது பெயர் சேரா" என்றாள் எனக்கு சேரா கண்முன் தோன்றி மறைந்தாள்.

தனியே இரண்டு வருடங்கள் ஓர் குழந்தையை வளர்த்த தைரியம் அவளிடம் இருக்கிறது. இருந்தாலும் அதை ராஜனை பன்னிரண்டு வருடங்களின் பின் கண்டு கூறும்போது கண்கலங்குகிறாள் - ஓர் சாதாரண பெண் அப்படித்தான் இருப்பாள்.

சாந்தியுடன் மிகத்தெளிவாக அவள் பேசும்வரிகள் ஓர் முதிர்ச்சியன பெண்ணைக் கண்முன் கொண்டு வருகின்றாள்.


"நாளைக்கு நான் அமெரிக்காவுக்குப் போகிறேன். நீயும் ராஜனும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். எனது வருகையால் உங்கள் வாழ்க்கையில் பிரச்சினை வரக்கூடாது என்று பிரார்த்திக்கிறேன். உஷாவின் நிலையில் நீங்கள் இருவரும் உங்கள் ஒன்றுபட்ட அன்பை அந்தக் குழந்தைக்கு கொடுக்கவேண்டும். ஆத்மீகபலம் மிகவும் வலிமையானது. தாய் தகப்பன் அன்பு எந்தக் குழந்தையின் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது" சேரா போய் விட்டாள்.

அமெரிக்காவில் திருமணமாகி இரு் பெண் குழந்தையின் தாய் இவள்.

எமிலியிலிருந்து அதிகம் வித்தியாசப்படவில்லை இவள். எமிலி தானே விரும்பி தனித்து வாழ்ந்தவள். சந்தர்ப்பம் கிடைக்கும் போது துணையைத் தேடுபவள் தான் சேரா. நிரந்தரமாகத் தனக்கொரு குடும்பத்தை அமைத்துக் கொண்டிருக்கிறாள். அது த்ான் வித்தியாசம். முடிவாக - எமிலி சேரா அழகான பெண்களால் மனதால், நினைவால், நடத்தையால் ஆசியக் குழந்தைகளின் தாய்மார் என்பதும் அவர்களில் ஓர் பற்றுதலை ஏற்படுத்திவிடுகிறது. □

---

'அன்பான கடவுளும் பயங்கரமான இரவும்'
வெளியீடு:
திலினா வீரசிங்க
தேவத்தை, இராகம.
விலை:ரு.80.00



நாந்துனன கெஹனிய (இனந்தெரியாத பெண்), பிட்டுவஹால் கள தருணிய (வெளியேற்றப்பட்ட பெண்) ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்ட பெண்ணிலைவாதியான ஆசிரியரின் மூன்றாவது சிங்கள சிறுகதை நூல் இதுவாகும்.

'இறைவன் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்க, பயங்கரமான இரவில், தீப்பற்றி எரியும் நாட்டில், பால் சிந்தும் நகரத்தில் நிழல்களுக்கிடையில் வாழ்வைத்தேடும், இசபெல்... மரியா.. நர்மதா.. மற்றும் அவர்கள்... அனைவரையும் அறிந்துகொள்ள உங்களுக்கோர் அழைப்பு' என ஆசிரியர் நூல்பற்றிய சுருக்கக் குறிப்பில் குறிப்பிடுகின்றார்.

மாரியா என்ற பெண் சிறுவயது முதல் நிகழ்கால அரசியல் சூழ்நிலைவரை முகம்கொடுக்கும் அழுத்தங்கள், இயேசு கிறிஸ்து மீதான அன்பு என்பன கதைக்கருவாக உள்ளது. அவள் வாழ்க்கையில் குறுக்கிடும் ஆண்கள், பெண்கள் என அழுத்தங்கள் நீளுகின்றன. மாரியா என்ற 'பெண்' இங்கு முக்கிய பாத்திரமேற்கின்றாள்.

நேர்த்தியான அட்டைப்படமும், வடிவமைப்பும் நூலை வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றது.

- ரேவா

நன்றி - நூலகத்திட்டம்



# மசாஜ் நிலையங்களில் பெண்கள்: நான் ஏன் இத்தொழிலுக்கு வந்தேன்?



-ரத்னா

" மசாஜ் சுகாதார முறையானது, சுமார் 3000 வருடங்களக்கு முன்னர் சீனாவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்க வைத்தியரான ஹிப்போக்கிரட்டீசும் இந்த முறையைப் பயன்படுத்தியுள்ளார். 19ம் நூற்றாண்டில் ஹென்ரிக்லிங் என்பவரும் சிகிச்சைக்காக இந்த வழிமுறையைப் பின்பற்றியுள்ளார்". (பிரிட்டானிக்கா அகராதி- 1992: 912)

கொழும்பு நகரை அண்மித்த பிரதேசங்களில் மட்டும் சுமார் நூற்றுக்கும் அதிகமான மசாஜ் நிலையங்கள் உள்ளன. அவை அமைந்துள்ள இடங்கள் ஒன்றும் இரகசியமானவை அல்ல.

இவை தவிர வடக்கில் நீர்கொழும்பு வரையிலும், ஹைலெவல் வீதியினூடு மஹரகம வரையிலும், காலி வீதியில் பாணந்துறை வரையிலும் இம் மசாஜ் நிலையங்கள் பரந்து பல்கிக் கிடக்கின்றன.

இவற்றில் விஞ்ஞான ரீதியில் மசாஜ் தொடர்பான விளக்கமளிப்புடன் தமது ஊழியர்களை பயிற்றுவித்து சேவையில் ஈடுபடுத்தும் மசாஜ் நிலையங்கள் அற்பம் எனலாம். மாறாக, மசாஜ் நிலையம் என்ற போர்வையில் பெண்களை வைத்து கீழ்த்தரமான வியாபாரத்தையே இவை மேற்கொள்கின்றன.

மசாஜ் கிளினிக்குகளில் பெண்களுடன் பாலியல் உறவு கொள்ள அனுமதியில்லை. இதனால் அவ்வுறவுகள் பாதுகாப்பான பாலியல் உறவாக (Safe Sex) உள்ளன என்ற அபிப்பிராயமும் உண்டு. எனினும், பல இடங்களில், பெருமளவு பணம் கொடுத்து அந்த அனுமதியைப் பெறுவதற்கும் தடை-யில்லை.

மசாஜ் என்ற நடத்தையின் காரணமாக பாலியல் நோய்களால் பீடிக்கப்படும் ஆபத்தும் குறைவு என்ற இந்த ஒரே ஒரு காரணத்தினால் பணம் படைத்த ஆண்கள் இவ்விடத்தில் அலாதியாக அதிகம் நடமாடுவதையும் காண முடிகின்றது. இதனால் இவ்விடத்துக்கு அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் பன்முக ஆதரவு கிடைக்கின்றது என்பதும் வெளிப்படை.

பெரும்பாலான நேரங்களில் அறையொன்றில் வரிசைக் கிரமமாக அமர்ந்திருக்கும் பெண்களிலிருந்து (பொதுவான இயல்பு) தான் தெரிவு செய்யும் பெண்ணின் கையில் அதிகளவு பணத்தைக் கொடுத்து, அவளின் மர்மஸ்-தானங்களைத் தொட்டு தமது வக்கிரங்-களைத் தீர்த்துக் கொள்ள ஆண்கள் அனுமதி பெற்றுக் கொள்கின்றனர்.

மசாஜ் "சேவையை" பெற்றுக் கொள்ள, ஒரு நாளைக்கு சுமார் 50-150 வ்ரையிலான நபர்கள் வருகை தருகில்றனர். இது ஒரு சராசரி மசாஜ் நிலையம் பற்றிய கணக்கெடுப்பு. இதன்படி மசாஜ் நிலைய உரிமை யாளருக்கு ரூ. 10,000 - 30,000 வரையில் இப் பெண்களால் வருமானம் உழைத்துக் கொடுக்கப்படுகின்றது. காலை 9.00 தொடக்கம் இரவு 7.00 மணிவரை இங்கு பெண்கள் கட்டாயம் "சேவை"யிலீடுபட வேண்டும். இவர்களுக்கு சனி, ஞாயிறு தின விடுமுறைகள் மறுக்கப்பட்டுள்ளன. பொதுவாக போயா தினம் மட்டுமே பொதுவிடுமுடுறையாகக் கிடைக்கும். பொதுவாக மசாஜ் கிளினிக்குகளில் 18-35 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களே அதிகம் தொழில் புரிகின்றனர். (பார்க்க அட்டவணை 01) இவர்களுக்கே நல்ல கிராக்கியும் நிலவுகின்றது. க.பொ.த சாதாரண தரக் கல்வியை முடித்துக் கொள்ளும் பின்தங்கிய கிராமப்புற பெண்களே இதில் தரகர்கள் மூலம் பெருமளவில் ஈடுபடுத்தப்படுகின்றனர். கண்டி, பதுளை, மகியங்கனை, இரத்தினபுரி, கதிர்காமம், குருணாகலை போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த பின்தங்கிய பிரதேசப் பெண்களை மசாஜ் நிலையங்களில் அதிகம் காண முடிகின்றது.

மசாஜ் நிலையங்களில் தொழில் புரியம் பல பெண்கள் தமது வாழ்நாளில் ஒரு தடவையேனும் தாம் பாலியல் வல்லுறவுக்குள்ளாகியதாக தெரிவிக்கின்றனர். அதனால் அவர்களிடம் சமூகத்திற்கு முன் காப்பாற்றிக் கொள்ள அவர்களிடம் எதுவும் இல்லை எனலாம்.

அவர்களில் ஒரு பெண் தான் ஏன் இத் தொழிலில் ஈடுபடுகிறேன் என்று பின்வருமாறு விளக்குகிறார். "எனக்கு படிப்பதற்கு நிறைய விரப்பம். ஆனால் வீட்டில் அதற்கான வசதி எனக்கில்லை. வசதி இல்லை என்பதற்காகப் படிப்பை விடவும் விரும்பவில்லை. எனவே உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி, கணிணி பயிற்சிநெறியை .மேற்கொள்ள பணம் உழைப்பதற்காகவே இத் தொழிலுக்கு வந்தேன். மற்றும்படி இத் தொழிலை விரும்பியல்ல என்கிறார். இப்பெண்கள் மிகவும் இரகசியமான முறையிலேயே இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்களது குடும்பத்தினர் இப்பெண்கள் நகரச் சூழலில் சிறந்த தொழிலை மேற்கொள்கின்றனர் அல்லது வெளி நாட்டிற்குச் சென்றுவிட்டனர் என்றே எண்ணியுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர். தமது வயது சென்ற பெற்றோருக்கு, கல்வி கற்கும் சகோதர சகோதரிகளுக்கு, தமது பிள்ளைகளுக்கு வாழ்க்கைக்கான ஒரு உந்துதலை இப் பெண்கள், தமது உடலை பல ஆண்கள் தொட அனுமதிப்பதன் மூலம் பெற்றுக் கொடுக்கின்றனர். பல ஆண்கள், மனைவிமாரின் விருப்பத்திற்கு மாறாக இவ்வாறான நிறுவனங்களில்அவர்களை ஒப்படைத்து விட்டும் செல்கின்றனர்.

தனி அறையில் நிர்வாணமான ஆணின் உடலை மசாஜ் செய்யும் பெண்கள் வேறும் பல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர். ரூ.200 ஐக் கொடுத்து பெண்களை ஒரு மணி நேரம் தமது பண்டமாக உபயோகித்துக் கொள்ளும் ஆண்களுக்கு, ஒரு போதும் அப்பெண்ணும் இரத்தத்தால், சதையால் உருவான உணர்ச்சி கொண்ட பெண் எனத் தோன்றுவதில்லை என அவர்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர். பெண்ணைப் பற்களால் கடித்துக் குதறி தமது வெறியைத் தீர்த்துக் கொள்ளும் ஆண்களுக்குக் குறைவில்லை. மசாஜ் நிலையங்களுக்கு "இச்சேவைக்காக" ஆண்களால் வழங்கப்படும் ரூ.200ல் ஒரு சதம் கூட இப்பெண்களுக்குக் கிடைப்பதில்லை. கிடைப்பதெல்லாம், தம்மை நரக வேதனைக்குட்படுத்திய வாடிக்கையாளர் தரும் "அன்பளிப்புகள்' மட்டுமே.

ஆனால், இந்நிறுவனத்துக்கு தொழில் புரிய வந்த ஒரு புதிய பெண், பல மாதங்களாக கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை தான் மசாஜ் கிளினிக்கில் ஓரிரு வாரங்களுக்குள் உழைத்து விடுவதாகக் குறிப்பிடுகின்றார். இங்கு தொழில் புரியும் சில "அழகிய" பெண்களுக்கு நாளாந்த வருமானமாக சில வேளைகளில் ரூ. 2000 வரையிலும் கிடைப்பதாகக் கூறினர்.

எனினும் இத் தொழிலில் மிக மோசமான வன்முறைகளை பொறுத்துக் கொள்ள வேண்டிய நிலையிலேயே இப் பெண்கள் உள்ளனர். அவ்வாறு எல்லை மீறிய பாலியல் வன்முறைக்கெதிராக குரல் கொடுக்கும் பெண்களை, அந்நிலையத்தில் சேவை புரியும் பிற பெண்களும், குண்டர்களும் மனிதாபி-மானமற்ற முறையில் தாக்குவதும் வழமையான நிகழ்வுகளாகும். இவ்வாறான சம்பவங்களின் போது வாய் பொத்தி மௌனிகளாக இருப்பதே நன்று என சம்பந்தப்பட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர். முதன் முதல் தமது மசாஜ் "சேவை" அனுபவத்தை ஒரு பெண் பின்வருமாறு தெரிவித்தார்." ..... அருவருப்பின் காரணமாக முதலிரு தினங்கள் வாந்தி எடுத்தேன். பின்னர், கிடைக்கும் பணத்தை கவனத்தில் கொண்டு உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டேன்".

இவ்வாறான நிறுவனங்களுக்கு தொழில் புரியவென பெண்களைக் கோரி பகிரங்கமாக பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியி டப்படுகின்றன. அத்துடன், இவ்வாறான நிறுவனங்களுக்கு பெண்களை வழங்கும் இடைத்தரகர்களும் உள்ளனர்.

மேலும், சமூக ரீதியான பல நெருக்கடிகளுக்கு அவர்கள் முகம் கொடுக்கின்றனர். குறிப்பாக வெளிப்புறச் சூழலில், பலதரப்பட்டவர்களின் எள்ளி நகையாடல்களுக்கு , பயமுறுத்தல்களுக்கு , கடத்தல்களுக்கு, பாலியல் வல்லுறவுகளுக்கு இவர்கள் உட்படுவதும் உண்டு. ("மசாஜ் நிலையத்திற்குள் புகுந்து பெண்களை கடத்தி பாலியல் வல்லுறவு"- என்ற லங்காதீப 1997-04-26 செய்தி ஒரு உதாரணம் .

அதே போல் அதிகப் பணத்தை வழங்கும் வாடிக்கையாளர்களுடன் உடல் உறவு கொள்ள நிர்ப்பந்தம் ஏற்படு-வதனால் பல பாலியல் நோய்களுக்கு உள்ளாக வேண்டியும் ஏற்படுகின்றது. அத்துடன், காலை தொடக்கம் மாலை வரை வெவ்வேறுபட்ட ஆண்களின் வன்மையான "உபசரிப்புகளுக்கும்" உள்ளாக வேண்டியுள்ளது. இது பெருத்த மன உழைச்சலைத் தோற்றுவிப்பதாகும் என பல பெண்கள் தெரிவிக்கின்றனர்.

தம்மை விட வயதில் குறைந்த பெண்களுடன் மசாஜ் என்ற போர்வையில் உறவாடுவதன் மூலம் ஆத்ம திருப்தியை இங்கு வரும் ஆண்கள் எதிர்பார்க்கின்றனர்.

பெண் உடல் பெண்களுக்-குரித்தானாலும், அதற்கான பெறுமதியை தீர்மானித்தல் என்பது அவர்கள் கையில் இல்லை. பெண்களை பாலியல் அடிமைகளாக, அவர்களது பாலியல் உழைப்பை சுரண்டும், பாலியல் உரிமைகளை மீறும் ஓர் பிரதான அமைப்பாக இந்த மசாஜ் நிலையங்கள் உள்ளன என்பது கண்கூடு. அதேபோல், பெண்களை பாலியல் பண்டங்களாக மாற்றும், ஆணாதிக்க சமூகத்தின் முன் பெண்களை நிர்வாணப்படுத்தி ஏலமிடும் ஓர் அமைப்பாக இந்நிலையங்கள் எவ்வித தடையுமின்றி செயற்படுகின்றன எனக் கூறினும் தவறில்லை.

ஆய்வு, தகவல் :-
இந்திக்க ருவன் ஹேவகே

குறிப்பிட்ட மசாஜ் நிலைமொன்றிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்

அட்டவணை - 01
சமூக பொருளாதார பின்னணி

| வயது | சேவையிலீடுபடுவோர் | சதவீதம் |
|---|---|---|
| 18-20 | 03 | 12 |
| 21-25 | 11 | 44 |
| 26-30 | 07 | 28 |
| 31-35 | 04 | 16 |

அட்டவணை-02
கல்வி மட்டம்

| வகுப்பு | சேவையிலீடுபடுவோர் | சதவீதம் |
|---|---|---|
| 0-05 | 04 | 16 |
| 6-10 | 08 | 32 |
| சா/த | 10 | 40 |
| உ/த | 02 | 08 |

அட்டவணை -03
திருமணம் .: திருமணமாகாதவர்

| | சேவையிலீடுபடுவோர் | சதவீதம் |
|---|---|---|
| திருமணமானவர் | 04 | 16 |
| திருமணமாகாதவர் | 07 | 28 |
| கணவனால் கைவிடப்பட்டவர்கள் | 08 | 32 |
| கணவனை இழந்தவர்கள் | 05 | 20 |
| விவாகரத்துப்பெற்றோர் | 01 | 04 |

அட்டவணை -04
மசாஜ் நிலையத்தில் சேர்ந்த விதம்

| | சேவையிலீடுபடுவோர் | சதவீதம் |
|---|---|---|
| பத்திரிகை விளம்பரம் | 08 | 32 |
| நண்பர்கள் | 05 | 20 |
| சுயவிருப்பம் | 01 | 04 |
| தரகர் | 05 | 20 |
| கணவன்/ பாதுகாவலர் | 02 | 08 |
| விபரம் கூறாதவர்கள் | | |

நன்றி - நூலகத்திட்டம்



# சமூகத்தின் எல்லையா தனிமனிதன்? தனிமனிதனின் எல்லையா சமூகம்?

*சரிநிகர்* இதழ் 167இல் "...சமூகம் என்பது தனிமனிதத் தொகுப்பின் பொதுமை. இப்பொதுமைக்கும் தனிமனிதத்வத்திற்குமான உறவாடலில் முரணில் பிறப்பது தான் சமூக இயக்கம். இதில் எதையும் சமூகத்தையும் சரி, தனிமனிதனையும் சரி, இரண்டிற்குமான உறவாடல் முரண் எதையும் மறுக்க இயலாது" என வெங்கட சாமிநாதன் சிவசேகரத்துக்கான பதிலில் "சமூகத் தேவைக்கு ஏன் இந்தக் குரங்குப் புத்தி?" என்ற தலைப்பில் விவாதிக்கின்றார்.

சரிநிகர் விவாதிக்கக் கோரிய தனிமனிதனுக்கும், சமூகத்துக்கும் இடையிலான உறவு குறித்த இயக்கம் தான் பாட்டாளி வர்க்கத்துக்கும், முதலாளிவர்க்கத்தும் இடையிலான விவாதமும், போராட்டமும் மட்டுமின்றி மனித வரலாற்றில் நிகழ்ந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாறுமாகும். இது சாதிக்குள், ஆணாதிக்கத்துக்குள் என எங்கும் அடிப்படையான பிரச்சினையாகும்.

சமூகம் என்பது தனிமனிதன் தொகுப்பு என்பது முதலாளித்துவத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். இதில் இருந்து தான் தனிநபர் தானாகத் திருந்தினால், மாறினால் உலகம் தலைகீழாக மாறிவிடும் என முதலாளித்துவ அறிஞர்கள் தொடக்கம் மதவாதிக்ள் ஈறாக புகட்டுகின்றார்கள். இன்று உலகமயமாதல் கூட தனிமனித முதன்மையை பறைசாற்றியே, அதன் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டே இச்சமூகத்தை சூறையாடுகின்றது. அதாவது சமூகத்தின் சுதந்திரம் என்பது தனிமனித சுதந்திரத்தின் தொகுப்பு என்பது தான் இந்த தனியுடைமை சமுதாயத்தின் உள்ளார்ந்த இயங்கியல் விதியாகும். மாறாக, பாட்டாளி வர்க்கம் சமூகத்தின் சுதந்திரத்தை மீறிய தனிமனித சுதந்திரத்தை ஏற்றுக்கொள்வதில்லை. தனிமனித சுதந்திரம் என்பது சமூக சுதந்திரத்தை மறுத்து இருப்பது தான் சமூக முரண்நிலையின் இருத்தலுக்கான அடிப்படையாகும். முரண் என்பது மனித வாழ்வை மறுப்பதில் கருக்கொள்கின்றது. இயற்கையான இயற்கையின் முரண்கள், மனித முரண்களை செயற்கையான மனித முரண்கள் ஏற்படாதவரை இயல்பான மனித இயற்கையின் சமூக ஐக்கியத்தில் பரஸ்பர உதவி மூலம் மேவமுடியும்.

இங்கு சுதந்திரம் என்பது என்ன எனப் பார்ப்போம். சுதந்திரம் என்ற கோரிக்கை சுதந்திரம் மறுக்கப்படும்போது மட்டும் யதார்த்தமாகின்றது. எல்லோருக்கும் சுதந்திரம் உள்ளபோது சுதந்திரம் கற்பிதமாகிவிடுகின்றது. ஒட்டுமொத்த சமூகம் சுதந்திரத்தை அடைகின்றபோது தனிமனித சுதந்திரம் அர்த்தம் இழந்து விடுகின்றது. ஆதிகாலத்தில் மனிதர்கள் எல்லோரும் சுதந்திரமாக இருந்தபோது சுதந்திரம் கேள்வியாகவில்லை. தனியுடமை சமூகம் உருவான போதுதான், தனிமனிதனை நோக்கியும், கோரியும் சுதந்திரங்கள், உரிமைகள் பற்றிய நிலைநாட்டல்கள், சூறையாடல்கள், விவாதங்கள் நிகழ்ந்தன. "தனிமனிதனைச்" சார்ந்து இத் தனியுடைமை சமூகம் இவற்றைப் பாதுகாக்க பின்நிற்கவில்லை.

எல்லா மனிதர்களும் தனிநபராக தனக்கும், சமூகத்துக்குமாக உழைக்கும்போது முதலாளி இல்லாது போகின்றான். சமூக உழைப்பை தனிமனித உழைப்பின் பொதுமையாகக் காட்டிய தனிமனித நலன்கள் தான் முதலாளித்துவ சூறையாடலின் அடிப்படை விதியாகும். இன்று உலகில் நவீன கண்டுபிடிப்புகள் மீதான வெறியுடன் கூடிய வேட்கை சமூகத்தை மறுத்த தனிமனிதனின் முதன்மையில் மக்களை கொள்ளையடிப்பதுதான், கண்டுபிடிப்புகளை தனிநபரின் கண்டுபிடிப்பாக காட்டுவதும், அவனின் திறமைக்கு பரிசளிப்பதும், மக்கள் மீது அக் கண்டுபிடிப்புக்கு வரி அறவிடுவதும் எல்லாம் சமூகத்தை நிராகரித்த தனிமனித சமூக அமைப்பின் சூறையாடல்கள்தான்.

ஆசிய மக்களின் நீண்ட சமூக வரலாற்றில் அம் மக்கள் தமது வாழ்வில் பயன்படுத்திய வேம்பு, மஞ்கள்... என நீண்ட அறிவியல் கண்டுபிடிப்புகள் இன்று சமூகத்தின் கையில் இருந்து பன்னாட்டு நிறுவனஞ் சார்ந்த தனிநபர் கண்டுபிடிப்பாக மாறியுள்ளமை இதனை நன்கு விளக்கும்!

இங்கு மனிதத்தின் தொடர்ச்சியின் இயங்கியலை மறுக்கும் தனிமனித அற்புதங்கள் தமது தனித் திறமைகளின் முன் உலகை மண்டியிடக் கோருகின்றன. இந்த வகையில் "பாரம்பரியமாக ஒரு மரபாக தொடரும் தொழில் திறன். இதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். இடையில் ஒரு கலைஞன் தோன்றிவிட்டால், அவனை மரபின் தொடர்ச்சியாக வரும் தொழிற்காரனாகத்தான் காணவேண்டும் என்கிறார் சிவசேகரம்" எனக் கூறி விமர்சிப்பதன் மூலம், மக்கள் பாரம்பரியமாக மருத்துவத்துக்கும் பல்வேறு மனித செயல்களில் பயன்படுத்திய பொருட்களை நவீன பன்னாட்டு ஆய்வு கூடங்களில் பகுத்தாராய்ந்து உள் கூறுகளில் எது குறித்த காரியத்துக்கு செயல் படுகின்றது என நிறுவுபவன் மக்களின் தொடர்ச்சியை மறுத்து, அதன் வழியில் இல்லை என மறுத்து தனது தனித்திறமையின் கண்டுபிடிப்பாக வானத்தில் இருந்து விழுந்ததாக சத்தியம் செய்யும் "டங்கல்" நிபந்தனைகளைத்தான் அச்சொட்டாக கலைத்துறையிலும் முன்வைக்கின்றார்கள் அதன் கோட்பாட்டுவாதிகள்.

கலைஞன் கலையின் தொடர்ச்சியில் தான் உருவாகின்றான். அது எல்லாத் தொழிலுக்கும் பொருந்தும். எது மனிதனுக்குத் தெரிகின்றதோ அதில் அவன் சராசரி நிபுணத்துவனாக இருக்கிறான். குறித்த ஒன்றின் சமூகத் தொடர்புகளையோ அல்லாது அதன் இயங்கும் முழுமையையோ புரிந்து கொள்ளும் ஒருவன் அப்போது சராசரி, எல்லையைத் தாண்டி நிபுணன் ஆகின்றான்.

மார்க்ஸ் மாக்சியத்தை நிறுவியது அவரின் தனிப்பட்ட தனித்திறமையால் அல்ல. மாறாக, பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தின் தொடர்ச்சியில் இருந்துதான் மார்க்சியத்தை அதன் முழுமையில் நிறுவினார். சமூகத்தை மீறிய படைப்பை, தனிநபர் சமூகத்துக்கு வெளியில் உன்னதமான மாயைகளில் எதையும் படைக்கமுடியாது. சமூகம் தான் படைப்பின் இயற்கையும் எல்லையுமாகும். சமூகம் இயற்கையின் எல்லைக்கு உட்பட்டதே. உலக வரலாறு மனித வரலாறாக எப்படி தவறாக இன்று விளக்கப்பட்டு இயற்கையின் வரலாறு மறுப்புக்கு உள்ளாக்கின்றதோ அவ்வாறு தான் மனித வரலாற்றை மறுத்த, அதன் தொடர்ச்சியை மறுத்த தனிமனித வரலாறுகளை முதன்மைபடுத்தலும் நடக்கிறது.

மனிதர் எல்லோரும் எல்லாவற்றையும் படைக்கும் ஆற்றல் கொண்டவர்களே. வேலைப் பிரிவினை படிப்படியாக சிலதை படைக்கும் ஆற்றலை இழக்க வைத்தால், எல்லோரும் எல்லாவற்றையும் படைக்கும் நிலைமையை இழக்கவைத்தது. முதலாளித்துவ இயந்திரமயமாதல் உடன் தொழில் புரட்சி மனிதர்களின் அற்புதமான படைப்புத் திறன்களை நலம் அடித்து ஒரு துறையில் மட்டும் இருந்த சிறப்புத் தகுதியைக் கூட தனது உயர்ந்த பட்ச சுரண்டலுக்கு இசைவாக்க இயந்திரத்துக்கு அடிமையாக்கியது. இயந்திரத்துக்கு இசைவாக மனிதன் உழைப்பதற்கு இசைவாக மனித ஆற்றல்கள் அழிக்கப்பட்டன. அவன் இயந்திரத்தின் உறுப்பாக மாற்றியபோது மனிதனின் முழு படைப்பாற்றலில் இருந்தும், ஒன்றின் மீதான தனித்திறமையை இழந்தான். இதைத்தான் வெ.சா. "ஃ பாக்டரி லேபரைத் தவிர" என கிண்டல் செய்கின்றார்.

தனித்திறமை என்பது ஆதியில் சில கூட்ட மக்களின் திறமையாக உருவாக வேலைப்பிரிவினை காரணமாக இருந்தது. எகிப்திய சமுதாயத்தின் உன்னதமான படைப்புக்கள் ஏற்பட காரணம் என்ன? நிலம் இலகுவான வகையில் தேவைகளைப் பூர்த்தி செய்த இயற்கையின் கொடை. எகிப்திய மக்கள் தனது தேவைக்காக உழைக்கும் காலத்தை குறைத்து மேலதிக உபரியை செய்யக்கூடிய இயற்கையுடன், அங்கு காணப்பட்ட கட்டாயமான வேலைப்பிரிவினை நுணுக்கமான படைப்பாற்றலை வழங்கியது. எகிப்தில் கட்டாய வேலைப் பிரிவினையை தாண்டி வேலையை தெரிந்து கொள்வது தண்டனைக்குரிய குற்றமாக சட்டங்கள் இருந்தன. இவைதான் செய்யும் தொழிலில் கலைத்தன்மையை அம்மக்களுக்கு அல்ல குறித்த தொழிலில் ஈடுபட்டோருக்கு வழங்கியது.

இந்திய வரலாற்றில் தொழில் சார்ந்து உருவான சாதிப்பிரிவு செய்யும் தொழிலில் புலமையையும், கலை நேர்த்தியையும் வழங்கியது. அடிமட்டசாதிகள் தமது உணவுக்கு உழைப்பது கூட தடை செய்யப்பட்டு உபரியை பயன்படுத்திய மேல்மட்ட ஆளும் சாதிப்பிரிவுகள், ஆளும் பீடங்கள் தமது சமுதாய நோக்கத்தின் வெளிப்பாடுகளை வாழ்வு மறுக்கப்பட்ட கலைஞர்களைக் கொண்டு சவுக்குகளின் உதவியால் வடித்தெடுத்தனர். சோழர் காலம், பொற்காலம் அல்ல இருண்ட காலமாகும். ஒடுக்கப்பட்ட மக்களின் மீதான உபரிகளை அதிகளவு சுரண்டிய காலமாகும். அதன் வெளிப்பாடுதான் இன்று அதன் மீது உரிமை கோரி காட்டும் படைப்புகளாகும். சமூகத்தின் கலைஞன் அங்கு சுதந்திரமாக தன் மீதான சாதிய, சுரண்டல் ஒடுக்குமுறையின் அவலத்தை சமூகம் சார்ந்த படைக்கும் சுதந்திரம் ஆளும் பிரிவுகளால் உயர்சாதிப் பிரிவுகளால் அனுமதிக்கப்படாத தாழ்த்தப்பட்ட மக்களின் இருண்டகாலமாகும். அதாவது இன்று எப்படி அம்பேத்கர் சிலை வைக்க அனுமதி மறுக்கப்பட்டு வன்முறை பரிசாக கொடுக்கப்படுகின்றதோ, அதுவே சோழர்காலத்தில் அந்த மக்களின் அதியுயர் எல்லையில் சாதி அடக்குமுறையூடாக சுரண்டியதன் கொடூரங்கள்தான் இந்த சிற்பத்தின் வரலாறுகள். சாதிவேலைப் பிரிவினையை அதிகம் சுரண்டி தமக்கு சேவகம் செய்யும் பார்ப்பனிய கலைகளையும், சுரண்டும் கலைகளையும் தமது வரலாற்றுச் சின்னங்களாக படைப்பித்தனர். இதற்கு பலியிட்ட மனிதங்கள் சோழ, பொற்காலங்களை மீட்பதால் மீளப் போவதில்லை. மாறாக, அந்த மக்கள், இதை சவுக்குகளின் முன் இரத்தத்தையும், வியர்வையையும் சிந்திய ஒடுக்கப்பட்ட மக்கள் தான் தமது சொந்த வரலாற்றின் ஊடாக மீட்டு எடுக்கவேண்டும். சோழ கலைகள் உண்மையில் இன்று இருக்கும் அந்த தனியுடமையின் அற்புதங்கள் அல்ல. அதாவது கிணறு தோண்டுபவனுக்கு அதன் உரிமையை மட்டுமல்ல, குடிக்க தண்ணீரும் மறுக்கப்பட்டு யாருக்கோ சொந்தமாகி பின் அதை உரிமையாக்கியவன் அல்லது தோண்டக்கோரியவன் மெச்சப்படுவது தான் சோழ கலைகள். மாறாக, அக்கலைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் கலைகள் என்பதையும், இவை அன்று சோழ பார்ப்பனிய, நிலப்பிரபுத்துவ நுகத்தடிக்குள், அதன் வக்கிரங்களை கலையாக்கிய வரலாற்றையும் மீட்க வேண்டியுள்ளது.

இதை மறுத்து சோழர் காலம் மிக உயர்ந்தது என்பது, பார்ப்பனியத்தையும் (கோட்பாட்டை), ஆதிக்க தனியுடமை சமூகத்தையும் பாதுகாக்கும். சமூக சுதந்திரத்தை தனிமனிதனின் சுதந்திரமாகக் காட்டுவதே இவ் அமைப்பின் கோட்பாடாக நீடிக்கின்றது.

**-சிறி, பிரான்ஸ்**

---

## ஈ:மம்

01.

சிவப்பில் கறுப்பு
அல்லது
மஞ்சளுஞ் சிவப்பும் அரைக்கு அரை கலந்து
தெளித்த வெள்ளை,
அன்றேல்-
மென்னீல நிறத்திற்கு கரை கறுப்பில்
எனப்
புள்ளிகள் கோலங்கள்
கோலங்கள் புள்ளிகள்.

ஒரு வண்ணத்துப் பூச்சியாய் இருந்தேன்.

காற்றில் நான் குதித்து நீந்திச் சிறகை
அசைக்க அசைக்கவே - வான் விரிந்து
ஆதி, அநாதி அற்றுப்
பரந்தது.

மகரந்தப் பொடியப்பிக் கால்கள் ஆறாலும்
பூக்களைச் சூலாக்கி
வர்ணம் வர்ணமாய் எனது கவிதைகளை எழுதினேன்.

நான் உண்டு கிறங்கிக் கவிபாடும் தேனின் லாகிரி பற்றி
காய்ச்சிய தேனுண்ணும் மானிடர் அறிவீரா?

நிலா
என் கண்ணொளிர்வில் தோற்று:
ரசமிழந்து போனதாய்ப் பொய் கூறிச்
சினந்து போட்டுடைத்த கண்ணாடிக் கீலங்களை-
நீங்கள் தாம் வெள்ளிகள் என்பீர்களே:
கண்ணாடிக் கீலங்களைப் பாருங்கள் உற்று
பதிந்த என் கண் ஒளியிலல்லோ அவையின்னும்
சுடருமென்பேன்.
விடுங்கள், உங்கள் ஆறறிவுக்கது எட்டா

ஒரு வண்ணத்துப் பூச்சியாய் நானிந்தேன்.

02.

பிறகு இது நேர்ந்தது -

எனது சிறகுகள் மங்கிச் சாயம் போகவும்,
போயவை பொடியாகிக் காற்றில் பறக்கவும்,
புள்ளிகள் ஒவ்வொன்றாய்க் கழன்று உதிரவும்
கடவது என்று சபித்தார் கடவுள்.
பூக்களில் வேப்பம் இலையரைத்துத் தடவினார்.
அமுதல்ல விடமென்றார்.
அநீதம் இழைத்தார்.

கால்கள் இரண்டுனக்குப் போதும்:
அவை போக நான்கினையும்,
உன் உணர் கொம்பு ஒரு சோடியையும்
உடைத்து
உலைக்கு அடுப்பெரி என்றது காலம்.

03.

இனியென்ன,
வண்ணத்துப் பூச்சியொன்றின ஆறாத ஆன்மா
பேயாகித் திரிவதாய் ஊர் பேசும்.
கவிபாடும் பேய் பற்றிக் கதை பரவும்.
இரவில்
வெளியிறங்கிச் சிறுநீர் கழிக்கப் பயத்தில்
படுக்கையை நனைப்பர் சிறார்.
வாழையிலை, தென்னோலை, கொல்லையில்
கொடியில் அசையும் காய்கிற ஆடை - இவையசைய
நானாவேன்.
அன்னையர் பயங்காட்டிச் சோறூட்ட என்னையிழுப்பர்.


04.

கொடுமை:
ஒரு வண்ணத்துப் பூச்சியாயிருந்து
செத்து மனிதனாதல் கொடுமை.
அதுவும்
ஈமத்தைக்
கடியான்கள் அரிக்கவென்று கௌவி
இழுத்துப் போக விட்டு அதை
மனிதக் கண்கொண்டு காணநேர்தல்
அதனிலுங் கொடுமை.

**19990405 இரவு11.10மணி**

நன்றி - நூலகத்திட்டம்





# பொறுப்பற்று அல்ல

சரிநிகர்168ஆவது இதழில் வாசகர் செ(ா)ல்லடி என்ற பகுதியில் "பொறுப்பற்ற எழுத்து" என்ற தலைப்பில் சுப்புக்குட்டி என்பவர் எழுதிய கடிதம் தொடர்பாக...

165ஆவது இதழில் வெளிவந்த "தமிழ் வரலாற்றாசிரியர்கள் சோரம் போன வர்களின் நீளும் பட்டியல்? என்ற எனது கட்டுரையில் ஜேம்ஸ் ரட்ணம் என்று குறிப்பிட வேண்டிய இடத்தில் ஈவ்லின் ரட்ணம் எனக் குறிப்பிட்டது எனது தவறு. இதைச் சுட்டிக்காட்டியதற்காக சுப்புக்குட்டிக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

எனது கட்டுரையில் தேவைகருதி பல தனிநபர்கள்பற்றி எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு குறிப்பிட்ட விடயத்தில் ஒரு சிலருக்கு மட்டும் தெரிந்த ஆனால் பலருக்குத் தெரிந்திராத உள்ளார்ந்த செய்திகளை (Inside Stories) எழுதும் போது பின்குறிப்பு எழுத முடியாத நிலை ஒரு கட்டுரையாளருக்கு ஏற்படுவது வழக்கம். ஆனால், அந்த விடயத்தில் பங்குபற்றிய சிலருக்கு அது பற்றி நன்கு தெரிந்திருக்கும். எனினும் வாய்திறப்ப தில்லை. எனது கட்டுரையில் ஊகங்களும், கேள்விப்பட்ட செய்திகளும் இருப்பதால் அது பொறுப்பற்ற எழுத்து என சுப்புக்குட்டி எழுதியிருந்தார். அவற்றை நியாயப்படுத்த ஒரு சிலராவது இருக்கத்தான் செய்வர். பொறுத்திருந்து பார்ப்போம். இனிமேலாவது ஏதாவது எழுதுகிறார்களா என்று.

கலாநிதி கா.இந்திரபாலா தனது Phd ஆய்வில் ஆனைக்கோட்டை பற்றி எதுவும் குறிப்பிட்டுள்ளதாக நான் எழுதவில்லை. கல்வெட்டுக்கள் இல்லாததால் யாழ்ப் பாணத்தின் பூர்வீக வரலாறு பற்றிய ஆய்வினை மேற்கொள்ளமுடியாது என அவர் ஏற்கெனவே பின்வாங்கி விட, யாழ்ப்பாணம் சுண்ணாம்புக்கல் பிரதேசமாக இருப்பதால், கல்வெட்டுக்கல் இருந்திருந்தாற் கூட புவிச்சரிதவியல் மாற்றங்களால் அழிந்திருக்க வாய்ப்புண்டு என்ற புதிய கருத்துடன் பொ. ரகுபதியின் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன என்றும், அது ஏற்கெனவே கலாநிதி கா. இந்திரபாலாவினால் முன்வைக்கப்பட்ட கருத்தை மறுதலிப்பதாக இருந்தது எனவுமே எழுதியிருந்தேன். ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சிக்கும் கலாநிதி கா. இந்திரபாலாவின் Phd ஆய்விற்கும் சம்பந்தமே இல்லை.

அதேவேளை ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட மோதிரத்திற்கு என்ன நடந்தது? இது வெறும் ஊகமோ, கேள்விக் கதையோ என்றால், விலைமதிப்பற்ற அந்த ஆதாரத்தை சுப்புக்குட்டியே எங்குள்ளது எனத்தேடித் தந்தால் பேருதவியாக இருக்கும்.

இவ்வாறான விடயங்கள் ஒரு சிலருக்காவது தெரிந்திருக்கும். என்பதாலேயே அதுபற்றி வாசகர்களுக்கு எழுதுமாறு எனது கட்டுரையிலேயே கேட்டிருந்தேன். அவற்றை நேர்மையாக பிரசுரிக்கும் திராணி சரிநிகருக்கு உண்டு.

கலாநிதி கா. இந்திரபாலா தனது பிற்காலத்து ஆய்வுகளில் ஏற்கெனவே இருந்த கருத்துக்களை மாற்றிக் கொண்டதைக் காண முடிகிறது என்று எழுதியிருந்தார் சுப்புக்குட்டி. (இவர் தனது இயற்பெயரைக் குறிப்பிடவே சங்கடப் படுகிறார் என ஊகிக்க வேண்டியுள்ளது.) ஆனாலும், "கி.பி. 13ஆம் நூற்றாண்டி லேயே யாழ்ப்பாணத்தில் மக்கள் குடியேறினர்" என்ற கருத்தையே சிங்கள வரலாற்றாசிரியர்கள் இன்றும் மேற்கோள் காட்டுகின்றனர். அவர் அன்று எழுதியது பொறுப்பற்ற எழுத்தா? அல்லது நடந்துவிட்ட வரலாற்று மோசடிகள் பற்றி வெளிக்கொணர்ந்த எனது எழுத்து பொறுப்பற்றதா? என்பதை மேலும் பலர் எழுதுவதன் மூலம் தான் தீர்மானிக்க முடியும்.

ஆனைக்கோட்டை மோதிரத்தைத் தேடுவோம், அதேபோல யாழ்ப்பாணத்தின் வரலாறு பற்றி எங்கெங்கு என்னென்ன குறிப்புக்கள் உண்டென்பதை சரிநிகருக் கூடாக வெளிக்கொணர்வோம். இதுகூட ஓர் அகழ்வாராய்ச்சியே. அந்த வகையில் ஒரு விவாதத்தைத் தொடக்கி வைத்த சுப்புக்குட்டிக்கும் எனது நன்றிகள்.

**விஜயன்**
**கொழும்பு**

# சாதி வெறி வேண்டாம் !

கண்டி மாவட்டத்தில் நான்கு தமிழ்ப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படவுள்ளன. கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். இராஜரட்னம் அவர்களின் அயராத முயற்சியால் கிடைத்த பெரு வெற்றியே என்று இதனைக் கூறலாம். அத்துடன் எஸ். இராஜரட்னம் அவர்கள் கண்டி மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதிலிருந்து மலையக மக்களின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறைகாட்டி வருகிறார் என்றும் பல பாடசாலைகளுக்கு கட்டிட, தளபாட, கணணி வசதிகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார். என்றும் அவருக்கு நல்ல பெயர் மலையகத்தில் நிலவிவருவது உண்மையே. இருந்த போதிலும் குறுகிய எண்ணங்களுக்காகவும், செல்வந்தர்களின் நட்புக்காகவும் மலை முகடுகளில் உயர்ந்து நிற்கும் சில பாடசாலைகளின் வளர்ச்சியைத் தடை செய்யும் முயச்சியிலும் அவர் ஈடுபடத் தயங்கவில்லை.

இவரது இந்த முயற்சி இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஸ்தாபக அங்கத்தவரும், முன்னாள் நாவலப்பிட்டிய உறுப்பினருமான மலையக காந்தி என்று அழைக்கப்பட்ட ஸ்ரீ.கே. இராஜலிங்கம் அவர்களால் மலையக மாணவர்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு எதிராகவே இடம்பெற்று வருகிறது.

இற்றைக்கு 67 வருடங்களுக்கு முன் 1932ம் ஆண்டு மலையக காந்தி இராஜலிங்கம் அவர்களால் உருவாக்கபட்டதே சரஸ்வதி மகா வித்தியாலயமாகும். நீண்ட வரலாற்றைக் ண்ட இப்பாடசாலை மகா வித்தியாலயம் என்ற அந்தஸ்தைப்பெற்று 30 வருடங்களுக்கு மேலாகிவிட்டது என்பதுடன் 1977ம் ஆண்டுக்கு பின் உயர்தர வகுப்புக்களையும் கொண்டு இயங்குகின்றது.

இன்று 1700க்கு மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருகிறார்கள். மலையகத்தில் காணப்படுகின்ற பழைய பாடசாலைகளில் இதுவும் ஒன்று.

அப்படியாயிருந்தும் இப்பாடசாலையின் முன்னேற்றத்தை தடுப்பதில் இவர் ஈடுபடுவது ஏன்? அதுவும் மலையக மாணவர்களின் கல்வியில் அக்கறைக் கொண்டவர் எனக்கருதப்படும் ஒருவர் இப்படிச் செய்வது ஏன்? காரணம் இதுதான்:

இப்பாடசாலையை உருவாக்கியவர் தாழ்த்தப்பட்ட சாதி வகுப்பைச் சேர்ந்த ஒருவர். அவரால் உருவாக்கப்பட்ட ஒரு பாடசாலையை புஸ்ஸல்லாவ பகுதியில் பெரிய பாடசாலையாக மிளிர்வதை பாராளுமன்ற உறுப்பினர் எஸ். இராஜரட்னம் அவர்களால் சகிக்க முடியவில்லை. இதன் காரணமாகவே திட்டமிட்டு இப்பாடசாலையின் வளர்ச்சியை தடைசெய்து வருகிறார் சந்தேகிக்க வைக்கின்றன அவரது நடவடிக்கைகள்.

முன்னாள் அதிபர் திருமதி பி. முருகேசு அவர்கள் உதவி கல்விப் பணிப்பாளரா பதவியுயர்வு பெற்று சென்ற பின்னர் சரஸ்வதி மகா வித்தியாலயம் ஒரு நல்ல அதிபரை வேண்டி நின்றது. அப்போது தகுதியுடைய பலர் இப்பாடசாலைக்கு அதிபராக வர முயற்சித்தார்கள். சரஸ்வதி மகா வித்தியாலயம் 1C தரத்தைக்கொண்ட ஒரு பாடசாலையாகும். பாடசாலை தரத்திற்கு பொருத்தமான அதிபரை நியமிப்பது மத்திய மாகாண கல்வி அமைச்சின் கடமையாகும். மத்திய கல்வி அமைச்சருக்கும் மாகாண உதவி கல்விப் பணிப்பாளர் தேசோமாயானந்தம் அவர்களுக்கும் சுமூகமான உறவு காணப்படவில்லை. இக்காலப்பகுதி முழுவதும் பாராளுமன்ற உறுப்பினர் இராஜரட்னம் அவர்களின் தயவிலேயே தேசோமாயானந்தம் வாழ்ந்தார். தனது இலக்கை அடைவதற்கு இராஜரட்னம் எம்.பி. சாதி அடிப்படையில் பாடசாலையின் நிர்வாகத்தை நடத்துவதற்கு தகுதியற்ற ஒருவரை அதிபராக நியமிக்கும்படி சிபாரிசு செய்து நியமனத்தையும் பெற்றுக் கொடுத்தார்.

1994ம் ஆண்டு டி.பி. விஜயதுங்கவின் ஆட்சியின்போது போனஸ் அடிப்படையில் அதாவது எந்தவொரு கல்வி தகைமையையோ சேவைகாலத்தையோ அடிப்படையாகக் கொள்ளாது தோட்ட பாடசாலையில் அதிபராக இருந்து போனஸ் அடிப்படையில் நகர அதிபரான ஒருவரை 1C பாடசாலையான சரஸ்வதி மகா வித்தியாலய அதிபராக நியமனம் பெற்றார்.

இந்த புதிய அதிபரின் வருகையோடு பாடசாலையின் வளர்ச்சியும் தடைப்பட ஆரம்பித்துவிட்டது. எம்.பி. இராஜரட்னமும் தனது இலக்கை அடைந்துவிட்டார். 94ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்த சிலரது ஆலோசனையின் படியே இது நடந்தது. அன்று பிரசாரம் செய்த ஆதரவாளர்கள் இன்று அவருக்கு எதிரான பிரசாரத்தை செய்கிறார்கள். இதற்கான காரணம் வேறுபட்டதாகும்.

இவ்வாறன தகுதி இல்லாத அதிபரை சாதி அடிப்படையிலேயே நியமித்தார். உயர்வகுப்பு மாணவர்களைக் கூட கட்டுப்படுத்தமுடியாத நிலையில் அவர் திண்டாடுகிறார். ஆசிரியர் குழாமில் 20க்கு மேற்பட்டவர்கள் கூடிய கல்வித்தகைமையும், சேவைக்காலத்தையும் இவரைவிட உயர்வான சம்பளத்தையும் பெறுவதனால் அவர்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஆளுமையும் இல்லமல்போய்விட்டது. இதனை பலர் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். இதற்கு இராஜரட்னம் அவர்கள் கூறுவது என்னவென்றால் "நல்லது செய்வாருனு நினைத்தேன் அவருக்கு முடியல" இநத வசனம் எதற்கு உதவப்போகிறது. நடக்க வேண்டியதை நடைமுறைபடுத்த வேண்டியது பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்.

இது எல்லாவற்றையும் விட 30 வருடங்களாக மகா வித்தியாலயமாகவும் 25 வருடங்களாக உயர்வகுப்புக்களைக் கொண்டு இயங்கும் இப்பாடசாலை அவரது குறுகிய நோக்கத்தின் காரணமாக தேசிய பாடசாலையாக மாற்றப்படுவதற்கு சிபாரிசு செய்யப்படவில்லை. மாறாக, மகா வித்தியாலயம் இவரது சிபாரிசின்பேரிலேயே தரமுயர்த்தப்பட்டதும் உயர் வகுப்பை ஆரம்பித்து மூன்று ஆண்டுகளைக்கூட பூர்த்தி செய்யாத ஒரு பாடசாலையின் பெயரை தேசிய பாடசாலையாக தரமுயர்த்த இவர் முயற்சி எடுத்து வருகிறார் இது தான். அனைவரையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது.

இ.தெ.கா. அதன் 50 வருட சேவையில் எத்தனையோ தடவை மலையக மக்களுக்கு துரோகம் செய்துள்ளது. சாதிய அடிப்படையில் இயங்குகின்றது என்பதை இந்த நூற்றாண்டை நிறைவுசெய்யும் வேளையிலும் மீள ஞாபகப்படுத்தி செல்வாதாகவே இந்த செயல் காணப்படுகின்றது.

நான்கு பாடசாலைகளை தேசிய பாடசாலையாக தரமுயர்த்த ராஜரட்னம் எடுத்த முயற்சியைப் பாராட்டத்தான் வேண்டும். அதற்காக உயர்வடைந்து செல்லும் ஒரு பாடசாலையை தன்னுடைய அல்லது தன்னை சார்ந்தவர்களின் சாதி வெறிக்காக பழிவாங்க நினைப்பது எந்த விதத்திலும் நியாய படுத்தமுடியாது!

**ஜீவிதன்**
**கண்டி**

# 'அரசியல்' உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் !

அரசாங்கம் அமுல்படுத்தியுள்ள புதிய கல்வித்திட்டத்தின் கீழ் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளவர்களில் பலர் நிர்வாக திறமையற்றவர்களாக காணப்படுகின்றனர். ஏனெனில், இவர்களில் பலர் "இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்திபெறாமையும், மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகளின் மூலம் அதிபர் பதவியினை பெற்றுக்கொண்டமையினாலும் இன்று கல்விப்பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளமையினால் கல்வி நிர்வாக சம்பந்த விடங்களில் இவர்களின் நடவடிக்கைகள் இந்த போசாக்காகவும் கவலைக்கிடமாகவும் உள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு வலயக் கல்விக்காரியலயத்தில் மூன்று முஸ்லிம் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் பிரதியமைச்சர் ஒருவர் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் கல்வி நிர்வாக சேவையில் சித்திபெறாதவர்கள் மட்டுமன்றி பட்டதாரிகளுமல்லர். மூவரில் ஒருவர் 17 வருடகால ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர். சென்ற பொதுத்தேர்தலின்போது குறித்த பிரதி அமைச்சரின் ஆதரவாளராக மாறினார். (முகா. ஆதரவாளராக அன்றி) ஒரு வருடத்துக்கு முன்னர் "லேக்ஹவுஸ்" நிருபர் பதவியினை பெரும் போராட்டத்திற்கு மத்தியில் பெற்றுக் கொண்டதினால் சில மூத்த பத்திரிகையாளர் போன்று இவரும் ஒரு செய்தி கூட எழுதாத பத்திரிகையாளர். இன்று இவரும் ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளர்.

இவர் சென்ற வருடம் க.பொ.த.(சா/த) பரிட்சை மேற்பார்வையாளராக சென்றபோது மாலையில் விநியோகிக்க வேண்டிய வினாத்தாள்களை காலையில் விநியோகித்ததினால் ஒழுக்காற்று விசாரணைக் குட்படுத்தப்பட்டுபரீட்சை வினாத்தள்களை திருத்துவதிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டார்.

இவரைப் போன்ற மிகுந்த அனுபவமுடைய ஒருவரை சிபார்சு செய்து அரசியல்ரீதியாக நியமனம் செய்த பிரதியமைச்சருக்கு வாயார மனதார வாழ்த்துக்களை தெரிவிக்க வேண்டும்.

21ம் நூற்றாண்டு அண்மிக்கும் இத்தருணத்தில் இவரைப்போன்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்களால் பெரும்சவால் ஒன்றையே மாணவர் சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் என்பதில் எவ்வித அச்சமுமில்லை. இன்று அரசியல் என்ற சாக்கடையினுள் மொத்தமாகவும், சில்லறையாகவும் வியாடாரம் நடாத்துபவர்கள் இவர்கள் போன்ற கல்வியோடு சம்பந்தப்பட்டவர்களே. ஏனெனில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வரும்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் அரசியல் பழிவாங்கப்பட்டோம் என்று விண்ணப்பித்து அதிபர் சேவை தரம் (1) பெற்றுக்கொள்கின்றனர். பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரும்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் மூலம் அரசியல் பழிவாங்கப்பட்டோம் என பல்லைக்காட்டுவார்கள். பாவம் இப்படிப்பட்ட கல்விமான்கள் நிலை இவர்களை "அரசியல் உதவிக்கல்விப் பணிப்பாளர்"-களாகவதைத்தவிர வேறுவழியில்லை.

**அப்துல்லாஹ்**
**மட்டக்களப்பு**

# எலும்பு விளைச்சல் பிரமாதம் !

"சரிநிகர்" இதழ் 167ல் யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் முகாமிட்டிருக்கும் வீடுகளுக்கு வாடகைப்பணம் செலுத்துவதாக பிரசுரித்திருக்கின்றீர்கள். ஒரு சிலருக்கு கொடுக்கலாம். அதுவும் நிச்சயம் கூறமுடியாது. பெரும்பாலானவருக்கு எவ்வித கொடுப்பனவும் இல்லை. வவுச்சரில் முத்திரை ஒட்டி கையொப்பம் வாங்குவதுடன் சரி.

உதாரணமாக எனது நண்பர் ஒருவரின் வீடு யாழ். மருத்துவமனைக்கு பின்பக்கம் ஷப்றா நிதி நிறுவனத்திற்கு அருகேயுள்ள ஒழுங்கையில் அமைந்துள்ளது. அங்கு இராணுவம் இருக்கின்றது. நண்பரிடமிருந்து முத்திரை ஒட்டி வவுச்சரில் கையொப்பம் வாங்குகிறார்கள். அவ்வளவு தான் ஆனால், அவர் இப்பொழுது கூறுகின்றார். தான் யாழ். மருத்துவமனை வீதியில் இருந்து தனது வீட்டைப் பார்த்த பொழுது தனது வீட்டு கதவுகள், கூரை ஓடுகளைக் காணவில்லையாம். எம்மவர்கள் சிலர் இராணுவத்திற்கு குட்டி, புட்டி, கிபீர் சப்ளை செய்து மேற்படி தளபாடங்களை விற்பனை செய்கிறார்கள் போலும்.

எனது நண்பர் கூறுகிறார். தனது வளவில் எலும்புவிளைச்சல் பிரமாதமாக இருக்குமாம். அது சரி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**அ.க.**
**யாழ்ப்பாணம்**

நன்றி - நூலகத்திட்டம்

Registred as a Newspaper in Sri Lanka.

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
- பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

# யாழ்ப்பாணம் : வகை தொகையற்ற கைதுகள்!

யாழ்.குடாநாட்டில் இப்போடிதல்லாம் வகை தொகையற்ற கைதுகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. கைது செய்யப்படுவதற்கான காரணங்களோ கைது செய்யப்படுபவர்கள் வைத்திருக்கப்படும் இடங்களோ பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உடனடியாகத் தெரிவிக்கப்படுவதில்லை. ஏப்ரல் மாதத்தில் மட்டும் 19 பேர் காரணம் எதுவும்கூறப்படாது கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் சிலர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் பின்னர் தெரிய வந்த போதும் இவர்கள் மீதான விசாரணைகள் நடைபெறுவதற்கோ இவர்கள் விடுவிக்கப்படுவதற்கோ எந்தச் சாத்தியக் கூறுகளோ தெரியவில்லை கைது செய்யப்பட்டவர்களது விபரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

இவை எமக்குக் கிடைத்த தகவல்கள்.ஆனால் தகவல் எதுவுமற்ற இன்னும் எத்தனையோ கைதுகள் நடைபெற்றிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | 99.04.03 | அரசரத்தினம் சுரேந்திரன் | கல்வியங்காடு |
| 2) | 99.04.03 | ஐயாத்துரை சேகர் | இருபாலை |
| 3) | 99.04.04 | செல்லையா செல்வநாதன் | ஏழாலை |
| 4) | 99.04.04 | சின்னத்துரை யோகராஜா | கோப்பாய் |
| 5) | 99.04.04 | சரவணமுத்து செல்வராஜா | நாகர்கோவில் |
| 6) | 99.04.05 | தில்லையம்பலம் திருச்செல்வம் | கல்வியங்காடு |
| 7) | 99.04.06 | விக்னேஸ்வரமூர்த்தி உதயசூரியன் | ஏழாலை |
| 8) | 99.04.07 | சிவசீலன் | மல்லாகம் |
| 9) | 99.04.07 | செல்வரத்தினம் தினேஸ்குமார் தாவடி | |
| 10) | 99.04.08 | சுப்ரமணியம் சசிகுமார் | ஏழாலை |
| 11) | 99.04.08 | நடராசா சங்கரநாதன் | சாவகச்சேரி |
| 12) | 99.04.08 | பெருமாள் துரைராஜா | மூளாய் |
| 13) | 99.04.10 | பிரான்ஸிஸ் ஜெயக்குமார் | யாழ்ப்பாணம் |
| 14) | 99.04.10 | சிவராசா சசிகுமார் | யாழ்ப்பாணம் |
| 15) | 99.04.10 | ஆரணி சந்திரன் | வசாவிளான் |
| 16) | 99.04.13 | கனகராசா | கைதடி |
| 17) | 99.04.13 | தர்மலிங்கம் புஸ்பதீபன் | யாழ்ப்பாணம் |
| 18) | 99.04.20 | நாராயணன் உதயச்சந்திரன் | ஏளாலை |
| 19) | 99.04.21 | அன்னலிங்கம் சசிகரன் | கந்தர்மடம் |

# யாழ். துரையப்பா விளையாட்டரங்குக் காட்சிகள்...

காட்சி ஒன்று- 26.03.99 : மாநகரசபை நகர சுத்தித் தொழிலாளர்கள் மலசலகூடக்குழியைத் தோண்ட முனைந்த போது மனிதப் புதைகுழியைக் கண்டு பிடிக்கிறார்கள்.

காட்சி இரண்டு- 06.04.99 : சட்ட வைத்திய அதிகாரி சகிதம் யாழ். நீதிவான் எஸ்.ஏ.இ.ஏகநாதன் சென்று பார்வையிடுகிறார். மறுநாளே புதைகுழிகளைத தோண்டுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

காட்சி மூன்று-07.04.99 : புதைகுழி தோண்டப்படுகிறது. ஒரு எலும்புக்கூடு, இரு கை எலும்புகள், கால் எலும்புகளட் இரண்டு உட்பட பத்தொன்பது சடலங்களின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்படுகிளன்றன.

காட்சி நான்கு- 08.04.99 : ஆறு எலும்புக் கூடுகள் மண்டை ஓடு ஒன்று பத்துப்பன்னிரண்டு வயதுக்கிடைப்பட்ட சிறு பிள்ளையின் எலும்புக் கூடு ஒன்று, பல்லுடன் சேர்ந்த ஒரு தாடை என்பன் கண்டெடுக்கப்படுகின்றன.

காட்சி ஐந்து- 09.04.99 :ஆறு எலும்புக் கூடுகள்,இரு தகடுகள், நீளக் காற்சட்டை ஒன்றின் கால்பகுதித் துண்டு. ரி.56 ரவைகள் ஐந்து என்பன் கண்டெடுக்கப்படுகின்றன.

காட்சி ஆறு- 10.04.99 : இரு குழந்தைகளின் எலும்புக் கூடுகளும், சிதைவுற்ற எலும்புக்கூட்டுத்தலை, முழுத் தலையுள்ள எலும்புக் கூடு,நான்கு சடலங்களின் எலும்புக்கூடுகள், தலைகள் என்பன கண்டெடுக்கப்பட்டன.

புதைகுழி மண்ணை சல்லடையிட்ட போது பித்தளைக்காப்புகள், மூன்று வெற்றுத் தோட்டாக்கள், சிறு கத்தி என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விசாரணை 14.05.99இல' தொடரும்,



மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளுள் ஒன்று,



மீட்டெடுக்கப்பட்ட மண்டை ஓடுகளுள் ஒன்று,

# இயக்கத் தொல்லை!

யாழ்ப்பாணம் கொட்டடி மீனாட்சியம்மன் வீதியைச் சேர்ந்த திருமதி பிறேம்குமார் ஜெயமுனி-தேவி (30) என்பவர் இராணுவத்-தினரும், புளொட் இயக்கதினரும் இரவில் தனது வீட்டிற்கு வந்து சோதனையிடப் போவதாகக்கூறி அடிக்கடி தொல்லை தருவதாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். இவரது கணவர் 1997ம்ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கபட்டவர். ஜெயமுனி தேவி தனிமையில் இருக்கும் நேரங்களிலேயே இவர்கள் சோதனையிடப்போவதாகக் கூறி தொல்லைத் தருவதாக் இவர் கூறியுள்ளார். இரவு 11 மணிக்-குப்பின்னரும், சிலவேளைகளில் இரண்டு மூன்று தடவையும் வந்து தொர்ல்லைக் கொடுப்பதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

எழவான்

## சட்ட உதவி

* அடிப்படை உரிமைகள்
* பயங்கரவாதத் தடைச்சட்டம்
* அவசரகாலச் சட்டம்
* ஏனைய சட்டப் பிரச்சினைகள்

பற்றிய அறிய விரும்புகிறீர்களா?

"மேர்ஜ்" நிறுவனத்தின் (இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்) சட்டக் கல்விக்கும் உதவிக்குமான செயற்திட்டத்தின் கீழ் இவை பற்றிய சட்டப்பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்க எண்ணியுள்ளோம்.

இடம்- சென் அந்தோனியார் ஆண்கள் மகா வித்தியாலய மண்டபம், கொழும்பு - 13.

காலம்- 1999ம் ஆண்டு மே 16ம் திகதி பி.ப. 3.00 மணி - பி.ப. 6.00மணிவரை

மொழி- தமிழ்
அனுமதி இலவசம்

சட்டத்தின் முன் யாவரும் சமன்

சட்டக்கல்விக்கும் உதவிக்குமான செயற்திட்டம்

'மேர்ஜ்'

19/4, 1/1, நாவல வீதி, நுகேகொடை.

தொலைபேசி: 814859

## சரிநிகரின் சந்தாதாரராகுங்கள்!

சரிநிகருக்கு சந்தாதாரர்களைச் சேர்க்கும் ரிக்கற்றுக்களின் முடிவுத்திகதி ஏப்ரல்30ம் திகதியிலிருந்து மே 31க்கு பிற்போடப்பட்டுள்ளது. பரவலாக விற்பனையாகும் இற்றிக்கட்டுக்களை மே 31க்கு முன்பதாகவாங்கி சந்தாதாரராகச் சேர்வதன் மூலம் 33 வீத விலைக்கழிவுச் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.ரிக்கட் கிடைக்காதவர்கள் கூட இச்சலுகையைப் பெற்றுக்கொள்ளமுடியும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் . ரூபா 200 க்கான காசோலை அல்லது காசுக்கட்டளையை **MIRJE** என்ற பெயருக்கு எழுதி அனுப்பி வைக்க வேண்டியது தான். அனுப்ப வேண்டிய முகவரி : விநியோக முகாமையாளர் . சரிநிகர் **19/4, 1/1,** நாவல வீதி, நுகேகொட.

சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர்

எங்கள் சரிநிகருக்கு உதவுவோம்!

சந்தாதாரராக சேர்ந்து கொள்வோம்!

ஓராண்டு சந்தா

ரூ 200 மட்டுமே!

மே 31 வரை 33% விசேட விலைக் கழிவு

சரிநிகரின் ஓராண்டு சந்தா

300 200

சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர் சரிநிகர்

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன் , இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03, அச்சப்பதிவு : பிறின்ற் இன், இல. 07, கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை.